இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 9 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 01 – வெள்ளிக்கிழமை 18 ஆகஸ்ட் 2023 – மதுரை 16 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 9 : Thiruvalluvar Year - 2054 - Aavani 01- Friday 18 August 2023 - Madurai 16+12 Pages ₹ 5.00

## கழக தென்மண்டல வாக்குச் சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - இன்று மீனவர்கள் மாநாட்டில் உரையாற்றுகிறார்!

## இராமநாதபுரம் வருகை தந்த முதல்வருக்கு வழிநெடுகிலும் எழுச்சி வரவேற்பு!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2023) மதுரை, திருப்பரங்குன்றம், சிலைமான் ஊராட்சியிலுள்ள அண்ணா மன்றத்தில் ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 90–வது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் மதுரை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் மு. மணிமாறன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

**இராமநாதபுரம், ஆக. 18-**

**தி.மு.க. தென் மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம் நேற்று ராமநாதபுரத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று மாலை கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

இன்று நடைபெறும் மீனவர் மாநாட்டில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

தி.மு.க.வில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் வாக்குச்சாவடி முகவர்கள், தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மாவட்டங்களை 5 மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டல வாரியாக வாக்குச்சாவடி முகவர்களுக்கு ஒரு நாள் பயிற்சிப் பாசறைக்கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி கடந்த ஜூலை 26ஆம் தேதி திருச்சியில் டெல்டா மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

### முதல்வர் சிறப்புரை!

இந்நிலையில், தி.மு.க. தென் மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம் ராமநாதபுரத்தில் நேற்று நடைபெற்றது. தேவிப்பட்டினம் சாலை, பேராவூர் என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தி.மு.கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டா லின் அவர்கள் கலந்துகொண்டு நேற்று மாலை சிறப்புரையாற்றினார்.

### 19 மாவட்ட வாக்குச் சாவடி முகவர்கள் பங்கேற்பு!

இக்கூட்டத்தில், இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் கிழக்கு, மேற்கு, தேனி வடக்கு, தெற்கு, மதுரை மாநகர், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, விருதுநகர் வடக்கு, தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, மேற்கு உள்ளிட்ட 19 கழக மாவட்டங்களின், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வருக்கு வரவேற்பு!

தி.மு.க. தென் மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறைக் கூட்டத்தில் பங்கேற்க ராமநாதபுரம் வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழிநெடுகிலும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மதுரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் டி.எம்.சவுந்திரராஜன் திருவுருவச் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதைத்தொடர்ந்து ராமநாதபுரத்தில் நேற்று நடைபெற்ற தென்மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பங்கேற்றார்.

### மீனவர்களுக்கு முதல்வர் நல உதவிகள்!

இதற்காக மதுரையில் இருந்து கார் மூலம் ராமநாதபுரம் சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு பொதுமக்கள் மற்றும் தி.மு.க நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பாச்சேத்தி, பார்த்திபனூர், பரமக்குடி, உள்ளிட்ட இடங்களில் மேள தாளம் முழங்க, கரகாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இன்று காலை 10 மணியளவில் மண்டபம் கலோனியல் பங்களா அருகில் நடைபெறும் மீனவர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பாக இலவச வீட்டுமனை பட்டா சுமார் 4184 பயனாளிகளுக்கு 24 கோடியே 26 லட்சத்தி 28 ஆயிரத்து 315 ரூபாய் மதிப்பீட்டிலும் அதனைத் தொடர்ந்து மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பாக மானியத்தில் சூறை மீன் படகு கட்டுதல் மற்றும் பி.எம். எம். எஸ்.ஒய். திட்டங்கள் கிசான் கடன் அட்டை, கடற்பாசி வளர்ப்பு மீனவர் நலவாரிய அட்டை 1299 நபர்களுக்கு, ஒன்பது கோடியே 92 லட்சத்து 80 ஆயிரத்து 794 ரூபாய் மதிப்பீட்டிலும், புதிய தொழில் முனைவோர் தொழில் மேம்பாட்டு திட்டம் மூலம் ஒரு பயனாளிக்கு 30 லட்சத்து 98 ஆயிரமும் மகளீர் சுய உதவி குழு கடன் கே.சி.சி.கடற்பாசி வளர்ப்பு கடன் 1152 பயனாளிகளுக்கு 5 கோடியே 43 லட்சத்து 75 ஆயிரம் மற்றும், கூட்டு பொறுப்பு குழு கடன் மகளிர் சுய உதவி குழு கடன், துயர் குறைப்பு நிதி, 608 பயனாளிகளுக்கு 30 கோடியே 82 லட்சத்து 51 ஆயிரம் மொத்தம் 70 கோடியே 76 லட்சத்து 32 ஆயிரத்து 609 ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

தொடர்ந்து மாநாட்டில் மீனவர்கள் சங்க நிர்வாகிகள் பேசிய பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

இந்த மாநாட்டில் கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீனவர் அணி நிர்வாகிகள், மீனவப் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

---

## அடிக்கல் நாட்டி 5 ஆண்டுகளுக்குப் பிறகு

# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானத்திற்கு டெண்டர்!

### தேர்தல் நெருங்குவதால் பா.ஜ.க. அரசின் திட்டமிட்ட அறிவிப்பா என எழும் விமர்சனங்கள்!

*சென்னை, ஆக.18-*

*மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானத்திற்கு அடிக்கல் நாட்டி, 5 ஆண்டுகள் கழித்து ஒன்றிய அரசு டெண்டர் வெளியிட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதால், அரசியல் ஆதாயத்திற்காக எய்ம்ஸ்மருத்துவமனைக்கான டெண்டரை ஒன்றியபா.ஜ.க. அரசு வெளியிட்டுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.*

*தமிழ்நாட்டில்எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என்று 2015ஆம் ஆண்டு பிப்ரவரி 28ஆம் தேதி ஒன்றிய அரசு அறிவித்தது. மதுரை மாவட்டம், தோப்பூரில் சுமார் 224.24 ஏக்கர் பரப்பளவில் ஆயிரத்து 264 கோடி ரூபாய் செலவில் எய்ம்ஸ் மருத்துவமனைஅமைக்க கடந்த2018ஜூனில்ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியது. 2015ம் ஆண்டு மதுரைஎய்ம்ஸ்அறிவிப்பு வெளியிடப்பட்டநிலையில், 2019ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் நெருங்கியநேரத்தில், பிரதமர் மோடி எய்ம்ஸ் மருத்துவமனைக்குஅடிக்கல் நாட்டினார்.*

*இந்தியாவில் உள்ள மருத்துவமனைகளில் முதன்மையானதாக கருதப்படும் ‘எய்ம்ஸ்’ மருத்துவமனை தமிழ்நாட்டிற்கு வருவதை அறிந்த மக்கள், தங்களுக்கு உயர்தர சிகிச்சை விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தனர்.*

*ஆனால், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.கஅரசுபாரபட்சம் காட்டியது. இந்தியா முழுவதும்மற்றமாநிலங்களில் அறிவிக்கப்பட்ட ‘எய்ம்ஸ்’மருத்துவமனைகளுக்கு ஒன்றிய அரசு நேரடியாக நிதி ஒதுக்கியது.*

*ஆனால், மதுரை ‘எய்ம்ஸ்’ மருத்துவமனைக்கு மட்டும் ஜப்பான் நாட்டின் ஜைக்கா நிறுவனத்திடம் கடன் கேட்டது. அந்த நிறுவனம், கடன் வழங்க ஒப்புக் கொண்டாலும், அதற்கான நடைமுறைகள்,ஆய்வுப்பணிகளுக்கு தாமதம் செய்தது.*

### அடிக்கல் நாட்டியதோடு நிற்கிறது!

*மதுரை‘எய்ம்ஸ்’மருத்துவமனையுடன்அறிவிக்கப்பட்ட, நாட்டின் பிற மருத்துவமனைகளின் கட்டுமானப்பணிகள் முடிந்து, அந்த மருத்துவமனைகள் செயல்பாட்டிற்கு வந்துவிட்ட நிலையில், 2022ஆம் ஆண்டில் திறக்கப்பட வேண்டிய மதுரை ‘எய்ம்ஸ்’ மருத்துவமனை மட்டுமே, பணிகள் எதுவுமே துவங்காமல், பிரதமர் மோடி அடிக்கல்நாட்டியதோடு நிற்கிறது. 45மாதங்களில் கட்டுமானப்பணிகள் நிறைவடையும் என அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் மோடி கூறிய நிலையில் மதுரை தோப்பூரில் ‘எய்ம்ஸ்’ ஒதுக்கிய224ஏக்கர்இடம் வெறும் பொட்டல்காடாககாட்சி அளிக்கிறது. அடிக்கல் நாட்டு விழாவில் நடப்பட்ட அந்த ஒற்றைசெங்கல்லைதவிர வேறு எந்த பணியையும் ஒன்றிய அரசு இதுவரை தொடங்காமல்உள்ளது. மேலும் இந்த ஒற்றை செங்கல்லுக்காகமட்டும் சுற்றுச்சுவரை அமைத்துள்ளது. இந்த இரண்டு வேலைகளைத் தவிர வேறு எந்த கட்டுமான பணிகளையும் ஒன்றிய அரசு தொடங்காமல் இருந்துவருகிறதுவெட்டவெளிச்சமாகியுள்ளது.*

### அரசியல் ஆதாயத்திற்காக கட்டுமான டெண்டர்!

*இதற்கு தமிழ்நாடு கடும்எதிர்ப்புதெரிவித்து வந்தாலும் ஒன்றிய அரசு எதைப்பற்றியும் கண்டு கொள்ளாமல் அலட்சியமாக இருந்து வருகிறது. சட்டமன்ற தேர்தலின் போது கூட அமைச்சர் உதயநிதிஸ்டாலின்பிரச்சாரத்தின் முக்கியமானதாக இருந்தது ஒற்றை செங்கல்தான். 2022ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வந்த பா.ஜ.க. தலைவர் ஜே.பி. நட்டா மதுரை எய்ம்ஸ் பணிகள் 95% முடிந்துவிட்டதாகக்கூறியது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. 95% வேலை முடிந்த எய்ம்ஸ் எங்கே? என அரசியல் கட்சித்தலைவர்கள்பலரும்கேள்விஎழுப்பினர். இந்நிலையில் பிரதமர் மோடியால் அடிக்கல் நாட்டி 5 வருடங்கள் ஆகியுள்ள நிலையில், நாடாளுமன்ற தேர்தலுக்கான தேதியும் நெருங்கிவிட்டது. இதனால் தேர்தல் பிரச்சாரங்களின் போது மதுரை எய்ம்ஸ் விவகாரத்தை தவிர்க்க ஒன்றிய பா.ஜ.க அரசு,*

### இதுநாள் வரை பேசிவந்தது பொய்!

*மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானத்திற்கு டெண்டர் வெளியிட்டுள்ளது.இதன்மூலம் ஒன்றிய அரசு இந்நாள் வரைபேசிவந்ததுபொய் என்பது வெட்டவெளிச்சமாகியுள்ளது. அதுவும் 2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் நெருங்குவதால், அரசியல் ஆதாயத்திற்காகவும், வெறும் கண்துடைப்பிற்காகவும் எய்ம்ஸ்மருத்துவமனைக்கான டெண்டரை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.*

---

# ஒன்றிய பா.ஜ.க. அறிவித்த புதிய ஏழுத் திட்டங்களில் பல கோடி ஊழல்!

## காங்கிரஸ் கடும் குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஆக.18-*

*ஆயுஷ்மான் பாரத் திட்டம், அயோத்தியா மேம்பாட்டு திட்டம், துவாரகா விரைவு சாலைத் திட்டம் உள்ளிட்ட 7 திட்டங்களில் பலகோடி ரூபாய் ஊழல் செய்யப்பட்டிருப்பது வெட்டவெளிச்சமாகியிருப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.*

*டெல்லியில்செய்தியாளர்களைச் சந்தித்த காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர்சுப்ரியாசிரினேட், பாரத்மாலா திட்டத்தில் கட்டுமானச் செலவு கிலோ மீட்டருக்கு 15 கோடியே37லட்சம்ரூபாயாகஇருக்கும்நிலையில், அதற்கு மாறாக கிலோ மீட்டருக்கு 32 கோடி ரூபாய்க்கும் மேல் தரப்பட்டிருப்பதாக சி.ஏ.ஜி. கூறியிருப்பதாக தெரிவித்தார்.*

*மேலும், துவாரகா எக்ஸ்பிரஸ் சாலை திட்டத்தில் ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்கு சாலை அமைக்க 18 கோடி ரூபாய்எனஇருந்தநிலையில்,250கோடிரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதாக சிஏஜி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.*

*நாட்டிலுள்ள 5 சுங்கச் சாவடிகளை தணிக்கை செய்யப்பட்டதில், அப்பாவி மக்களிடம் 132 கோடிரூபாய்முறைகேடு செய்யப்பட்டிருப்பதாக சிஏஜிகூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*இதேபோல் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் இறந்து போன மக்களின் பெயரில் சிகிச்சை அளிக்கப்பட்டதாக கூறி, பணம் முறைகேடு செய்யப்பட்டிருப்பதாகவும், மேலும்,அயோத்திமேம்பாட்டு திட்டத்திலும் முறைகேடு நடந்திருப்பதாக சிஏஜி தெரிவித்துள்ள என்றும் சுப்ரியா சிரினேட் கூறினார்.*

*இந்த முறைகேடுகள் குறித்துவிசாரணைநடத்தப்பட வேண்டும் என்ற சுப்ரியா சிரினேட், பிரதமர் மோடியும் மவுனத்தைகலைத்துஅதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.*



இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 18-08-2023

# ஜெயலலிதாவின் நாடகங்கள் 1

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு திடீரென்று ஜெயலலிதாமீது பாசம் வந்துள்ளது. எம்.ஜி.ஆர். பெயரை, பிரதமர் மோடி பயன்படுத்துவதும், ஜெயலலிதா பெயரை நிர்மலா சீதாராமன் உச்சரிப்பதும் அரசியல் என்பதை அனைவரும் அறிவார்கள். சட்டமன்றத்தில் ஜெயலலிதாவுக்கு நடந்ததாகச் சொல்லப்படுவது, ஜெயலலிதா திட்டமிட்டு உருவாக்கிய நாடகம் என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். இதுபோன்ற பல்வேறு நாடகங்களை ஜெயலலிதா நடத்தி இருக்கிறார்.

* "எம்.ஜி.ஆர். என்னைப் பார்த்து பொறாமைப்படுகிறார்" என்று ராஜீவ் காந்திக்கு கடிதம் எழுதியவர்தான் ஜெயலலிதா.

"The root cause of everything that is happening here is that the C.M. is terribly jealous of my popularity. He cannot stomach the fact that I have become so popular. So he is doing everything possible to eliminate me from the political scene and from public life. MGR himself, who does not want to give me due importance, does not want to induce me into the Cabinet.No one here can really dare to oppose him for without him they are Zeros" - என்பது ஜெயலலிதா எழுதிய கடிதத்தின் சாரம் ஆகும்.

**"மிகுந்த செல்வாக்குடன் நான் பிரபலம் அடைந்திருப்பதைப் பார்த்து முதலமைச்சர் (எம்.ஜி.ஆர்) மிகவும் பொறாமைப்படுகிறார். இதுதான் இங்கு நடைபெறும் ஒவ்வொரு செயலுக்கும் மூலக் காரணம். நான் மிகவும் பிரபலம் அடைந்துள்ளதை அவரால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. எனவே, அரசியலில் இருந்தும், பொதுவாழ்வில் இருந்தும் என்னை ஒழித்துக் கட்டத் தன்னால் முடிந்ததை எல்லாம் அவர் செய்து வருகிறார். எனக்கு உரிய முக்கியத்துவம் தர விரும்பாத எம்.ஜி.ஆர்., என்னை அமைச்சரவையில் சேர்க்கவும் விரும்பவில்லை. அவரை எதிர்க்க இங்கு யாருக்கும் தைரியமில்லை. ஏனென்றால் அவரில்லாவிட்டால் மற்றவர்கள் எல்லாம் பூஜ்யங்கள்" என்று சொன்னவர்தான் ஜெயலலிதா. இது அப்போதே 'மக்கள் குரல்' நாளிதழில் ஜெயலலிதாவின் அழகான கையெழுத்தில் வெளியாகி இருக்கிறது.**

★ இது எல்லாம் எம்.ஜி.ஆருக்கும் தெரியும். அதனால்தான், 'வேறு கட்சிக்குப் போவதற்கான வேலைகளை ஜெயலலிதா பார்த்து வருகிறார்' என்று 1984 அ.தி.மு.க. பொதுக்குழுவில் எம்.ஜி.ஆர். பேசினார். (ஆதாரம் 22.1.1985 'அண்ணா' நாளிதழ்)

★ தன்னைப் பார்த்து எம்.ஜி.ஆர். பொறாமைப்படுவதாகச் சொன்ன ஜெயலலிதாதான், எம்.ஜி.ஆர். மறைவுற்ற போது, 'உடன்கட்டை ஏறிவிடலாமா என்று யோசித்தேன்' என்றும் நாடகம் ஆடினார்.

★ எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு அவரது மனைவி ஜானகி முதலமைச்சர் ஆனார். ஜானகியை முதலமைச்சராக ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், அ.தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார் ஜெயலலிதா. 28.1.1988 அன்று முதலமைச்சர் ஜானகி அரசு தனது பெரும்பான்மையை நிரூபித்தாக வேண்டும். அன்றைய தினம் தமிழ்நாடு சட்டசபை வன்முறைக் களமாக மாற்றப்பட்டது. ஜெயலலிதா ஆதரவாளர்கள், மைக்குகளை வீசினார்கள். சோடா பாட்டிலே சபைக்குள் வந்தது. நாற்காலிகளை உடைத்தார்கள். இந்த வன்முறைக்குப் பிறகு ஜெயலலிதா நினைத்ததைப் போல ஜானகியின் ஆட்சி கலைக்கப்பட்டது.

★ 'ஜானகிதான் எம்.ஜி.ஆருக்கு மோரில் விஷத்தைக் கலந்தார்' என்றும், 'எம்.ஜி.ஆரின் மருத்துவச் செலவுக்காக 5 கோடி வசூலித்து விட்டார்' என்றும் அவதூறுச் செய்திகளை வீசினார் ஜெயலலிதா.

★ எம்.ஜி.ஆர். மரணத்துக்கு விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்று மனு கொடுத்தவர்தான் ஜெயலலிதா.

★ அந்தக் காலத்தில் போயஸ்கார்டன் வீட்டில் பால்கனியில் இருந்து பேசுவது ஜெயலலிதாவின் வழக்கம் ஆகும். 4.2.1988 அன்று பேசிய ஜெயலலிதா, "சில ஆண்டுகளுக்கு முன் ஒரு தொழிலதிபர் வீட்டில் வருமான வரிச் சோதனை நடத்தும் போது பல கோடி சிக்கியது. அது ஜானகிக்குச் சொந்தமானது என்று தெரிய வந்தது. ஆனால் ஒன்றுமறியாத பாப்பா மாதிரி அவர் பேசுவார். இந்த ஒன்றுமறியாத பாப்பாதான் நடிகை ஜெயந்தியின் வீட்டை வாங்கினார். நான் தான் எம்.ஜி.ஆருக்கே இதைச் சொன்னேன். அவர் அதிர்ச்சி அடைந்தார்" என்று குறிப்பிட்டு ஜானகியை அவமானப்படுத்தினார்.

★ எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் இருக்கும் ஒருவர், தான் சம்பாதித்த பணத்தை அவரது அப்பா சமாதியில் வைத்து பூசி விட்டார். அதனால் அந்த சமாதியை சி.பி.ஐ. தோண்ட வேண்டும் என்று பேட்டி கொடுத்தவர்தான் ஜெயலலிதா.

★ "மூப்பனார் நடத்திய கூட்டத்தை விட எனக்கு அதிகமான கூட்டம் வந்து இருக்கிறது. இதைக் கண்டு பொறாமை கொண்ட மூப்பனார், திட்டமிட்டு போலீஸைத் தூண்டி விட்டு எங்கள் தொண்டர்களைக் காயப்படுத்தி இருக்கிறார்" என்று சொன்னவரும் ஜெயலலிதாதான். (10.4.1988 மாலை மலர்)

★ திருச்சிக்குச் செல்லும் வழியில் ஜெயலலிதாவின் கார் மீது ஒரு பஸ் மோதியது. இது தொடர்பாக ஒரு பத்திரிக்கையாளர் கேட்ட போது, "என் கார்மீது ஆம்னி பஸ் மோதியது. அந்த பஸ் உரிமையாளர் ஆர்.எம்.வீரப்பனுக்கு நெருக்கமான நண்பர்" என்று சொன்னவர் ஜெயலலிதா. ('இல்லஸ்டிரேடட் வீக்லி' 1.5.1988)

★ 16.5. 1988 அன்று புதுக்கோட்டையில் பேசிய ஜெயலலிதா,

'என்னை ஒரு பெண் என்றும் பாராமல் அடித்து விரட்டவும், என் மீது திராவகம் வீசி ஒழித்துக் கட்டவும் ஜானகி திட்டமிட்டார்' என்று பேசினார். ஜேப்பியாரையும் அடியாட்களையும் ஏவி என்னை அடிக்கச் சொன்னார் என்று சொன்னார் ஜெயலலிதா. (மாலை முரசு 16.5.1988)

★ 1988ஆம் ஆண்டு இரண்டரைக் கோடி தேர்தல் நிதி வசூலித்திருப்பதாக தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். உடனே ஜெயலலிதா, 1.50 கோடி வசூலித்ததாக பொய் சொன்னதாகவும், உண்மையில் வசூலானது 40 லட்சம்தான் என்றும் அவரோடு இருந்த முன்னாள் அமைச்சரே பேட்டி கொடுத்தார். ஜெயலலிதாவின் உண்மை முகத்துக்கும் குணத்துக்கும் இது ஒரு உதாரணம்.

- தொடரும்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பின்னணிப் பாடகர் "கலைமாமணி டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, மதுரை, முனிச்சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள "கலைமாமணி டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையை நேற்று முன்தினம் (16.8.2023) திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி வி.இந்திராணி பொன்வசந்த், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பூமிநாதன், கோ.தளபதி, துணை மேயர் டி.நாகராஜன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ்.சங்கீதா, டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மதுரையில் பின்னணிப் பாடகர் – ''ஏழிசை மன்னர்''

# டி.எம்.சௌந்தரராஜன் திருவுருவச்சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

மதுரை, ஆக.18-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பின்னணிப் பாடகர் "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, மதுரை, முனிச்சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையை நேற்று முன்தினம் (16.8.2023) திறந்து வைத்தார்.

தமிழ் திரைப்பட பின்னணிப் பாடகர் "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்கள் 1923-ஆம் ஆண்டு மதுரையில் பிறந்தார்.தனது இளம் வயதிலேயே இசைப் பயிற்சி பெற்று 1950-ஆம் ஆண்டு முதல் அரை நூற்றாண்டு காலம் தமிழ்த் திரையுலகில் சிறப்புமிக்க பாடகராக மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்றுத் திகழ்ந்தார்.10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை பாடி தமிழ் நாட்டு மக்களால் டி.எம்.எஸ். என்று அழைக்கப்பட்டு அனைவரின் உள்ளங்களிலும் நீங்கா இடம் பிடித்தார்.

**கலைஞரால் "ஏழிசை மன்னர்" என்ற பட்டம் பெற்றவர்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "ஏழிசை மன்னர்" என்ற பட்டம் டி.எம்.சௌந்தரராஜன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.மேலும், 1974-75ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருதும், 2003-ஆம் ஆண்டு பத்மஸ்ரீ பட்டமும் பெற்றார்.திரைப் பாடல்கள் மட்டுமின்றி, ஏராளமான பக்திப் பாடல்களையும் பாடி தன் குரல் வளத்தால் உலகமெங்கும் உள்ள தமிழர்களின் வாழ்வோடு கலந்திருந்த டி.எம்.சௌந்தரராஜன் அவர்கள் 25.5.2013 அன்று மறைந்தார்.

பின்னணிப் பாடகர் "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் புகழுக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில், அவரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சென்னையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள மந்தைவெளி மேற்கு வட்டச் சாலைக்கு, "டி.எம்.சௌந்தரராஜன் சாலை" என்று 24.3.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பெயரிடப்பட்டது.மேலும், அவர் பாடிய புகழ்பெற்ற பாடல்களை நினைவு கூரும் வகையில் இன்னிசைக் கச்சேரியும் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் அன்றையதினம் நடைபெற்றது.

2023-24 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையில், பிரபல பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி அவரது புகழைச் சிறப்பிக்கும் வகையில் மதுரை மாநகரில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**டி.எம்.எஸ். குடும்பத்தினர் நன்றி!**

அந்த அறிவிப்பிற்கிணங்க, மதுரை, முனிச்சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்து, அங்கு வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்."கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்தமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி வி.இந்திராணி பொன்வசந்த், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பூமிநாதன், கோ.தளபதி, துணை மேயர் டி.நாகராஜன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ்.சங்கீதா, டி.எம்.சௌந்தரரராஜன் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கழக விவசாய அணி மாநில துணைச் செயலாளர்

# டி.எம்.அரியப்பன் புதல்வர் மணவிழா!

## முதல்வர் இல்லத்தில் நடைபெறுகிறது!

*சென்னை, ஆக.18 -*

*கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஒன்றியம் இராயக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த கழக விவசாய அணி மாநில துணைச் செயலாளர் டி.எம்.அரியப்பன், - சாந்தி அரியப்பன் புதல்வர் அ.அன்பானந்தம், தொட்டபூவந்தி ஊராட்சியைச் சேர்ந்த நினைவில் வாழும் ஜி.வெங்கடசாமி - ஜானகி ஆகியோரது புதல்வி வெ.சொர்ணப்பிரியா ஆகியோரது திருமணம் 20.8.2023 ஞாயிறு காலை 7.45 மணி அளவில் கழகத் தலைவர் இல்லத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைக்கிறார்.*

*கழக இளைஞர் அணிச் செயலாளரும் விளை யாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்கிறார்.*

*கழக பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் முன்னிலை வகிக்கிறார்.*

*இம்மணவிழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, க.பொன்முடி, நாடாளுமன்ற கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அ.இராசா எம்.பி.,, அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், ஆர்.எஸ். பாரதி, அன்பகம் கலை, ப.தாயகம்கவி, எஸ்.ஆஸ்டின், டி.கே.எஸ்.இளங்கோவன், பூச்சி முருகன், துறை முகம் காஜா, ஆர்.பத்மநாபன், என்.ஜெயக்குமார், கு.க.செல்வம், என்.ஆர்.இளங்கோ எம்.பி., கார்த்திக் மோகன், ஆர்.கிரிராஜன் எம்.பி., ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ., அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இம்மணவிழாவில் அமைச்சர்கள் எ.வ.வேலு, ஆர்.காந்தி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சு.முத்துசாமி, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ்பொய்யாமொழி, மு.பெ.சாமிநாதன், எஸ்.எஸ்.சிவசங்கர், கீதா ஜீவன், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தா.மோ.அன்பரசன், கே.ஆர்.பெரியகருப்பன், டி.ஆர்.பி,.ராஜா, செஞ்சி மஸ்தான், அரசுகொறடா கோவி.செழியன், பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி,*

*மாவட்டச் செயலாளர்கள் டி.மதியழகன், மயிலை த.வேலு, தடங்கம் சுப்பிரமணி, நே.சிற்றரசு, பி.பழனியப்பன், ஏ.பி.நந்தகுமார், காங்கிரஸ் எம்.பி.ஏ. செல்லக்குமார், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டி.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., டி.செங்குட்டுவன், இ.ஜி.சுகவனம், எம்.வி.வெற்றிச்செல்வன், மேயர் எஸ்.ஏ.சத்யா, ஆ. யுவராஜ், பி.எஸ்.சீனிவாசன், பி.முருகன், பி.விஜயகுமார், தா.சுகுமாரன், டேம் வெங்கடேசன், டி.சந்திரசேகர், சூடப்பட்டி சுப்பிரமணி, பி.டி.அன்பரசன், பி.எம்.முனிராஜ், எம்.பொன்னுசாமி, வெங்கடேசன், ஏ.பி.ரவி, ஏ.வேதவள்ளி, ஆர்.ஜெயபாலன் உள்ளிட்ட கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் வாழ்த்துகின்றனர்.*

*அறிவானந்தம் அரியப்பன் நன்றி கூறுகிறார்.*

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகை

# விண்ணப்பிக்க மேலும் மூன்று நாள் முகாம்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, ஆக.18-*

*கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில், இதுவரை விண்ணப்பிக்காதோர் விண்ணப்பிப்பதற்காக இன்று முதல் 3 நாட்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*

*தி.மு..க தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் மகளிர் உரிமை திட்டம் செப்டம்பர் 15ந் தேதி தொடங்கப்பட உள்ளது. இந்த திட்டத்தின் மூலம் ஒரு கோடி பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களது வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இந்த திட்டத்தில் விண்ணப்பிப்பதற்காக 2 கட்டங்களாக முகாம்கள் நடைபெற்றன. இதில் சுமார் 1 கோடியே 54 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு கைபேசி செயலி வழியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*இந்நிலையில் 2ஆம் கட்ட முகாம்களில் விண்ணப்பிக்க இயலாத நபர்களுக்காக 3 நாள்களுக்கு சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இன்று முதல் 3 நாட்கள் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட இருப்பதாகவும், இந்த முகாம்களில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளின் குடும்பத் தலைவிகள், முதியோர் ஒய்வூதியத் திட்டங்களில் ஒய்வூதியம் பெறும் குடும்பங்களில் உள்ள தகுதி வாய்ந்த மகளிர் மற்றும் ஏற்கெனவே முகாம்களில் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் வருகை புரிய இயலாத குடும்பத் தலைவிகள் விண்ணப்பங்களை பதிவு செய்யலாம் என்று தமிழ்நாடு அரசு கூறியுள்ளது.*

## முரசொலி மாறன் புகழ் போற்றுவோம்!

# முரசொலி மாறன் கருத்துகளை இளைய சமுதாயத்துக்குப் பயிற்றுவிப்போம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - வலைதளப்பதிவு!



மதுரை, ஆக. 18-

ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் பிறந்தநாளான நேற்று, மதுரையில் இருந்து விடுத்த வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "முரசொலி மாறன் அவர்களது புகழ் போற்றுவோம்! முரசொலி மாறன் அவர்களின் கருத்துகளை இளைய சமுதாயத்துக்குப் பயிற்றுவிப்போம்!" என்று உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 90வது பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தமது சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**நாளெல்லாம் நம்மை இயக்கிடும் நூற்றாண்டு நாயகர் தலைவர் கலைஞரின் மனச்சாட்சியென வாழ்ந்திட்ட முரசொலி மாறன் அவர்களது 90ஆவது பிறந்தநாள் இன்று!**

**மதுரை சிலைமானில் தலைவர் கலைஞர் அவர்களால் 1952இல் திறந்து வைக்கப் பட்ட கழக அலுவலகத்தில், மரியாதைக்குரிய முரசொலி மாறன் அவர்களது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினேன்.**

**கொள்கைக் கருவூலமான முரசொலி மாறன் அவர்கள் எழுதிய மாநில சுயாட்சி நூல் அனைவரும் படித்திட வேண்டிய ஒன்று!**

**முரசொலி மாறன் அவர்களது புகழ் போற்றுவோம்! அவரது கருத்துகளை இளைய சமுதாயத்துக்குப் பயிற்றுவிப்போம்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

திருப்பெரும்புதூர்

## பாக்ஸ்கான் ஆலையில் ஐபோன் உற்பத்தி தொடங்குகிறது!

சென்னை, ஆக.18 -

சென்னையை அடுத்துள்ள திருப்பெரும்பு தூரில் உற்பத்திக் கூடத்தை அமைத்துள்ள பாக்ஸ்கான் ஆலையுடன் ஆப்பிள் நிறுவனம் ஒப்பந்தம் செய்து ஐபோன் உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் ஐபோன்கள் இந்தியா மட்டுமல்லாது, உலகின் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. அதேசமயம் ஆப்பிள் நிறுவனத்தின் முக்கிய உற்பத்தி நிலையமாக உள்ள சீனாவில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக அதிக அளவிலான உற்பத்தி தடைப்பட்டிருக்கிறது. மேலும், இதில் பல்வேறு சிக்கல்களும் நிலவி வருகிறது. இவற்றை சரி செய்யும் விதமாக சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் அமைந்துள்ள பாக்ஸ்கான் ஆலையில் ஐபோன் உற்பத்தியை அதிகரிக்க ஆப்பிள் நிறுவனம் முடிவு செய்து இருக்கிறது. இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இந்தப் புதிய ஒப்பந்தத்தின் மூலம் சீனாவில் தயாரிக்கப்பட்டு, சில வாரங்கள் கழித்து பாக்ஸ்கான் ஆலையில் உருவாக்கப்படும் புதிய மாடல் ஐபோன்கள் அறிமுகப்படுத்தப்பட்ட உடனேயே பாக்ஸ்கான் ஆலையிலும் இனி உற்பத்தியை தொடங்க உள்ளது. இதன் மூலம் புதிய வகை ஐபோன்கள் உடனேயே இந்தியா பயனாளிகளின் பயன்பாட்டுக்கும் கொண்டு வரப்படும்.

மேலும், இதன் மூலம் தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கும் என்று கூறப்பட்டிரு க்கிறது. இது தொடர்பாக, தமிழ்நாடு அரசு பாக்ஸ்கான் மற்றும் ஆப்பிள் நிறுவனங்களுடன் கடந்த மாதம் ஆலோசனை நடத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

## காலத்தால் அழியாத பாடல்கள் பல பாடிய

# டி.எம்.எஸ். தமிழ் மக்களால் என்றென்றும் நினைவுகூரப்படுவார்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஆக. 18 –

"காலத்தால் அழியாத பாடல்கள் பல பாடிய டி.எம்.எஸ். தமிழ் மக்களால் என்றென்றும் நினைவு கூரப்படுவார்" என்று டி.எம்.சௌந்தரராஜனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் பதிவிட்டு புகழாரம் சூட்டியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது : –

தமிழ் சினிமாவை தனது காந்த குரலால் கட்டிப் போட்டு நாற்பது ஆண்டுகள் கோலோச்சிய டி.எம்.சௌந்தரராஜன் அவர்களது சிலையை மதுரையில் திறந்து வைத்தேன்.

24 வயதில் பாடத் துவங்கி, 11 மொழிகளில் 10 ஆயிரத்துக்கும் மேல் திரைப்பாடல்கள், 2500 பக்திப் பாடல்களைப் பாடிய அவர், பட்டினத்தார், அருணகிரிநாதர் போன்ற படங்களிலும் நடித்திருக்கிறார். டி.எம்.எஸ் அவர்கள் பாடிய பக்திப் பாடல்கள் இன்றுவரை தமிழ்நாட்டின் அனைத்துக் கோயில்களிலும் திருவிழாக்களிலும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

அவரது நூற்றாண்டு விழாவையொட்டி, சென்னையில் அவர் வாழ்ந்த வீடு அமைந்திருக்கும் மந்தைவெளி வெளிவட்டச் சாலைப் பகுதிக்கு 'டி.எம்.சௌந்தரராஜன் சாலை' எனப் பெயர் சூட்டினோம்.

"திரை இசை, மக்கள் இசை யாரும் அடையாத உயரத்தைப் பெற்றவர் டி.எம்.எஸ். 1950ஆம் ஆண்டு மந்திரிகுமாரி காலத்தில் இருந்து எனக்கு நண்பர். நடிகர்களுக்கு ஏற்ப குரலை மாற்றிப் பாடும் வித்தைக்காரர்" என முத்தமிழறிஞர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

கலைஞரின் வரிகளில், ஏ.ஆர். ரகுமான் இசையில் உருவான 'செம்மொழியான தமிழ்மொழியாம்' என்ற பாடலில், மற்ற இளம் பாடகர் களுடன் இணைந்து டி.எம்.எஸ். பாடியிருந்தார்.

காலத்தால் அழியாத பாடல்கள் பல பாடிய அவர் என்றென்றும் தமிழ் மக்களால் நினைவுகூரப்படுவார்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

---

# மாநில உரிமைகளுக்கு எதிரானது 'நீட்' தேர்வு!

## ஆளுநருக்கு மருத்துவர்கள் சங்கம் பதிலடி!

சென்னை, ஆக. 18 -

நீட் தேர்வு மாநில உரிமைகளுக்கும், கூட்டாட்சி கோட்பாட்டிற்கும் எதிரானது என சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மருத்துவர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கை:

ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நீட் தொடர்பாக , மாணவி ஒருவரின் தந்தை எழுப்பிய கேள்விக்கு , ஆளுநர் ஆர். என்.ரவி அளித்த பதில் விவாதப்பொருளாகியுள்ளது. `முடிவெடுக்கக் கூடிய இடத்தில் நான் இருந்தால் நீட் விலக்கு மசோதாவிற்கு ஒருபோதும் ஒப்புதல் அளிக்கமாட்டேன்' என அவர் கூறியுள்ளார். இது அரசியல் சட்டத்திற்கும், மாநில உரிமைகளுக்கும், கூட்டாட்சி கோட்பாட்டிற்கு எதிரானதாகும்.

ஆளுநர் கூறுவதுபோல், மருத்துவக் கல்வி வணிகத்தை நீட் தடுத்திடவில்லை. உண்மையில் நீட்டிற்கும் மருத்துவக் கல்வி வணிகத்திற்கும் தொடர்பில்லை. நீட் மருத்துவக் கல்லூரியில் நுழைவதற்கான ஒரு போட்டித்தேர்வு மட்டுமே. மருத்துவக் கல்வி வணிகமயமாவதற்கு அரசின் தனியார் மயமாக்கல் மற்றும் வணிக மயமாக்கல் கொள்கைகள்தான் காரணம். நியாயமான கட்டண நிர்ணயம், அதை கறாராக நடைமுறைப் படுத்துதல், கட்டாய நன்கொடையை தடுத்தல், அரசு மருத்துவக் கல்லூரிகளை அதிகப்படுத்துதல் போன்றவையே மருத்துவக் கல்வி வணிகமாவதை தடுக்கும். ஆளுநர் கூறுவது போல், `மருத்துவக் கல்வியில் நடைபெற்ற ரூபாய் 1000 கோடி வணிகத்தை' நீட் தடுத்துவிட வில்லை.

மாறாக ஒன்றிய அரசின் தனியார் மயமாக்கல் கொள்கை மருத்துவக் கல்வி வணிகத்தை தற்போது பல ஆயிரம் கோடியாக அதிகரிக்கவே காரணமாயுள்ளது. நீட் அரசுப்பள்ளி மாணவர்களுக்கும், அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கும், கிராமப்புற மாணவர்களுக்கும், தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கும், மாநில பாடத்திட்டத்தில் படித்த மாணவர்களுக் கும், முதல்தலை முறை மாண வர்களுக்கும், ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் எதிராக அமைந்தது. நீட் இல்லை எனில், தமிழ்நாட்டு மாணவர்களின் அறிவாற்றல் முடங்கி விடும் என ஆளுநர் கூறுவது, அறிவுத்தோற்றவியல் மற்றும் அறிவின் இயங்கியலுக்கு எதிரானது. நீட் இல்லாத பொழுது உருவாக்கப்பட்ட மருத்துவர்களும் திறமைமிக்கவர்களாகவே இருந்துள்ளனர் என்பதே வரலாறு.

---

# சூரியனுக்கு செயற்கைக்கோள் அனுப்புகிறது இஸ்ரோ!

பெங்களூரு, ஆக. 18-

சமீபத்தில் நிலவை ஆய்வு செய்ய சந்திரயான்3 விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பி உலக நாடுகளின் கவனத்தை இஸ்ரோ ஈர்த்துள்ளது. தற்போது சூரியனை ஆய்வு செய்ய ஆதித்யா L1 எனும் விண்கலத்தை விண்வெளிக்கு விரைவில் அனுப்ப இருக்கிறது.

நிலவில் உள்ள நீரிலிருந்து ஹைட்ரஜனை தனியாக எடுத்து எரிவாயுவாக பயன்படுத்தி அங்கிருந்து வேறு கிரகங்களுக்கு செல்லலாம். எனவே நிலவை ஆக்கிரமிக்க உலக நாடுகள் மீண்டும் போட்டிபோட தொடங்கியுள்ள நிலையில் தான் இந்தியா சந்திரயான்3 விண்கலத்தை ஏவியது. அதேபோல சூரியனை ஆய்வு செய்ய இஸ்ரோ விரைவில் ஆதித்யா L1 எனும் புதிய விண்கலத்தை அனுப்ப இருக்கிறது.

சூரியனிலிருந்து வெளிவரும் காந்த புயல் பூமியில் இருக்கும் அனைத்து மின்னணு சாதனங்களையும் செயலிழக்க வைத்துவிடும். இன்றைய தேதியில் நூற்றுக்கணக்கான அணு உலைகளை பாதுகாக்க மின்னணு சாதனங்கள்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அப்படி இருக்கையில் காந்த புயல் காரணமாக இது பாதிக்கப்பட்டால் பேரழிவு ஏற்படும். எனவே காந்த புயல்களை முன்கூட்டியே கணிக்கவும், சூரியனின் பல்வேறு அடுக்குகளை ஆய்வு செய்யவும் இந்த ஆதித்யா L1 எனும் புதிய விண்கலம் அனுப்பப் பட இருக்கிறது.

இந்தியா சார்பில் முதன் முதலில் சூரியனை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் அனுப்பப்படும் முதல் விண்கலம் இதுதான். எனவே உலக நாடுகள் இதை உன்னிப்பாக கவனித்து வருகின்றன. இது இந்த மாதம் இறுதியில் அல்லது அடுத்த மாதம் தொடக்கத்தில் விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ கூறியுள்ளது.

---

## அண்ணாவின் அசாமான்யத் தம்பி;

# கலைஞரின் மனசாட்சி முரசொலி மாறன்!



**ஆ**கஸ்ட் 17 அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் பிறந்த நன்னாள்!

செக்கச் சிவந்த திருமேனி, அகன்ற நெற்றி, அழகிய நேர்வகிடு, பரபரப்பான கண்கள், பட்டாசு போல் வெடித்துக் கிளம்பும் சொற்கோவை, தீட்சண்யம் செறிந்த அணுகு முறை-இவை அண்ணன் முரசொலி மாறன் அவர்களின் அடையாளங்கள்.

அவருடைய கரங்களில் அப்போது வெளிவந்த ஆங்கில நூல் எப்போதும் தவழும். ஆங்கில நூல்களைக் கற்பதன் வழியாக, மொழி அறிவையும், பொருளறிவையும், வாதத் திறனையும், ஆழமாகவும், விரிவாகவும் வளர்த்துக் கொள்ள இயலும்; அதன் மூலம், தாய் மொழியாம் தமிழுக்கும், தனிப் பெரும் அரசியல் இயக்கமாம் கழகத்திற்கும், பாங்கான பங்களிப்பை நல்கிடக் கூடும் என்ற நம்பிக்கை கொண்டிலங்கியவர் அவர். இந்த நன்னம்பிக்கை, அன்று இளைஞர்களிடையே பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பி விதைத்தது. கழகத்தில் அன்று வீறு நடை போட்ட ஆற்றல்மிகு இளைஞர் படை வரிசையில், முன்னணியில் இருந்து, அறிவொளி வீசியவர் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் என்றால் அது மிகை இல்லை.

**" மாறன் என்றால் என்ன சாமான்யமா - என் தம்பியல்லவோ!" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால், வியப்புடன் அழகுறப் போற்றிப் பாராட்டப் பட்டவர் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள். அத்தகைய பாராட்டைப் பெற்ற போது அவருக்கு இருபத்து மூன்றே வயதுதான். அந்த இளம் வயதிலேயே அவர் எழுதிய " ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?" என்ற அரிய, அழகிய நூலுக்கு, அன்புடன் வழங்கிய அணிந்துரையிலே தான் அண்ணா அவர்கள் அப்படிப் பாராட்டியிருக்கிறார்கள்.**

**அண்ணன் முரசொலி மாறன் அவர்களை, திராவிடப் பரிமேலழகர் அல்லது இளம்பூரணர் என்றழைப்பதற்குத் தேவையான அத்தனை தகுதிகளையும் ஆழமாகப் பெற்றிருந்தவர். திருக்குறளுக்கு உயர்ந்ததோர் உரை எழுதிடப் பரிமேலழகர் தோன்றினார். தொல்காப்பியத்திற்குத் தூயதோர் உரை எழுத வந்தார் இளம்பூரணர். அதைப்போல, கழகம் வகுத்த கொள்கைகளுக்கு - அது 'திராவிட நாடு ' என்றாலும், ' மாநில சுயாட்சி' என்றாலும் அதற்கு வடிவம் கொடுத்து, வாகான விளக்கங்களைத் தொகுத்து, நீடித்து நிலைப்பதற்கு ஏற்றபடி, அச்சியற்றி, ஆய்வறிக்கை வெளியிட்டவர் முரசொலி மாறன் அவர்களே ஆகும்.**

தி.மு.க., தொடக்க காலத்தில் " திராவிட நாடு திராவிடருக்கே !" என்ற பொருள் செறிந்த முழக்கத்தை முன்வைத்துப் பரப்புரை மேற்கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில், " காலந்தான் பல தேசிய இனங்களை அமைத்திருக்கிறது; அந்தக் காலந்தான் திராவிட தேசிய இனத்தை அமைத்து விடுதலை வாங்கித் தரப் போகிறது" என்று, பூகோளம் - சரித்திரம் - புள்ளி விவரம் எனும் மூன்று துறைகளிலும், அப்பழுக்கற்ற ஆதாரங்களைத் திரட்டி, அனைவர்க்கும் விளக்கத்தையும், தெளிவினையும் வழங்கிடவும், மாற்றுக்கருத்து கொண்டோரும் எதிர் கொள்ளத் தயங்கிடவுமான, இணையிலாக் கருத்துப் பெட்டகத்தைத் தமிழ் உலகத்திற்குத் தந்தவர் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள்!

அதைப்போலவே, பேரறிஞர் அண்ணா அவர்களின் காலத்தில் கருப் பெற்று; தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் காலத்தில், 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி ' என வலிமையாக உருப் பெற்று; ' திராவிட மாடல் ' ஆட்சி நடத்திவரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றளவும், இயன்ற வேளையெல்லாம் எடுத்தியம்பிவரும் " மாநில சுயாட்சி " எனும் மகத்தான இலட்சியத்திற்கு, காரண காரிய விளக்கங்களை, கற்றோரும், மற்றோரும், அதற்கான அடிப்படை நியாயங்களை ஏற்றுக் கொள்ளும் வண்ணம், அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் இந்திய அரசியல் உலகுக்கு இயற்றித் தந்த நூல் "மாநில சுயாட்சி " என்பதாகும்.

**அந்த நூல் குறித்து, தலைவர் கலைஞர் அவர்கள், " மாநில சுயாட்சி என்பது இந்தியாவைத் துண்டு துண்டாக வெட்டுவதற்குத் தூக்கப்படும் கொடுவாள் என்றும், ஒருமைப்பாட்டு உணர்வுக்கு எதிராக வைக்கப்படும் வேட்டு என்றும், தங்களைத் தாங்களே குழப்பிக் கொள்வோர் அல்லது பிறரைக் குழப்ப முனைவோர் ஆகிய இரு சாராருக்கும் அளிக்கப்பட்டுள்ள விடைதான் மாறன் எழுதியுள்ள இந்த விளக்க நூல்'' என்று எழுதியிருப்பது, மாநில சுயாட்சிக் கோரிக்கை நிலவும் காலம் முழுவதும் நிலைத்திருக்கும் கல்வெட்டாகும்.**

கழகத்தில் வேறு எவருக்கும் இல்லாத பெருமையும் ஈடற்ற அனுபவமும் மாறன் அவர்களுக்கு உண்டு. 36ஆண்டுகள் நாடாளுமன்றத்திலும், மாநிலங்களவையிலும் உறுப்பினராகப் பணியாற்றி இருக்கிறார். அண்ணா நின்று வென்ற தென் சென்னைத் தொகுதியில், அண்ணா அவர்களாலேயே வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர் அண்ணன் மாறன் அவர்கள். சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அமைச்சரவையிலும், தேவே கௌடா - குஜ்ரால் அமைச்சரவைகளிலும், வாஜ்பாய் அமைச்சரவையிலும் மாண்புக்குரிய அமைச்சராகப் பணியாற்றி, கழகத்திற்கும், கலைஞருக்கும், கன்னித்தமிழ் நாட்டுக்கும், இந்தியா எனும் நமது தேசத்திற்கும் அளப்பரிய மதிப்பீடுகளைத் தேடிக் கொணர்ந்து குவித்திருக்கிறார். நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய ஒவ்வொரு உரையையும் நாடும், ஏடும் கூர்ந்து கவனித்தன.

கலைஞர் பள்ளிப்பருவ மாணவராக இருந்தபோது, பள்ளி மாணவர் சங்க ஆண்டு விழாவில் " துருவன் " நாடகம் நடைபெற்றது. அதில் இந்திரனாக நடிக்க இருந்த மாணவருக்கு, நாடகத்தன்று திடீரெனக் கடுமையான காய்ச்சல் ஏற்பட, வேறு வழியின்றி, கலைஞர் அந்தப் பொறுப்பை நிறைவேற்றிட வேண்டிய நிலை நேர்ந்தது. அந்த நாடகத்தில் நடித்த மாறன் அவர்களைப் பற்றி கலைஞர், தமது " நெஞ்சுக்கு நீதி " முதல் பாகத்தில் எழுதியிருப்பது வருமாறு:

**" அந்த நாடகத்தில் துருவனுடைய தம்பியாக நடித்த பால நடிகன் யார் தெரியுமா? என் கண்களின் கருமணியாய் விளங்குகின்ற செல்வ மருமகன் மாறன் தான். துருவனைப் பார்த்து, ' ஏய் துதுவா, நான் யார் தெரியுமா? எங்கப்பா மதியில் நீ உக்காதக் கூதாது! ' என்று பேசிய மழலை மொழியை நான் இன்னும் மறக்கவில்லை. "**

**அப்படி மழலை பேசிய மாறன் அவர்கள்தான், பின்னாளில் 'குல தெய்வம் ' என்ற திரைப்படத்திற்குக் கதை - வசனம் எழுதி, முரசொலி மாறன் என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து, அன்னையின் ஆணை, அன்பு எங்கே , தலை கொடுத்தான் தம்பி, சகோதரி, நல்ல தீர்ப்பு போன்ற திரைப் படங்களை எழுதினார்.**

சின்னஞ் சிறு பிராயத்தில், அப்படி மழலை பேசியவர்தான், பின்னாளில் ஒன்றிய அமைச்சராக, இந்தியாவின் பிரதிநிதியாக, ' தோஹா ' மாநாட்டில் கலந்து கொண்டு, வளர்ந்த நாடுகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி, அடுக்கடுக்கான வாதங்களை முன்வைத்து, இந்தியாவின் கோரிக்கையை வென்றெடுத்து, உலக நாடுகளில் வளர்ந்து வரும் நாடுகளின் வர்த்தகத்தைக் காப்பாற்றிக் கொடுத்தார் என்றால்; அந்தப் பெருமை முகட்டின் அருகில் கூட இதுவரை வேறெவரும் அடியெடுத்து வைத்தாரில்லை !

**அதனாலேதான் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் சாமான்யமானவர் இல்லை; கழகத்தின் அசாமான்யமான, அசகாய அறிவுச் சூரர்; இறுதிவரை கலைஞரின் இறவா - மறவா மனசாட்சி ! கலைஞரின் புகழ்ப் பெயர் வாழும் காலம்வரை, அவர் அருகிலேயே அவருடைய மனசாட்சி, உறங்காமல் விழித்திருக்கும்!**

●●●

**: கி.இராஜமாணிக்கம் :**

### சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவினர்

# நெல்லை மாவட்டத்தில் பல்வேறு திட்டப்பணிகளை ஆய்வு செய்தனர்!

## குழுத் தலைவர் க.அன்பழகன் தலைமை! மு.அப்துல்வகாப் - பி.எம்.சரவணன் முன்னிலை!

நெல்லை, ஆக.18 - நெல்லை மாவட்டத்தில் சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் அன்பழகன் (கும்பகோணம்) தலைமையில் குழு உறுப்பினர்கள் சந்திரன் (திருத்தணி) சிவக்குமார் (மயிலம்) பரந்தாமன் (எழும்பூர்) ராஜேஷ்குமார் (கிள்ளியூர்) ஜவாஹிருல்லா (பாபநாசம்) சட்டப்பேரவை செயலாளர் சீனிவாசன் ஆகியோர் அடங்கிய சட்ட பேரவை மதிப்பீட்டு குழுவினர், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வ காப் மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், ஆணையாளர் சிவகிருஷ்ணமூர்த்தி துணை மேயர் ராஜூ ஆகியோர் முன்னிலையில் நெல்லை மாவட்டத்தில் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து ஆய்வுப்பணி மேற்கொண்டனர்.

நெல்லை மாவட்டம் மேலப்பாளையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் அடிப்படை வசதிகள் மற்றும் போதுமான மருத்துவ வசதிகள் குறித்து சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் அன்பழகன் தலைமையிலான குழு உறுப்பினர்கள் பார்வையிட்டதோடு பாம்பு கடி, நாய்க்கடி உள்ளிட்ட சிகிச்சைக்கான மருந்துகள் இருப்பு குறித்து பார்வையிட்டார்கள்.

மேலும் இன்னுயிர் காப்போம்,நம்மை காக்கும் திட்டம் மற்றும் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் இதயம் காப்போம் மருத்துவப் பெட்டகங்களை ஆய்வு மேற்கொண்டு,சிகிச்சைக்காக வந்த நோயாளிகளிடம் மருத்துவ சிகிச்சை வழங்குவது குறித்து கேட்டறிந்தனர்.

தொடர்ந்து வண்ணாரப்பேட்டை தெற்கு புறவழிச்சாலை 4 வழி சாலை விரிவாக்கப் பணிக்காக கே.ஏ.ஹோட்டல் அருகில் பாலம் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டனர். குலவணிகர்புரத்தில் “தோழி” பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதியினையும் அவ்விடுதியில் பயோமெட்ரிக் முறையில் கதவு திறக்கப்படுவது குறித்து பார்வையிட்டு போதுமான இட வசதி உள்ளதா என்பதையும் பணி புரியும் மகளிர்களிடம் கேட்டறிந்தனர்.

பாளையங்கோட்டை ஏ.ஆர்.லைனில் உள்ள வணிகவரி இணை ஆணையர் அலுவலகத்தினை பார்வையிட்டு இணைய வழியாக ஒவ்வொரு சோதனை சாவடிகளில் சரக்கு போக்குவரத்து சரியான முறையில் செல்லும் நடைமுறைகள் குறித்து பார்வையிட்டனர்.அரசினர் கல்லூரி மாணவியர் ஆதிதிராவிட விடுதியினை நேரில் பார்வையிட்டு அங்கு மாணவிகளுக்காக தயாரிக்கப்படும் உணவின் தரம் குறித்தும்,சுகாதார முறைகள் கழிப்பிட வசதி,தங்கும் இடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இருப்பது குறித்தும் சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழுவினர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

தொடர்ந்து ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகத்தில் பத்திரப்பதிவு வந்தவர்களிடம் முறையாக பதிவுகள் மேற்கொள்ளப் படுகிறதா என்பது குறித்து கேட்டறிந்ததோடு,பத்திரப்பதிவு அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பாளையங்கோட்டை அரசு மருத்துவமனை மற்றும் பல்நோக்கு மருத்துவமனையினை பார்வையிட்டு சிகிச்சைக்காக வருபவர்களிடம் முறையான சிகிச்சைகள் அளிக்கப்படுவது குறித்தும் இருதய நோய் பிரிவு,சிறுநீரகப் பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறைகளை பார்வையிட்டனர். தொடர்ந்து பல்நோக்கு மருத்துவ மனையில் நாங்குநேரி கிராமம் பெருந்தெரு பகுதியில் உள்ள பள்ளி மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினையால் பாதிக்கப்பட்டு வெட்டுக்காயம் அடைந்து சிகிச்சை மேற்கொண்டு வரும் அண்ணன்,தங்கை இருவரையும் பார்வையிட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறியதோடு அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர்.மேலும் ரூபாய் 20 கோடி மதிப்பில் அது தீவிர சிகிச்சை பிரிவு கட்டுமான பணியினையும் பார்வையிட்டனர்.

ரெட்டியார்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கு அளிக்கப்படும் கல்வி கற்கும் முறை மற்றும் பள்ளிகளின் அடிப்படை வசதிகள் குறித்து பார்வையிட்டு கேட்டறிந்தனர்.

பின்னர் மேலப்பாளையம் ரயில்வே கேட் பகுதியில் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் அப்பகுதி மக்கள் தனியாக துணை சாலை அமைத்து தர கோரிக்கை மனு அளித்துள்ளார்கள். அக்கோரிக்கையினை அரசிற்கு பரிந்துரை செய்து அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதோடு நெல்லை மாவட்ட பொதுமக்களிடமிருந்து வரப்பட்டுள்ள மனுக்கள் மற்றும் கோரிக்கைகள் முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டு, பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் அன்பழகன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் செந்தில்குமார் மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) சுகன்யா, பொதுபணித்துறை செயற்பொறியாளர் பிரபு உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா: அமைப்புசாரா ஓட்டுநர் அணி சார்பில்

# தமிழ்நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாட முடிவு!

## டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. தலைமையில் - டி.செங்குட்டுவன் முன்னிலையில் நடந்த மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக. 18 - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு முழுவதும் நல உதவிகளுடன் சிறப்புடன் கொண்டாடுவது என தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (16.08.2023) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் மாநிலத் தலைவர்கள் டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

மாநிலச்செயலாளர் டி. செங்குட்டுவன் எம்.எல்.ஏ. அனைவரையும் வரவேற்று, கூட்டத்தின் நோக்கம் குறித்து எடுத்துரைத்தார்.

இதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :

திராவிட இயக்க தலைவர், நவீன தமிழ்நாட்டை கட்டமைத்த சிற்பி, அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களை உருவாக்கி, கோடிக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி சமூக பாதுகாப்பை வழங்கிய தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, 2024 ஜூன் மாதம் வரை கொண்டாடப்படவுள்ள நிலையில்,

கழகத்தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 05.08.2023 அன்று, நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை நமது அணியின் சார்பில், எவ்வாறு கொண்டாடுவது என அறிவுறுத்தியுள்ளார்.

அதனடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் உள்ள மாநகர, பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் பகுதிகளில் உள்ள அனைத்து வாகன நிறுத்தங்களிலும் (Stand) ‘தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணிக்கான” பெயர் பலகைகளை நிறுவி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை நிறுவி மலர் தூவி, ஏழை எளியோருக்கு நல உதவிகள், இனிப்புகள் வழங்கியும், திராவிட மாடல் முதல்வர் தளபதியார் அரசின் அரும் பெரும் சாதனைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க வேண்டும்.

மேற்படி நிகழ்வுகள் அனைத்தும், சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர், மாநகரம், பகுதி, நகரம், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற தலைவர்கள், கழக முன்னணியினர் கலந்துகொண்டு பெயர் பலகையை திறந்து வைத்து கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வகையில் சிறப்பாக மாதத்திற்கு 2 நிகழ்ச்சிகளை நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 2: அமைப்பு சாரா ஓட்டுநர் அணியை உருவாக்கித் தந்த தளபதியாருக்கு நன்றி!

ஓலா, ஊபர், ஸ்விக்கி, ஸொமாட்டோ வாகன பணியாளர்களுக்கு நலவாரியம் என அறிவித்த முதல்வருக்கு நன்றி!

இந்திய திருநாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமாக ‘தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணியை” உருவாக்கி தந்து அதன் பேரில் சுமார் 30 லட்சத்திற்கு மேற்பட்ட ஓட்டனர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்களுக்கு சமூக பாதுகாப்பையும், உருவாக்கி தந்து மேலும் 77வது சுதந்திர தின விழாவின் பேருரை நிகழ்த்திய போது, ஓலா, ஊபர், ஸ்விக்கி, ஸொமாட்டோ ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களின் நலன் கருதி தனி நலவராரியம் அமைத்து தந்த கழகத்தலைவர், தமிழக முதல்வர், தளபதியார் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சுமார் 65 தொழில்களில் பணியாற்றுகின்ற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு அவர்களது எதிர்கால வாழ்வு சிறக்கவும், சமூக பாதுகாப்பு கிடைத்திடவும் பல்வேறு நல காரியங்களை உருவாக்கி தந்தார்கள்.

கழகத்தலைவர், தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் சீரிய சிந்தனையில் உருவான ‘தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர்கள்” தமிழகத்தில் சுமார் 30 லட்சம் பேர் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கான எதிர்காலம் சிறக்கவும், சமூக பாதுகாப்பு கிடைக்கவும் நலவாரிய உதவிகளை சிரமமின்றி பெற்றிடவும் ‘அமைப்பு சாரா ஓட்டுநர்கள் நலவாரியம் ஒன்றை உருவாக்கி உதவிடுமாறு இக்கூட்டம் முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறது.

கழகத்தலைவர், முதல்வர் அவர்களின் சீரிய சிந்தனையால் உருவாக்கப்பட்ட ”தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணிக்கான மாநில நிர்வாகிகள், நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். தமிழகத்தில் உள்ள 72 கழக மாவட்டங்கள், 20 மாநகராட்சிகளுக்கான புதிய நிர்வாகிகள், மாவட்ட கழக செயலாளர்கள், பரிந்துரையோடு கழகத்தலைவர் அவர்களால் புதிதாக நியமனம் செய்யப்பட்டு புதிதாக பொறுப்பேற்கவுள்ளார்கள்.

புதிய மாவட்ட, மாநகர நிர்வாகிகளின் அறிமுககூட்டம், கழகத்தலைவர், தமிழக முதல்வர் தளபதியார் வசதிக்கேற்ப வழங்கும் தேதியில் அறிமுக கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்படுகிறது.

கழகத்தலைவர், தமிழக முதல்வர், தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறக்க நடத்திடும் வகையிலும், அறிமுகம் கூட்டம் முடித்தவுடன், பகுதி கழகம், நகர, ஒன்றிய, பேரூர் கழகங்களுக்கான அமைப்பு சாரா ஓட்டுனர் அணிக்கான நிர்வாகி கள் நியமித்தல், உறுப்பினர் சேர்க்கை மற்றும் அணிக்கான வளர்ச்சிப்பணிகள் குறித்து விவாதித்திட, கீழ்க்கண்டவாறு மாவட்டங்கள், மாநகரங்கள் அடங்கிய ஆலோசனைக் கூட்டங்கள் நடத்துவதெனவும், அதில் மாநில நிர்வாகிகள் கலந்து கொள்வதென தீர்மானிக்கப்படுகிறது.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஓட்டுநர் அணி மாநில தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் துணை செயலாளர்கள் வி.முத்துராஜன், கே.தினகரன், ஏ.ஆர்.டி.உதயசூரியன், எம்.சிவராஜ், ஏ.கே.பூபதி, எஸ்.செல்லத்துரை, எஸ்.ராம்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, அணியின் சார்பில் சிறப்பாக கொண்டாட வேண்டும் மற்றும் அணியின் சார்பில் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சி பணிகள், நிர்வாகிகள் நியமனம் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

### தி.மு.க. மீனவர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (இரண்டாவது பட்டியல்)

## தி.மு.க. மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மீனவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**மதுரை வடக்கு மாவட்டம்**

தலைவர் - கி.முனியாண்டி சங்கங்கோட்டை கிணற்றுத் தெரு, சோழவந்தான், மதுரை.

துணைதலைவர் - வி.அருண்குமார் 2972வது வார்டு, கள்வேலிபட்டி(அஞ்சல்), வாடிப்பட்டி, மதுரை

அமைப்பாளர் - **ந.கார்த்திக்ராஜா** 2/2, சின்னப்பட்டி, காஞ்சரம்பேட்டை அஞ்சல், மதுரை.

துணை அமைப்பாளர்கள் - வி. தமிழ்செல்வம் 222குலமங்கலம் மெயின் ரோடு, கீழப்பனங்காடி, மதுரை ம.பால்ராஜ் 2139 வெள்ளியங்குன்றம், அப்பன்திருப்பதி அஞ்சல், மதுரை மு. அர்ச்சுணன் 1171 குன்னத்தூர், களிமங்கலம் அஞ்சல், மதுரை கண்ணன் திருப்பாலை பா.ஜெகநாதன் 9/2எ, லெட்சுமிபுரம், அழகர்கோவில் வழி, மதுரை. பா.ஜெயக்குமார் 1/144 வடக்குதெரு, புதுத்தாமரைப்பட்டி அஞ்சல், மதுரை. போ.ராமமூர்த்தி 1143, வடக்கு தெரு, புதுத்தாமரைப்பட்டி அஞ்சல், மதுரை ஆ.கிருஷ்ணன் 2228கீழநெடுங்குளம், வயலூர், மதுரை வே.சரவணக்குமார். 294 பள்ளிக்கூடம் தெரு, பொதும்பு (அஞ்சல்), மதுரை.

**விருதுநகர் தெற்கு மாவட்டம்**

தலைவர் - எஸ்.எம். பாண்டியராஜன் வடக்குப்பட்டி, பாலவனத்தம் 626 004.

துணைதலைவர் - எம்.எ.அன்பரசு 1/7281, மீனம்பட்டி வடக்கு 626 189

அமைப்பாளர் - **இரா.நவமணி** சர்ச் தெரு, மீனாட்சிபுரம் 626111.

துணை அமைப்பாளர்கள் - இரா.அய்யணன் 5/977, குல்லூர் சந்தை 626 001. பி.சொக்கலிங்கம் கலைஞர் காலனி, பாலையம்பட்டி 626112. பா.செல்வக்குமார் தேவர் தெரு, வைத்திலிங்காபுரம் 626154. பொ.ராஜாங்கம் சுரைக்காய்பட்டி 626149. பொ.வீரபாண்டியன் 3/131, தெற்குத்தெரு, சங்கரலிங்கபுரம், நல்லமநாயக்கன்பட்டி626102

**சேலம் மத்திய மாவட்டம்**

தலைவர் - எஸ் சையத் இக்பால் 92/ 59 ஜால்லால்கான் தெரு, கோட்டை, சேலம் 1

துணைதலைவர் - வ. சம்பத் 131, வெங்கடாசலம் காலனி சேலம் - 3.

அமைப்பாளர் - **மா. சீனிவாசன்** 29 ஏ.சி கோபால் தெரு, கள்ளக்குறிச்சி, சேலம் 8

துணை அமைப்பாளர்கள் - ப. பாலு காமராஜ் நகர், கரும்பாலை, வெள்ளக்கல்பட்டி, ஓமலூர், சேலம். ப. குமார் தாசநாயக்கன்பட்டி, பூமிநாயக்கன்பட்டி சேலம் பெ. சசிகுமார் 125 A ,பழைய காலனி, பி. நல்லா கவுண்டம்பட்டி ஓமலூர், சேலம் - 4. ம. சேகர் டி 12 பெரியார் நகர், செவ்வாபேட்டை, சேலம் 2 ஏ. ஈஸ்வரன் 290 அண்ணாநகர், 2வது குறுக்கு தெரு, சன்னியாசிகுண்டு, சேலம் - 15.

**சேலம் மாநகரம்**

தலைவர் - எஸ். அருணாச்சலம் 17 கருங்கல்பட்டி, எக்ஸ்டென்ஷன் தெரு, குகை ,சேலம் 6.

துணைதலைவர் - ஆர். பாபு 11/5 ,2 கிழக்குத் தெரு, கருங்கல்பட்டி, குகை, சேலம்.

அமைப்பாளர் - **ஏ. நசீர் அகமது** 14/1, பாலாஜி நகர், 4வது கிராஸ், அம்மாபேட்டை, சேலம் 3.

துணை அமைப்பாளர்கள் - எ. ஜஃபர்உசேன் 69, துபால் அஹமத் தெரு, கோட்டை, சேலம் 1. எம். செந்தில்நாதன் 59/1, ராஜாபிள்ளை காடு, கிச்சிப்பாளையம், சேலம் 6 கொலம்பஸ் 101 பந்தல் காளியம்மன் கோவில் தெரு, அன்னதானப்பட்டி, சேலம். பெ. சதாசிவம் சுந்தரர் தெரு, கிச்சிப்பாளையம், சேலம் - 15. எஸ். புனிதா 7சி பிளாக், டீஎன்எஸ்சி போர்டு எம் ஆர் சி II, ஆண்டிப்பட்டி ஏரி குகை,சேலம் - 6.

**திண்டுக்கல் மாநகரம்**

தலைவர் - இரா. ரவீந்திரன் எண். 42, கோவிந்தபிள்ளை சந்து, தெற்கு ரத வீதி, திண்டுக்கல்.

துணைத் தலைவர் - ஆ.மரியராஜ் குருசாமிஆசாரி சந்து, நாகல்நகர், திண்டுக்கல்.

அமைப்பாளர் - **நா. சிவக்குமார்** 36/885, கிழக்கு மெயின்ரோடு, குடைப்பாறைப்பட்டி, பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல்.

துணை அமைப்பாளர்கள் - சீ .நித்யானந்தம் 1/.ஏ, கிழக்கு இராமநாதபுரம், திண்டுக்கல். சி. பழனிவேல் மேட்டுப்பட்டி 10வது தெரு, திண்டுக்கல். சு. சாரதி 78/38, சௌராஸ்ட்ரா காலனி, நாகல்நகர், திண்டுக்கல். எஸ்.அந்தோணிராஜ் 67/43. சவேரியார்பாளையம், ஜீவாநகர், பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல். டி. அந்தோணிதாஸ் 120பி, கிழக்கு ஆரோக்கிய மாதா தெரு, சுக்கான் மேடு, திண்டுக்கல்.

**கோவை தெற்கு மாவட்டம்**

தலைவர் - தே. தனபாலகிருஷ்ணன் 2/175, சி. கோபாலபுரம், சிக்கராயபுரம், ஆர். பொன்னாபுரம்.

துணைத் தலைவர் - ஞான சேகரன் 5/9, இம்பிடிபாளையம், சொலவம்பாளையம், கிணத்துக்கடவு.

அமைப்பாளர் - **கு. செந்தில்குமார்.** 40, பூங்கா நகர், இருகூர், கோயம்புத்தூர்.

துணை அமைப்பாளர்கள் - செ. முருகேசன் 4/11 P.V. ராஜ வீதி, பீடம்பள்ளி (அஞ்சல்), கோயம்புத்தூர் 641016 நா. செந்தில்குமார் C7 சாரதாம்பாள் நகர், கண்ணம்பாளையம், சூலூர் 641402 நா. இராமசாமி 5/ 73,அவிநாசி ரோடு, கணியூர், சூலூர் 641659. ஆ. முத்துக்குமார் 2/ 84, பட்டியக்கவுண்டனூர், இராமபட்டிணம் (அஞ்சல்} பொள்ளாச்சி 642005 கா. சந்திர மோகன் 1/16A, பூராண்டாம்பாளையம், சுல்தான்பேட்டை, சூலூர் 641669

**புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்**

தலைவர் - சுப. செல்வம் கள்ளக்குறிச்சி மற்றும் அஞ்சல், ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை.

துணைத்தலைவர் - ஜி .சண்முகசுந்தரம் கண்ணனூர் மற்றும் அஞ்சல், திருமயம் தாலுகா,புதுக்கோட்டை.

அமைப்பாளர் - **இ .ஏ .பெரியகருப்பன்** பகவானேந்தல், அழிஞ்சியேந்தல் அஞ்சல், மணமேல்குடி தாலுகா, புதுக்கோட்டை

துணை அமைப்பாளர்கள் - கா. நாகராஜன் 98, காடை இடையாத்தூர், இடையாத்தூர் அஞ்சல், மணமேல்குடி ஒன்றியம், புதுக்கோட்டை அ. பழனிவேல் புதுக்குறிஞ்சி வயல், குளமங்கலம் அஞ்சல், திருமயம் தாலுகா,புதுக்கோட்டை. பெ.ரமேஷ் ஆலத்தூர் ,மீமிசல் அஞ்சல், ஆவுடையார்கோவில் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் சு.மதியழகன் கறம்பக்காடு இனரம், ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை. தமிழ்ச்செல்வன் அரசர்குளம் கீழ்பாதி, அறந்தாங்கி, புதுக்கோட்டை, துரைராஜ் அத்தாணி & அஞ்சல், அறந்தாங்கி தாலுகா, புதுக்கோட்டை. தனபாலன் ஊத்தம்பட்டி,சூரன் விடுதி அஞ்சல், ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை.

**கோவை மாநகர் மாவட்டம்**

தலைவர் - எம்.ஷாஜகான் 20எ, வின்சென்ட் ரோடு, மாலை முரசு எதிரில், கோட்டை, கோவை01.

துணைத்தலைவர் - அ.சந்திரன் 29/2. இந்திரா நகர், ஜெய்சாந்தி பின்புறம், சிங்காநல்லூர் கோவை5.

அமைப்பாளர் - **எஸ். கண்ணன்** போஸ்ட் ஆபிஸ் மேற்கு வீதி2, வரதராஜபுரம், கோவை15

துணை அமைப்பாளர்கள் - ஜி. ராஜேந்திரன் எல்149, டி.என்.எச். பி. காலனி, நேதாஜிபுரம், கோவை. முனுசாமி 47/28 காமாட்சி அம்மன் கோவில் வீதி, கள்ளிமடை, சிங்காநல்லூர், கோவை - 5. நல்லதம்பி 49, கிழக்கு தேவேந்திர விதி. நஞ்சுண்டாபுரம், கோவை பெ. ஆதிமூலம் 664. தியாகராய புது வீதி எண்2 கோவை - 1 சோமசுந்தரம் 10. சாமிநாதன் வீதி ரத்தினபுரி, கோவை 27.

**கோவை வடக்கு மாவட்டம்**

தலைவர் - அ.ஷாஜகான் 111, திருவள்ளுவர் நகர் குனியமுத்தூர், கோவை

துணைத்தலைவர் - ராஜேந்திரன் 115முத்துசாமி கவுண்டர் வீதி ஆலந்துறை, கோவை

அமைப்பாளர் - **ராமுகுட்டி (எ) ராமமூர்த்தி** 114காமராஜர் சாலை காரமடை, கோவை.

துணை அமைப்பாளர்கள் - ஜெ.ராஜசேகர் 33எ. ஆறுமுக உடையார் வீதி, தெலுங்குபாளையம், கோவை காசி விஸ்வநாதன் (எ) பாபு எப்/1, எஸ்.ஐ.வி. காலனி, ஆலங்கொம்பு, மேட்டுப்பாளையம் கோவை. செந்தில்குமார் பஜனை கோவில் வீதி மோளபாளையம், கோவை. அ.மாரிமுத்து 12, மேட்டுப்பாளையம் ரோடு நரசிம்மநாயக்கன்பாளையம், கோவை. க. ரவிக்குமார் எல். எஸ். புரம் வீதி 4 மேட்டுப்பாளையம்-641301.

**தென்காசி வடக்கு மாவட்டம்**

துணைத்தலைவர் - மு. ஹபி புல்லா 1எ, புதுமனை, 2வது தெரு, புளியங்குடி.

**திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - பி .சுப்பிரமணி எண். 101, பஜனை கோயில் தெரு, திருமலைநகர், பழவேற்காடு, பொன்னேரி 601205.

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - எ. ஆறுமுகம் 77, பொன் விசாலாட்சி கார்டன், திருவெண்ணெய்நல்லூர்

**காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - து. வெங்கடேசன் 59/01, மேட்டுத்தெரு, பொன்குமார் சென்னை 600127

**தர்மபுரி மேற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - மா. குமரன் 17/212 பாமாண்டி தெரு பாலக்கோடு

**கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - புதூர் பாபு (எ) பெ. மெல்கின் பாபு வீ.எண் : 15.13 புதூர், மண்டைக்காடு அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம். 629 252

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

தலைவர் - ஜ. நிக்கோலஸ் 12எ, பரதர் தெரு, பாளையங்கோட்டை.

துணைத்தலைவர் - எ,செல்வின் 6,பரதர் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

அமைப்பாளர் - **வ.அருள் இளங்கோ, பி.காம்.,** 1எ, நெல்லை நாயனார் தெரு, பாளையங்கோட்டை.

துணை அமைப்பாளர்கள் - டை.பிரதீப் 85/1,பிருந்தாவன் நகர் 2வது தெரு கே.டி.சி. நகர், பாளையங்கோட்டை. மு. ராஜ்குமார் 14சி/381, திருச்செந்தூர் ரோடு, பாளையங்கோட்டை. இ. மெல்கியூர் லெவின் 5/388, சத்யா தெரு, பாளையங்கோட்டை இன்பெண்ட் 4எ, கே.ச்சி நாயனார் தெரு, மிலிட்டரி லைன், பாளையங்கோட்டை, ல.நவின் 17,முனையாடுவார் நாயனார் தெரு, பாளையங்கோட்டை

**நாகை மாவட்டம்**

தலைவர் - மா. அஞ்சாபிள்ளை, எம்.ஜி.ஆர்.நகர், கோடியக்கரை வேதாரண்யம்.

துணைத்தலைவர் - வி.அ. சுந்தரவேலு 4/160, திடீர்குப்பம் அக்கரைப்பேட்டை கீழ்வேளூர் தாலுக்கா நாகை மாவட்டம்.

அமைப்பாளர் - **எஸ்.கே.ஜி.ஆ.சேகர்** இ13, டாடாநகர் நாகப்பட்டினம்.

துணை அமைப்பாளர் - ஜி.ராஜேந்திரன் 192.கீழப்பட்டினச்சேரி வடக்கு தெரு நாகூர், நாகப்பட்டினம். உசுரேஷ்குமார் மீனவர் காலனி விழுந்தமாவடி, கீழ்வேளூர் தாலுக்கா எம்.பி.மூர்த்தி 225, மீனவர் காலனி, வாணவன்மகாதேவி வேதாரண்யம் சு. இராஜேந்திரன் பனங்காட்டுத்தெரு, ஆறுக்காட்டுத்துறை, வேதாரண்யம் பெ. சுந்தராஜ் 54,அமிர்தா குடியிருப்பு சாமந்தாண்பேட்டை, நாகப்பட்டினம் எஸ்.குமார் மெயின்ரோடு, கீச்சாங்குப்பம், நாகப்பட்டினம் எஸ்.செல்வம் 66. புதிய நம்பியார் நகர், காடம்பாடி, நாகப்பட்டினம். பி.தேவராஜ் நடுத்தெரு செருதூர் மற்றும் அஞ்சல், கீழ்வேளூர் தாலுக்கா. த.சுப்பிரமணியன் 503, மீனவர் காலனி, திருப்பூண்டி காமேஸ்வரம், கீழ்வேளூர் ஆ.ராஜா 2/139. மீனவர் தெரு, புஸ்பவனம், வேதாரண்யம் தாலுக்கா ப. ஞானமணி ஒய்10. டாடா நகர் நாகப்பட்டினம் அ.தனபால் அண்ணாப்பேட்டை தெற்கு வேதாரண்யம் ஆர்.விஜயன் 30,வீரமுத்து படையாச்சி தெரு, நாகப்பட்டினம் பெரு. மதியழகன் சிவன் மேல வீதி நாகப்பட்டினம் சி.சுசிபாலன் 3/306, தெற்கு தெரு, அக்கரைப்பேட்டை.

**சென்னை மேற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - வி.ரஞ்சித் எண்.25/568, அயோத்தியா நகர், திருவல்லிக்கேணி, சென்னை600 005. கே. தேசப்பன் எண்.33, 5வது தெரு, நடுக்குப்பம். திருவல்லிக்கேணி, சென்னை600 005. பி.ராஜ்குமார் எண்.29/2, பைண்டியம்மன் கோயில், 2வது தெரு, மாட்டாங்குப்பம், சென்னை கு.குகவேலன் எண்.9/5, 2வது தெரு, நடுக்குப்பம், திருவல்லிக்கேணி. சென்னை 600 005

**திருச்சி வடக்கு மாவட்டம்**

தலைவர் - ஜி. சிவசங்கரன் 1/271, வடக்குத் தெரு, திருப்பைஞ்சீலி, மணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம்.

துணைத் தலைவர் - கே.எ. மணிகண்டன் 14/2, ஆண்டாபுரம் மெயின் ரோடு, காட்டுப்புத்தூர் அஞ்சல், தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம்.

அமைப்பாளர் - **வி. சரவணன்** 1/1181, சஞ்சீவிபுரம், மின்னத்தம்பட்டி அஞ்சல், தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - வி. குபேந்திரன் 1/34, நடுத் தெரு, பிள்ளாபாளையம் அஞ்சல், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம். வி. முனுசாமி (எ) கண்ணன் 20பி, சொக்கலிங்கபுரம் காலனி, சமயபுரம் அஞ்சல், மணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம். கே. சரவணன் மலையப்ப நகர் காலனி, ஊர்க்கரை அஞ்சல், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம். கே. சங்கர் கணேஷ் 36, கணபதி பாளையம், காட்டுப்புத்தூர் அஞ்சல், தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம். எம். நிக்சன் 8/41, கிளயநல்லூர் அஞ்சல், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம். எம். முகேஷ்குமார் 2/142, கூத்தூர் காலனி மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம்.

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - பா.தில்லையப்பன் (எ) ரமேஷ், 20ஏ, நாகூரார் தோட்டம், வீராம்பட்டினம், புதுச்சேரி605 009.

துணைத் தலைவர் - ம. குமணன், 32, நடுத் தெரு, புதுக்குப்பம், புதுச்சேரி605 007.

அமைப்பாளர் - **ந. கோதண்டபாணி,** 96, சிங்காரவேலர் வீதி, பெரியகாலாப்பட்டு, புதுச்சேரி - 605 014.

துணை அமைப்பாளர்கள் - த.சுப்புராயன், 9, காந்தி வீதி, முதல் தெரு, வீராம்பட்டினம், புதுச்சேரி7. இரா. பன்னீர்செல்வம், 101, அரவிந்தன் வீதி, பெரிய காலாப்பட்டு, புதுச்சேரி605 014. நா. மதிவாணன், 5, மேட்டுத் தெரு (வடக்கு), வீராம்பட்டினம், அரியாங்குப்பம், புதுச்சேரி7. பெ.விநாயகமூர்த்தி 12, முத்துமாரியம்மன் கோவில் தெரு, வம்பாகீரப்பாளையம், புதுச்சேரி1. வ.தங்கராசு, 30, செங்கேனியம்மன் கோவில் தெரு, சோலை நகர் தெற்கு, முத்தியால்பேட்டை, புதுச்சேரி. ம. வீரபத்திரன், 4, தில்லையம்மன் கோவில் வீதி, நல்லவாடு, புதுச்சேரி7. கா. மாரிமுத்து, ஓம்சக்தி கோவில் தெரு, பனித்திட்டு, ஏம்பலம், புதுச்சேரி607 402. ஏ.விஜயபாலு, 201, சுனாமி நகர், எம். புதுக்குப்பம், புதுச்சேரி607 402. தே. நிலவழகன், 65, அங்காளம்மன் கோவில் தெரு, வம்பாகீரப்பாளையம், புதுச்சேரி1. சு. ஜெயமூர்த்தி, 1, சிங்காரவேலர் மூன்றாம் வீதி, முத்தியால்பேட்டை, புதுச்சேரி-3.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 16-08-2023

**டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. மீனவர் அணி



சென்னை லீலா பேலஸில் நடைபெற்ற "சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் போட்டிக்கான அறிமுகக் கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போட்டிக்கான விளம்பர போஸ்டர்களை நேற்று முன்தினம் (16.08.2023) வெளியிட்டார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்திய மோட்டார் ஸ்போர்ட்ஸ் கிளப்களின் கூட்டமைப்பு தலைவர் அக்பர் இப்ராஹிம் மற்றும் RPPL தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான அகிலேஷ் ரெட்டி ஆகியோர் உடனுள்ளனர்.



கனடா நாட்டின் வின்னிபெக் நகரில் அண்மையில் நடைபெற்ற World Police Fire Games போட்டியில் தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த 15 காவலர்களும், தீயணைப்புத்துறையைச் சேர்ந்த 4 காவலர்களும் கலந்துகொண்டு பல்வேறு பிரிவுகளில் 21 தங்கம் 18 வெள்ளி 15 வெண்கல பதக்கங்களை வென்றுள்ளனர். மொத்தம் 54 பதக்கங்களை குவித்து தமிழ்நாட்டுக்கு பெருமை தேடித்தந்த காவல்துறை தீயணைப்புத்துறை வீரர் – வீராங்கனையர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில்

# சட்டப்பேரவைக்குழுவினர் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு!

### பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கினர்!

நெல்லை.ஆக.18-

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில் சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் க.அன்பழகன் தலைமையில் சட்டப்பேரவை குழு உறுப்பினர்கள் சந்திரன்(திருத்தணி) சிவக்குமார்(மயிலை) பரந்தாமன் (எழும்பூர்) ராஜேஷ் குமார் (கிள்ளியூர்) ஜவாஹிருல்லா(பாபநாசம்) சட்டப்பேரவை செயலாளர் சீனிவாசன், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையாளர் சிவ கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் க.அன்பழகன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க இன்றைய தினம் நெல்லை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் அரசு திட்ட பணியில், நடைபெற்று வரும் திட்டப்பணி குறித்து சட்டப்பேரவை மதிப்பீட்டு குழு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

அதனைத் தொடர்ந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மீன்வளம் மற்றும் மீனவர் நலன் வணிகவரிகள்,முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவு,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை,பொதுப்பணித்துறை, நீர்வளத்துறை,பள்ளிக்கல்வித்துறை சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மானிய கோரிக்கை குறித்தும், மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள் மற்றும் நடைபெற வேண்டிய பணிகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

நெல்லை மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசு துறை அலுவலர்கள் பல்வேறு கோரிக்கை வைத்துள்ளார்கள்.அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பணிகளின் திட்ட மதிப்பீடு மற்றும் கருத்துருவினை பெற்று,எங்கு பணிகள் தாமதமாக நடைபெறுகிறது என்பதை கண்டறிந்து அதனை சரி செய்து அப்பணிகள் விரைவாக முடித்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.மேலும் மாவட்டத்திற்கு தேவையான புதிய திட்டப் பணிகள் மேற்கொள்ளவும் அரசிற்கு பரிந்துரைக்கப்படும்.

இவ்வாறு சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் அன்பழகன் தெரிவித்தார்.

ஆய்வுக்கூட்டத்தில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தொழில் நுட்ப கல்வி உதவிக்காக தலா ரூபாய் 50,000 வீதம் 5 பயனாளிகளுக்கு ரூபாய் 2.50 இலட்சம்,பாளையங்கோட்டை வட்டம் தருவை கிராமத்தை சேர்ந்த 3 பயனாளிகளுக்கும், கங்கைகொண்டான் பகுதி கிராமத்தை சேர்ந்த 3பயனாளி களுக்கு இபட்டாக்களையும்,ரெட்டியார்பட்டி பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு பெறுவதற்கான ஆணைகள் 5 பயனாளிகளுக்கும்,சட்டப்பேரவை மதிப்பீட்டுக்குழு தலைவர் அன்பழகன் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் செந்தில்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு)சுகன்யா, மாவட்ட வருவாய் அலுவலர்(சிப்காட்) ரேவதி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சுரேஷ், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) வள்ளிக்கண்ணு, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அலுவலர் பென்னட்,மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் ரேவதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பால்ராஜ் தலைமை! கருணாநிதி சண்முகம் - இஸ்மாயில் - சோலை திருமேனி- மொய்தீன் மீமிசல் கருமுத்து முன்னிலை!

# பஹ்ரைன் நாட்டில் தலைவர் கலைஞர் ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி!

### குடந்தை ஆரீப் - எம்.முபாரக்-சர்புதீன்-ஆசாத் -சேகர்-ஆரூர் ஜாமல்-ஆபீத்அலி சிறப்புரை!

மனாமா, ஆக.18-

வளைகுடா நாடான பஹ்ரைன் நாட்டில், கடந்த வெள்ளிக்கிழமை அன்று, வெளிநாடு வாழ் தமிழ், இந்தியர்கள் சங்கத்தின் சார்பில்.

தலைவர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி கூட்டம் அவைத் தலைவர் பால்ராஜ் தலைமையிலும்,

கருணாநிதி சண்முகம்,மேலப்பூந்தை இஸ்மாயில், சோலை திருமேனி,

மொய்தீன் மீமிசல் கருமுத்து ஆகியோர் முன்னிலைகளும் நடைபெற்றது.

தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை பால்ராஜ் திறந்து வைத்தார்.

அனைவரும் மலர் தூவி மரியாதை செலுத்திய பின் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தலைவர் கலைஞர் அவர்களின் நினைவை போற்றும் வகையில் பலரும் பல தலைப்புகளில் பேசினார்கள்.

"கலைஞர் சிறந்த தலைவர்" என்ற தலைப்பில் கருணாநிதி சண்முகம் பேசுகையில்.

அரசியல், மொழி, கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் சமுகநீதிகளில் தலைவர் கலைஞரின் பங்களிப்பை பட்டியலிட்டார்.

"தி.மு.க.வின் கொள்கை முழக்கங்கள்" என்னும் தலைப்பில் குடந்தை ஆரிஃப், ஐம்பெரும் முழக்கத்தை பற்றி விரிவாக உரையாற்றினார்.

"கலைஞர் கட்டிய அணைகள்" என்னும் பெயரில் எம்.முபாரக் அவர்கள் பேசுகையில். 1967 முதல் 2011 வரை தி.மு.க ஆட்சியில் பெரியதும், சிறியதுமாக கட்டப்பட்ட மொத்தம் 40 அணைகளின் பெயரை பட்டியலில் இட்டு பேசினார்.

" மாணவ நேசன்" என்னும் தலைப்பில் சர்புதீன்.

"கலைஞர் சிறந்த ஜனநாயக வாதி" என்ற தலைப்பில் ஆசாத்.

"தமிழ் நாட்டின் நவீன தந்தை" என்ற தலைப்பில் சேகர்.

"சங்கத் தமிழும் கலைஞரும்" என்னும் தலைப்பில் ஆரூர் ஜாமல் கவிதை பாடினார்.

"நம்முடன் கலைஞர்" என்னும் தலைப்பில் ஆபீத் அலி.

தமிழரசன், மேரிஜார்ஜ், சாம், ராகஜசேகர் மற்றும் சதீஷ் குமார் ஆகியோர் பேசினார்கள்.

சோலை திருமேனி வரவேற்புரை வழங்கினார்.

சுல்தான் இப்ராஹீம் தொகுத்து வழங்க, அசோக் குமார் நன்றி கூறினார்.

### விபத்துகளைத் தவிர்க்க - தொப்பூர் மலைப்பகுதி சாலையை

# சீரமைக்கும் பணியை விரைந்து மேற்கொள்வீர்!

### டாக்டர் செந்தில்குமார் எம்.பி. கோரிக்கை!

புதுடெல்லி, ஆக.18-

தர்மபுரி உறுப்பினர் மருத்துவர் டி.என்.வி.எஸ் செந்தில்குமார் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது

தர்மபுரி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட தருமபுரி சேலம் தேசிய நெடுஞ்சாலையான தொப்பூர் மலைப் பகுதியில் வாகனங்களில் செல்லும்பொது மக்களுக்கு அடிக்கடி விபத்துகள் ஏற்படுகிறது. மேலும் இந்த விபத்துக்களால் அடிக்கடி உயிரிழப்புகளும் ஏற்படுகிறது. NH 44 இன் KM 158/500 முதல் KM 164/900 வரையிலான தொடர்புடைய இந்த சாலை மிகவும் ஆபத்தான சாலையாக கருதப்படுகிறது.



இந்தப் பகுதியில் ஏற்படும் சாலை விபத்துகளை தடுக்க இந்த தொப்பூர் மலை பகுதியை சீரமைப்பு செய்து மேம்படுத்த வேண்டும் என்று ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ளது. மேலும் விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளது.

ஆனால் இன்று வரை சாலையை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இந்த பகுதியில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் மனித உயிரிழப்பைத் தடுக்க இந்தப் பகுதியில் உள்ள ஆபத்தான வளைவுகளை அகற்றி மாற்று சீரமைப்பு செய்வது மிகவும் அவசியமானதாகும்.

விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் தரும புரியில் இருந்து சேலம் வரையிலான தேசிய நெடுஞ்சாலை 44 வரையிலான தொப்பூர் மலை பகுதியை சீரமைக்கும் பணியை விரைவுபடுத்த சம்பந்தப்பட்ட துறைக்கு உத்தர விட வேள்ணடும்.

இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

### 'நீட்' திணிப்பு : ஒன்றிய அரசு – ஆளுநரைக் கண்டித்து

# கோவையில் உண்ணாவிரத அறப்போர்!

### மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக் - தளபதி முருகேசன் - தொ.அ.ரவி வேண்டுகோள்!

சென்னை, ஆக. 18 -

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து - அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது. அரியலூர் அனிதாவில் ஆரம்பித்த நீட் மரணம், குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் வரை தொடர்கிறது. இந்த மரணங்கள் அனைத்திற்கும், ஒன்றிய பா.ஜ.க. அரசு, துணை போகும் அ.தி.மு.க. மற்றும் தமிழ்நாடு ஆளுநரே காரணம். ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்கள் எண்ணத்தின் வெளிப்பாடாக நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் முயற்சிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது

ஆனால், அந்த நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் ரவி முட்டுக்கட்டை போட்டு வருகிறார். நம் மாணவச்செல்வங்களின் மரணம், ஆளுநரையோ, அவரை இங்கு அனுப்பியுள்ள ஆரிய மாடல் ஆட்களையோ துளியும் பாதிக்கவில்லை. ஜெயலலிதா ஆட்சியில் இருந்த போது வராத நீட், எடப்பாடி பழனிசாமியின் ஆட்சியின் போது தமிழ்நாட்டுக்குள் வந்தது. நீட் விலக்கிற்காக 2017ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசு நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாவை, குடியரசுத்தலைவர் நிராகரித்ததை, 21 மாதங்கள் வரை, தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தெரிவிக்காமல் அ.தி.மு.க.வினர் மறைத்தனர்.

ஒரு மாநில அரசால் நீட்டை ரத்து செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவை அனைத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

கழகத் தலைவர் , தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.க.வின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையின்படி, இந்த 'நீட்' தேர்வை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க.வின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில், வருகின்ற 20.08.23 ஞாயிற்றுக்கிழமை அன்று, காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை சிவானந்தா காலனி அருகில் உண்ணாவிரத அறப்போர் நடைபெற உள்ளது

இந்த உண்ணாவிரத அறப்போரில், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி கழக அமைப்புகளில் நிர்வாகப் பொறுப்புகளில் இருக்கக்கூடிய நிர்வாகிகள், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் , மேயர், துணை மேயர், பொதுக்குழு உறுப்பினர்கள், நகரக் கழக, பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர்க் கழகச் செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக்கழக செயலாளர்கள், நகரக்கழக, பகுதிக்கழக, ஒன்றியக்கழக, பேரூர்க்கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள், செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள் மற்றும் மாணவர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும், பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என்று ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்

நீட் தேர்வை ஒழித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையும் - விலைமதிப்பில்லா உயிரையும் காக்க ஓரணியில் திரள்வோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் நா. கார்த்திக், தளபதி முருகேசன், தொ.அ.ரவி ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

# சனாதனத்தைப்பற்றி பேச ஆளுநருக்கு அருகதை இல்லை:

### இந்திய கம்யூனிஸ்ட் டி.ராஜா தாக்கு

சேலம், ஆக.18-

'சனாதனத்தைப் பற்றி பேச ஆளுநர் ஆர்.என். ரவிக்கு அருகதை இல்லை' என இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் டி.ராஜா தெரிவித்தார்.

சேலத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில குழு கூட்டம், கடந்த 14ம் தேதி முதல் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் டி.ராஜா கலந்து கொண்டு பேசினார்.

பின்னர் அவர் அளித்த பேட்டி:

சுதந்திர தின விழாவில் பேசிய பிரதமர் மோடி, தான் பிரதமர் என்ற எண்ணத்தில் பேசாமல் பா.ஜ.வின் தேர்தல் பிரசார கூட்டமாக அதனை பயன் படுத்திக் கொண்டார். எதிர்க்கட்சிகளை விமர்சனம் செய்யும் கூட்டமாகவே நினைத்து பேசினார்.



ஜனநாயகம் காப்பாற்றப் பட வேண்டும் என்றால், பாஜ ஆட்சி அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட வேண்டும். இந்தியா கூட்டணியின் செயல்பாடுகள், மோடிக்கு அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு அப்பதவியில் அமர்ந்து கொண்டு சனாதனத்தை பற்றி பேச அருகதை இல்லை. தமிழகத்தில் இருந்து ஆளுநர் அகற்றப்பட வேண்டும் என்பதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு.

இவ்வாறு டி.ராஜா தெரிவித்தார்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஒருங்கிணைந்த பதிவு துறை அலுவலகத்தினை சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் அன்பழகன் தலைமையில் குழு உறுப்பினர்கள் சந்திரன், சிவக்குமார்,பரந்தாமன்,ராஜேஷ் குமார்,ஜவாஹிருல்லா, சட்டப்பேரவை செயலாளர் சீனிவாசன்,பாளை அப்துல் வகாப் எம்.எல்.ஏ.,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,மேயர் சரவணன் ஆணையாளர் சிவ கிருஷ்ணமூர்த்தி,துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

### நினைவில் வாழும் வண்ணை தேவகி மருமகன்

# கொளத்தூர் ஆர். பாலசுந்தரம் மறைவு!

### கழகத்தினர் - உறவினர்கள் அஞ்சலி!

சென்னை, ஆக.18-

தலைமைக் கழகப் பேச்சாளர் நினைவில் வாழும் வண்ணை தேவகியின் மூத்த மரு மகன் கழக முன்னோடி கொளத்தூர் ஆர். பாலசுந்தரம் (வயது 75) உடல் நலக்குறைவால் நேற்று முன்தினம் (16.8.2023-புதன்கிழமை) இரவு 7 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தி அறிந்ததும் கழகத்தினரும் உறவினர்களும் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாருக்கு ஞானோதயம் என்கின்ற மனைவியும், கல்வி குமார் என்ற மகனும் உள்ளனர்.



அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (17.8.2023) மாலை 3 மணி அளவில் எண்.300,5 ஆவது தெரு, சிவசக்தி நகர் விரிவு, கொளத்தூர், சென்னை எனும் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு கொளத்தூர் மக்காரம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர்முரசொலிமாறன் அவர்களின் 90வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால், கழக மருத்துவர் துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ, எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா.விஜயரங்கன், க.சௌந்தரராசன், ப.கார்த்திவேல்மாறன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், சி.மாரிமுத்து, நிர்மலா வேல்மாறன், பச்சையம்மன் முத்து, சு.ராஜாங்கம். குட்டிக.புகழேந்தி உட்படபலர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (16.08.2023) பொதுத்துறை நிறுவனங்களில் விளையாட்டு வீரர்களது சாதனைகளின் அடிப்படையில் 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் வேலைவாய்ப்பு வழங்குதல் தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யமிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2024-லும் தேசியக்கொடி ஏற்றுவேன் என்று

# பிரதமர் மோடி சொன்னது அகங்காரத்தைக் காட்டுகிறது!

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேட்டி!

புதுடெல்லி, ஆக.18-

பிரதமர் மோடி அடுத்த ஆண்டு தேசிய கொடி ஏற்றுவார். அது செங்கோட்டையில் அல்ல. அவரது வீட்டில் தான் தேசிய கொடி ஏற்றுவார் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார். செங்கோட்டையில் தேசிய கொடி ஏற்றிய பிரதமர் மோடி பேசுகையில்,' அடுத்த ஆண்டு செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றுவேன்' என்று தெரிவித்தார்.

இதுபற்றி காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறியதாவது: பிரதமர் மோடி சொல்வது ஆணவத்தைப் பற்றிய பேச்சு. இப்போது 2023, மீண்டும் 2024ல் செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றுவேன் என்று சொல்வது



திமிர் மற்றும் அகங்காரம். அவரும் எதிர்க்கட்சிகளை விமர்சித்துக் கொண்டே இருக்கிறார். சுதந்திர தினத்தன்று கூட அவ்வாறு செய்தால், அவர் எப்படிப்பட்ட இந்தியாவை உருவாக்குவார். அடுத்த ஆண்டு அவர் மீண்டும் கொடியை ஏற்றுவார். ஆனால் அவரது சொந்த வீட்டில் அது நடக்கும்'.

இவ்வாறு அவர் கூறினார்.

காங்கிரஸ் தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில், 'அடுத்த ஆண்டு செங்கோட்டையில் யார் உரை நிகழ்த்துவது என்பதை முடிவு செய்வது மக்களின் சக்தி. அதை அவர்களிடமே விட்டுவிட வேண்டும்' என்றார். ஆம் ஆத்மி எம்பி சுஷில் குமார் குப்தா கூறுகையில், 'ஒன்பது ஆண்டுகள் ஆட்சியில் இருந்தும் அவர் தனது ஆட்சியில் என்ன செய்தோம் என அறிக்கை அட்டையை கொடுக்க முடியாமல் இருப்பது எனக்கு விசித்திரமாக இருக்கிறது. அடுத்த வருஷம் ரிப்போர்ட் கார்டை தருவேன்னு சொன்னா, அது எப்படி சாத்தியம். அடுத்த ஆண்டு யார் ஏற்றுவார் என்பதை முடிவு செய்வது பொதுமக்களின் விருப்பம்' என்றார்.

செங்கோட்டை விழாவை தவிர்த்த கார்கே டெல்லி செங்கோட்டையில் நடந்த சுதந்திர தின விழாவில் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், காங்கிரஸ் எம்பி ராகுல்காந்தி மற்றும் இதர தலைவர்கள் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். மாநிலங்களவை எதிர்கட்சி தலைவரான கார்கேவுக்கு தனி இருக்கை ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால் மல்லிகார்ஜுன கார்கே விழாவில் கலந்து கொள்ளவில்லை. அவர் தனது வீட்டில் தேசியக்கொடிஏற்றிய பின்னர் காங்கிரஸ் அலுவலகத்தில் கட்சி கொடி ஏற்றுவதற்கு சென்றுவிட்டார். செங்கோட்டையில் இருந்து காங்கிரஸ் அலுவலகம் வருவதற்கு தாமதம் ஆகும் என்பதால் விழாவில் கலந்து கொள்ளவில்லை என்று கார்கே தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா

# மாநிலம் முழுவதும் இரத்த தான மருத்துவ முகாம்கள்!

## கனிமொழி என்.வி.என்.சோமு - எழிலன் நாகநாதன் முன்னிலையில் நடந்த கழக மருத்துவ அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக.18-

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் காணொலி காட்சி வழியாக 15-08-2023 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மருத்துவ அணித் தலைவர் மருத்துவர் கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி. தலைமையேற்றார்.

மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ முன்னிலை வகித்தார்.

துணைத் தலைவர்கள் மரு.எம்.செந்தில்நாதன், மரு.எ.வ.வே.கம்பன், இணைச் செயலாளர்கள் மரு.இரா.இலட்சுமணன், மரு.ஆர்.கோகுல் கிருபாசங்கர், துணைச் செயலாளர்கள் மரு. செ.வல்லபன், மரு.ஆர். இராஜேஸ்வரி மோகன் காந்தி, மரு.அஞ்சுகம் பூபதி, மரு.ஜெ.அருண், மரு.ஆர்.டி.அரசு, மரு. ஆர்.அண்ணாமலை, மரு. கலை கதிரவன், எஸ்.ஏ.இரமேஷ், திருமதி ஆர்.திலகவதி ஜெயராஜ், இராஜேஷ் பாபு, மன்சூர் அலி கான், செண்பக விநாயகம் உள்ளிட்ட நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, மருத்துவ அணிக்கான உறுப்பினர் சேர்க்கை, மருத்துவ அணியின் மாவட்ட தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் உள்ளிட்ட பல்வேறு கருத்துகள் ஆலோசிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் கீழ்க்காணும் ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழக மருத்துவ அணி நிர்வாகத்தை தொகுதி அளவில் விரிவாக்கம் செய்து, செவிலியர்கள், மருந்தாளுனர்கள், இயன்முறை மருத்துவர்கள், மருத்துவ தொழில் நுட்ப பணியாளர்கள் உள்ளிட்ட மருத்துவ துறை சார்ந்தவர்களை உள்ளடக்கி இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பொறுப்புகளை உருவாக்க அனுமதி அளித்து, உரிய பொறுப்பாளர்களை தேர்வு செய்து அறிவிக்க வழிகாட்டிய, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, கழக மருத்துவ அணி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

மாநில உரிமைகளை பறிக்கும் வகையிலும், மருத்துவ கல்வியில் தடைகளை ஏற்படுத்தும் வகையிலும் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட, 'EXIT' தேர்வுக்கு எதிராக தொடர் அழுத்தம் கொடுத்து, தேர்வு ஒத்தி வைக்கப்பட காரணமாக அமைந்த கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு, கழக மருத்துவ அணி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு மண்டலம் மற்றும் பிற மாநிலங்களில் ஆங்கில கருத்தரங்கங்கள் நடத்துவது, மாவட்ட அளவில் இரத்ததான முகாம்கள், ஒன்றியம் மற்றும் பகுதி அளவில் இலவச மருத்துவ முகாம்கள், ஊரக சுகாதார நிலையங்களில் கூடுதல் தேவைகளை அறிந்து அவ்வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய பணிகளை செவ்வனே மேற்கொள்வது என கழக மருத்துவ அணி தீர்மானிக்கிறது.

புதிதாக நியமிக்கப் பட்டுள்ள மருத்துவ அணி நிர்வாகிகளில் மாவட்ட தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் ஆகியோருக்கான அறிமுக கூட்டத்தை சென்னையில் 26/08/2023 அன்று சிறப்போடு நடத்தி, ஆலோசனை மேற்கொள்வது என கழக மருத்துவ அணி தீர்மானிக்கிறது.

தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பை சிதைக்கும் வகையிலும், தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கல்வி கனவுகளை அழிக்கும் வகையிலும், உயிர்பலி வாங்கும் நீட் என்கிற எதேச்சதிகார கொடுங்கோன்மைக்கு எதிராக, தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட 'நீட் விலக்கு' மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்க வழி செய்யுமாறு ஒன்றிய அரசை, கழக மருத்துவ அணி வலியுறுத்துகிறது.

இந்திய அரசியல் சாசனத்திற்கு எதிராக, தமிழ்நாடு சட்டமன்றத்தையும் அதனை தேர்ந்தெடுத்த மக்களையும் அவமதிக்கும் வகையில், தன் அதிகார வரம்பை மீறி தமிழ்நாட்டின் 'நீட் விலக்க மசோதாவிற்கு' ஒப்புதல் அளிக்க மாட்டேன் என தெரிவித்த ஆளுநர் அவர்களுக்கு, கழக மருத்துவ அணி கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு முழுவதுமிருந்து மருந்தாளுநர்களிடமிருந்து வந்த கோரிக்கையை, நாடாளுமன்றத்தில் எடுத்து வைத்து ஆன்லைன் மருந்து விற்பனைக்கு எதிராக வலுவான குரலை பதிவு செய்த, கழக மருத்துவ அணித் தலைவர் மருத்துவர் கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி அவர்களுக்கு மாநில நிர்வாகிகள் கூட்டம் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் கழக மருத்துவ அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

காஞ்சிபுரம் தெற்கில் கலைஞர் நூற்றாண்டு கொள்கை திருவிழா!

# கலைஞர் திருவுருவச் சிலையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை

காஞ்சிபுரம், ஆக.18-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து கழகக் கொடி ஏற்றி நல உதவிகள் வழங்கி சிறப்பிக்கிறார் என்று மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொள்கை திரு விழாவாக கொண்டா டப்பட்டு வருகிறது.

அந்த வகையில் நாளை (19.8.2023-சனிக்கிழமை) பிற்பகல் 1மணி முதல் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்



பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்கி றார்.

அதன்படி 19ஆம் தேதி அன்று காஞ்சிபுரத்தில் பிற்பகல் 1 மணிக்கு அணிகளின் மாவட்ட நிர்வாகிகளுடன் கலந்துரையாடும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து, குருவி மலையில் மாலை 4 மணிக்கு 100 அடி கொடி கம்பத்தில் கழகக் கொடியை ஏற்றி வைக்கி றார். மதுராந்தகம் நகரில் மாலை 5 மணிக்கு முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவச் சிலையை திறந்து வைத்தும், மதுராந்தகம் கலைஞர் திடலில் மாலை 5.15 மணிக்கு, விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்களையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கு கிறார்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்தலில் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பள்ளி மாணவ - மாணவியருக்கு பரிசு மற்றும் கழக மூத்த முன்னோ டிகளுக்கு பொற்கிழி வழங்கி சிறப்பிக் கின்றார்.

இந்நிகழ்ச்சிகளுக்கு நான் (மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ) தலைமை வகிக்கிறேன், சி. கே.வி. தமிழ்ச்செல்வன், பி.எம்.பாபு, க.குமணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்களில் க. செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., ப.அப்துல் மாலிக், மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜி, செம்பருத்தி துர்கேஷ்,

ச. இனியரசு, டி.வி. கோகுல கண்ணன், மலர்விழிகுமார், சன் பிராண்ட்

கே. ஆறுமுகம், இரா. நாகன், டி.ஆர். நாராயணன், ஆர்.டி. அரசு, எம். எஸ். சுகுமார், எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ். சிகாமணி, பி. சசிகுமார், எழிலரசி சுந்தரமூர்த்தி, வெளிக்காடு வே.ஏழுமலை, எஸ்.பி. பிரேம்சந்த், எஸ்.உசேன், எஸ்.கே. ராஜேந்திரன், ஜி. சுகுமாரன், தி.அன்பழகன், ப.சுந்தரவரதன், வி.எஸ். ராம கிருஷ்ணன் உள்பட ஒன்றிய, பகுதி, பேரூர், கழகச் செயலாளர்கள், மாநகர நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர். அ.யுவராஜ் நன்றி கூறினார்.

எனவே இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு க. சுந்தர் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

கடலில் மூழ்கி உயிரிழந்த

# 3 மாணவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்!

## இரா.ஆவுடையப்பன் நேரில் சென்று கூறினார்!

நெல்லை.ஆக.18.

நெல்லை மாவட்டம் திசையன்விளை வட்டம் கரைச்சுத்துப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த 3 பள்ளி மாணவர்கள் கடலில் குளித்த போது எதிர்பாரா தவிதமாக உயிரிழந்தனர். பாதிக்கப்பட்ட மாணவர்களின் குடும்பத்தினர் வீடுகளுக்கு நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் நேரில் சென்று ஆறுதல் கூறினார்.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் ஒன்றியம் திசையன்விளை வட்டம் கரைச்சுத்துபுதூர் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் முகேஷ் (வயது 13)ராகுல் கண்ணன் (வயது 14) ஆகாஷ் (வயது 14) ஆகிய 3 பேர் நவ்வலடி கிராமத்தில் கடலில் குளிக்கச் சென்ற போது எதிர்பாராத விதமாக கடலில் சிக்கி உயிரிழந்தனர்.

இது பற்றிய தகவல் அறிந்ததும் உயிரிழந்த மாணவர்களின் வீடுகளுக்கு நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் நேரில் சென்று அவர்களது பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் ஆறுதல் கூறினார்.

அப்போது அவருடன் மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, திசையன்விளை பேரூர் செயலாளர் ஜான் கென்னடி, ராதாபுரம் கிழக்கு ஒன்றிய துணை செயலாளர் தனபால், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி,

மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பிரேமா, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் அனிதா ஸ்டெல்லா, இசக்கிபாபு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் லிங்க தமிழரசன், நெசவாளர் அணி துணை அமைப்பாளர் சக்திகுமார், திசையன்விளை சவுந்தர், மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் சரோஜா முத்துத்துரை, முன்னாள் மாவட்டப் பிரதிநிதி குணசேகரன், நவ்வலடி கிளை கழக செயலாளர் லிங்கதுரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் சென்றனர்.

# தமிழ்நாட்டில் விவசாய நிலங்கள், மலைகளை அழிக்கும் ஒன்றிய அரசு!

## நியூட்ரினோ போன்று அடுத்த ஆபத்து!

கம்பம்,ஆக.18-

தமிழகத்தில் நியூட்ரினோ போன்று அடுத்த திட்டத்துக்காக மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரப்பகுதியில் ஒன்றிய அரசின் புவியியல் ஆய்வு மையம் நடத்தி வரும் உலோகங்கள் கண்டுபிடிக்கும் ஆய்வால் விவசாயிகள் கலக்கம் அடைந்து உள்ளனர். ஒன்றிய அரசின் புவியியல் ஆய்வு மையம் சார்பில் தேனி மாவட்டம், கம்பம் மேற்குமலை அடிவாரப்பகுதியில் அதிர்வில்லாத ஆழ்துளை இயந்திரம் முலம் தோண்டப்பட்டு மண், கற்கள், பாறை (கோர்) சாம்பிள் எடுக்கப்பட்டு வருகிறது. இதில் ஆழ்துளை கிணறு 20 அடி முதல் 30, 40, 50 அடி என 200 அடி வரை தோண்டி கோர் சாம்பிள் சேகரிக்கப்பட்டு, தனித்தனி பெட்டிகளில் அடைக்கப்பட்டு, அதை ஆய்வு செய்ய ஐதராபாத்திலுள்ள ஆய்வு மையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த கோர் சாம்பிள் எடுக்கும் ஆய்வுப்பணிகளில், கொல்கத்தா, ஒடிசா, கேரளம், தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் பணி செய்கின்றனர்.

ஒன்றிய அரசின் புவியியல் ஆய்வு மையம் தொடங்கி உள்ள இந்த ஆய்வு தேனி மாவட்டத்திற்கு நியூட்ரினோ போல் மற்றுமொரு ஆபத்து என்றும், பசுமை மிகுந்த கம்பம் பள்ளத்தாக்கை சீர்குலைக்கும் முயற்சியாகும் என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். இதுகுறித்து பெரியாறு வைகை பாசன விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் அன்வர் பாலசிங்கம் கூறுகையில், "கம்பம் பள்ளத்தாக்கை ஒட்டிய பரப்பை ஏற்கனவே சீர்குலைக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதுதான் பொட்டிபுரம் நியூட்ரினோ ஆய்வகம். அதனுடைய தொடர்ச்சியாக இந்திய புவியியல் ஆய்வு மையம் அடுத்த வேலையில் இறங்கி இருக்கிறது. கார்பனேட் மற்றும் அதனுடன் தொடர்புடைய அரிய உலோகங்களை கண்டுபிடிப்பதற்கான ஆய்வுப் பணியை, ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரை காலக்கெடு விதித்து செய்து கொண்டிருக்கிறது.

இந்திய புவியியல் ஆய்வு மைய மண்ணியல் ஆய்வாளர்கள் 2.2 சதுர கிலோமீட்டர் பரப்பை அளவீடாகக் கொண்டு, 15 செங்குத்து ஆழ்துளை கிணறுகள் மூலம் 900 மீட்டர் ஆழத்தில் துளையிடும் பணியில் இறங்கியதோடு, நான்கு ஆழ்துளை கிணறுகளை அமைத்தும் முடித்து விட்டனர். பேட்டரி கார்களுக்கு தேவையான லித்தியம் என்கிற விலை உயர்ந்த கனிமத்தை தேடி இந்த பயணம் இருக்கிறதா என்பதை இந்திய புவியியல் ஆய்வு மையம் விளக்க வேண்டும். வன வளமும், நில வளமும் மிகுந்த கம்பம்மெட்டை இந்திய புவியியல் ஆய்வு மையம் குறி வைக்க காரணம் என்ன என்பதை மக்களுக்கு அச்சம் ஏற்படுத்தாதவாறு தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டும்," என்றார். ஆய்வுபணி குறித்து ஒன்றிய அரசின் புவியியல் ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறுகையில், "மலை அடிவாரத்தை ஒட்டியுள்ள வனப்பகுதியில் ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது.

தற்போது கம்பம்மெட்டு அடிவாரப்பகுதியில் உள்ள தனியார் நிலத்தில் கனிமவளங்கள் உள்ளதா என ஆய்வு மேற்கொள்ளப் பட்டு வருகிறது. பூமிக்கடியில் எஃகு, நிலக்கரி, உலோகம் போன்றவை குறித்த தகவல்களை கண்டுபிடிக்க இந்த டிரில்லிங் முறை பயன்படுத்தப்படுகிறது. கோர் சாம்பிள் எடுத்து அனுப்புவது எங்கள் குழுவின் பணி. தமிழகத்தில் ஏற்கனவே சேலம், கிருஷ்ணகிரி பகுதியில் இதுபோல் கோர் சாம்பிள் எடுக்கப்பட்டு, ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கம்பத்தில் தற்போது 200 அடி வரை மட்டுமே (சுமார் 60 மீட்டர்) தோண்டப்பட்டு சாம்பிள் எடுக்கப்பட்டு ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டு வருகிறது. ஆய்வு முடிவுகளில் மட்டுமே இப்பகுதியில் பெருங்கனிமங்கள் அல்லது சிறு கனிமங்கள் உள்ளது தெரியவரும்" என்றார்.

உலகத்துக்கே சோறு போடும் டெல்டா பகுதியை அழித்து ஹைட்ரோ கார்பன், மீத்தேன் போன்ற திட்டங்களை எண்ணெய் நிறுவனங்களுக்காக ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது. இதுதவிர, கடலுக்கு அடியிலும் எண்ணெய் திட்டங்களை செயல்படுத்த உள்ளது. ஒன்றிய அரசின் என்எல்சி நிறுவனத்தின் விரிவாக்கத்துக்காக விவசாய நிலங்கள் அழிக்கப்படுவதற்கு கடும் எதிர்ப்புகள் எழுந்து வருகிறது. இந்த சூழலில், தற்போது மேற்கு தொடர்ச்சி மலையை அழிக்கும் நோக்கில் நியூட்ரினோ போன்று அடுத்த திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருவது விவசாயிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

நன்றி
'தினகரன்'



கேரள மாநில தி.மு.க. சார்பாக கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் தி.மு.கழக அலுவலகத்தில் கேரள மாநில தி.மு.க. விவசாய அணி சார்பாக விவசாய தினம் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் கலந்து கொண்டு விவசாய அணியைச் சேர்ந்த 100க்கும் விவசாயிகளுக்கு விதைகள் இலவசமாக வழங்கப்பட்டது நிகழ்ச்சிக்கு கொல்லம் மாவட்ட அவைத்தலைவர் ரெஜிலால் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் கொல்லம் மாவட்டச் செயலாளர் ரெஜிராஜ், மோகன்தாஸ், மாத்யூ, ரபீக், அச்சு பிலால்,சுபலெட்சுமி, ஷாலினி,ரெனுராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


LEADER Ship
18.08.2023
இராமநாதபுரத்தில்
நடைபெறும்
மீனவர் நல மாநாட்டில்
எழுச்சி உரையாற்ற
வருகை தரும்
இந்தியாவின்
இரும்புத்
தலைவர்
ARASU ARTS
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களே வருக! வருக!!
வரவேற்று மகிழும் : கே.ஆர்.பெரியகருப்பன்
கூட்டுறவுத் துறை அமைச்சர் - மாவட்டச் செயலாளர்
சிவகங்கை மாவட்ட தி.மு.க.


IT'S TIME TO LEAD I.N.D.I.A
நாள் : 18.08.2023 வெள்ளிக்கிழமை – இடம் : மண்டபம் கேம்ப்
வீரத்தின் விளைநிலமான
இராமநாதபுரம் மாவட்டத்திற்கு
வருகை தரும்
மீனவர்களின் நலன் காக்கும்
இந்திய விடியலின் வழிகாட்டி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களை வருக. வருக.. என வரவேற்கிறோம்...
ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை (ம) கதர்கிராம தொழில் வாரிய அமைச்சர்
கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர்
காதர்பாட்சா முத்துராமலிங்கம்
மாவட்டக் கழகச் செயலாளர் – இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர்
இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.
ARASU ARTS


கலைஞர் 100
1924-2023
மீனவர் சங்கங்களின் மாநில மாநாடு
நாள்: ஆகஸ்ட் 18
இடம்: இராமநாதபுரம் மாவட்டம்
பாரம்பரிய மீனவர்களின் உரிமைகளை மீட்க
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
மீனவர்களின் நலன்காக்கும்
விடியலின் நாயகர்
எழுச்சி உரையாற்றுகிறார்!
மீனவ மக்களேஅலைகடலென ஆர்ப்பரித்து
வாரீர்! வாரீர்!! என அழைக்கிறோம்...
அனிதா.ஆர். இராதாகிருஷ்ணன்
மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர், தூத்துக்குடி தெற்கு மாவட்ட கழக செயலாளர்
த.மனோ தங்கராஜ்
பால்வளத்துறை அமைச்சர், குமரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்
ரெ.மகேஷ்
நாகர்கோவில் மாநகராட்சி மேயர், குமரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
அ.ஜோசப் ஸ்டாலின்
கழக மீனவர் அணி செயலாளர்
தி.மு.க.மீனவர் அணி



தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படவுள்ள ஹெல்த் வாக் திட்டத்தின் கீழ் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் முதல் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 8 கி.மீ. தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதிப்படுத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ப.முருகமணி, பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ் மற்றும் பலர் உள்ளனர்.

### சுதந்திர தினவிழாவை நேரில் காண கடிதம் எழுதிய

# சிறுவனின் ஆசையை நிறைவேற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## ‘லவ் யூ தாத்தா’ என நன்றி தெரிவித்தான்!

சென்னை, ஆக.18 –

நாட்டின் 77வது சுதந்திர தினத்தை முன்னிட்டு புனித ஜார்ஜ் கோட்டையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடி ஏற்றுவதை நேரில் காண வேண்டும் என கடந்த 3ம் தேதி ராமநாதபுரம் கமுதி தாலுகா பாப்பனம் கிராமத்தை சேர்ந்த 3ம் வகுப்பு படிக்கும் மாணவன் விதர்சன் (8), தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கடிதம் ஒன்றை எழுதி இருந்தார். இதனையடுத்து இக்கடிதம் முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, சுதந்திர தினவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது. அதன்படி, கடந்த 14ம் தேதி இரவு தனது தாயார் ஆனந்த வள்ளியுடன் சிறுவன் விதர்சன் அரசு விருந்தினர் மாளிகையில் தங்க வைக்கப்பட்டார். பின்னர், நேற்று முன்தினம் சுதந்திர தின விழா நடைபெற்ற இடத்திற்கு அழைத்து வரப்பட்டு விழாவினை விதர்சன் கண்டு களித்தார். 77 வருட சுதந்திர தின விழாவில் முதல் முறையாக கடிதம் மூலமாக முதல்வரிடம் கோரிக்கை



வைக்கப்பட்டு அதனை உடனடியாக பரிசீலிக்கப்பட்டு சிறுவனின் ஆசையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றியுள்ளார். இந்நிகழ்ச்சியை தொடர்ந்து முதல்வர் தனது டிவிட்டர் பக்கத்தில் சிறுவன் விதர்சன் குறித்து வீடியோ ஒன்றினை பதிவிட்டுள்ளார். அந்த வீடியோவில் சிறுவன் விதர்சன் பேசுகையில்: முதல்வரின் அழைப்பில் பேரில் நேரில் கலந்து கொண்டு தேசிய கொடி ஏற்றுவதை பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது. ‘‘என் ஆசையை நிறைவேற்றிய முதல்வர் ஐயாவுக்கு நன்றி. லவ் யூ தாத்தா’’ என அதில் தெரிவித்துள்ளான்.

### இந்தியாவின் பாதுகாப்பு உள்கட்டமைப்பு சோதனைத் திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டில் முதல் ஆளில்லா விமான (ட்ரோன்) பொது சோதனை மையம்!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

சென்னை, ஆக. 18 -

தமிழ்நாட்டில் வான் வெளி மற்றும் பாதுகாப்பு துறையின் மேம்பாட்டிற்கான முகவாண்மை நிறுவனமாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) செயல்பட்டு வருகிறது, இத்துறையின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது, அதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் வான் வெளி மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு பொது சோதனை மையங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஒன்று ஆளில்லா விமான பொது சோதனை மையமாகும் (Unmanned Aerial Systems Common Testing Centre). தற்போது, இத்தகைய சோதனை மையம் கர்நாடக மாநிலம், சித்திரதுர்காவில் DRDO தனது பயன்பாட்டிற்காக உருவாக்கியுள்ளது. தமிழ்நாட்டில் ஆளில்லா விமானம் தயாரிக்கும் தொழில் நிறுவனங்கள், மோட்டார்கள், பேட்டரி உட்பட பல்வேறு பாகங்களை தனித்தனி மையங்களில் சோதனை செய்து வருகின்றன. இது செலவினத்தை அதிகரிப்பதோடு, சோதனைகளை மேற்கொள்ள



காலதாமதமும் ஆகின்றது.

இந்த இடர்பாடுகளைகளையும் நோக்கத்துடன் ஒன்றிய அரசின் பாதுகாப்பு உள்கட்டமைப்பு சோதனை திட்டத்தின் கீழ் (DTIS), இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த ஆளில்லா விமான (ட்ரோன்) சோதனை மையத்தை அமைக்க டிட்கோ நிறுவனம் திட்டமிட்டது. ஒன்றிய அரசின் மானியத்துடன் செயல்படும் இத்திட்டத்தை செயல்படுத்த டிட்கோ ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளியை கோரியது. அதன் அடிப்படையில், கெல்டிரான் (Keltron), சென்ஸ் இமேஜ் (Sense image) ஸ்டாண்டர்டு டெஸ்டிங் & காம்ப்ளையன்ஸ் (Standard Testing & Compliances) மற்றும் அவிக்ஷா ரீடெய்லர்ஸ் (Aviksha Retailers) முதலான நான்கு நிறுவனங்கள் டிட்கோவுட ன் இணைந்து ரூ. 45 கோடி மதிப்பீட்டில் ஆளில்லா விமான சோதனை மையத்தை அமைக்க உள்ளன. இந்த சோதனை மையம், ஆளில்லா விமானத்தின் ஆராய்ச்சி, வடிவமைப்பு, மேம்பாடு, உற்பத்தி மற்றும் சோதனைகளுக்குத் தேவையான பல்வேறு வசதிகளை ஒரே இடத்திலேயே சர்வதேச தரத்தில் வழங்கும்.

இந்த சோதனை மையம், ஸ்ரீபெரும்புதூர் அருகே வல்லம் வடகாலில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார் 2.3 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. ஆளில்லா விமான உற்பத்தியில் தமிழ்நாடு சர்வதேச மையமாக திகழவும் பாதுகாப்புத் துறையில் இந்தியாவின் தற்சார்புத் தேவையை பூர்த்தி செய்யவும் இச்சோதனை மையம் வழிவகுக்கும்.

“இந்தியாவின் முதல் பொது ஆளில்லா விமான சோதனை மையம் தமிழ்நாட்டில் அமைய இருப்பது, வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்திச் சூழலில் உயரிய இடத்தை தமிழ்நாடு அடைய வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் அர்ப்பணிப்பிற்கு எடுத்துக்காட்டு. இத்துறையின் தேவைகளை புதுமையான முறையில் பூர்த்தி செய்து முதலீட்டாளர்களை ஈர்த்து வருகிறோம். வான்வெளி மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை துவங்குவதற்கு விருப்பமான இடமாக தமிழ்நாட்டை மாற்ற இந்த சோதனை மையம் உதவும்.

வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்தித்துறையின் பிரதிநிதிகளுடன் சமீபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேலும் பல ஆலோசனைகள் பெறப்பட்டன. இத்துறை மேலும் வளர தேவையான நடவடிக்கைகளை எடுப்பதில் நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். இம்முயற்சிகளுக்கான பலன்கள் விரைவில் கிடைக்கும்” என்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மறைந்த அரசியல் மாமேதை , கலைஞரின் கண்மணி முரசொலி மாறன் அவர்களின் 90ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தஞ்சை மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, து.செல்வம், மாநகரக் கழகச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணியினர், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.

### சென்னையில்

# ‘ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்’ டிசம்பரில் நடைபெறுகிறது!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்!

சென்னை, ஆக. 18 -

இந்திய மோட்டார் ஸ்போர்ட்ஸின் வரலாற்றில் சிறப்பு நிகழ்வாக பெருநகர சென்னை மாநகராட்சி (GCC), சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT), ரேஸிங் புரோமோஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவை இணைந்து இந்தியாவின் மோட்டார் ஸ்போர்ட்ஸ் தலை நகரான சென்னையில் “சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்” நடத்தப்பட உள்ளது. இந்த போட்டிக்கான அறிமுகக் கூட்டம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமையில் சென்னை லீலா பேலஸில் நேற்று முன்தினம் (16.08.2023) நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் “சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்” போட்டியினை அறிமுகப்படுத்திய அமைச்சர் பேசியதாவது:

சென்னையில் ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் 2023 டிசம்பர் 9 மற்றும் 10 -ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. இந்தியாவில் முதல் முறையாக சாலைகள் வழியாக நடத்தப்படுகின்ற மிகப்பெரிய மோட்டார் ரேஸ் இதுவாகும்.

சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் F4 இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேஸிங் லீக் ஆகியவை சென்னை தீவுத்திடல் மைதானத்தைச் சுற்றி 3.5 கி.மீ சுற்றளவில் இரவு போட்டியாக (Street Circuit) நடத்தப்படுகிறது. இந்த சிறப்புமிக்க இரண்டு சாம்பியன்ஷிப் போட்டிகளிலும் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து பாலின சமத்துவத்தின் அடிப்படையில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஓட்டுநர்கள் பங்கேற்க உள்ளனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் இந்த போட்டிகளை மிகச் சிறப்பாக நடத்துவதற்காக. ரூபாய் 42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகரமாக மாற்றுகின்ற வகையில், அனைத்து முன்னெடுப்பு திட்டங்களையும் தமிழ்நாடு அரசு மற்றும் விளையாட்டுத் துறை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தீவிர நடவடிக்கையினால் உலகமே வியக்கும் வண்ணம் 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மாணவ மாணவிகள், இளைஞர்கள் விளையாட்டில் ஆர்வம் உள்ளவர்கள், அனைவரும் பங்கேற்கின்ற வகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2023 சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. மேலும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டி, ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை2023 போட்டிகள் நடத்தப்பட்டுள்ள நிலையில் சர்வதேச அலைச்சறுக்கு போட்டி மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டு வருகிறது. அடுத்ததாக அக்டோபர் மாதத்தில் சைக்ளோத்தான் போட்டி நடத்தப்பட உள்ளது. மேலும் தமிழ்நாட்டில் அனைத்து விதமான சர்வதேச போட்டிகளும் தொடர்ச்சியாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனக் கூறினார்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

இந்த அறிமுக கூட்ட த்தில் அமைச்சர் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் பார்முலா ரேஸ் (RPPL) அமைப்பினருக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, , இந்திய மோட்டார் ஸ்போர்ட்ஸ் கிளப்களின் கூட்டமைப்பு தலைவர் அக்பர் இப்ராஹிம் RPPL தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான அகிலேஷ் ரெட்டி , RPPL இயக்குநர்களான அர்மான் இப்ராஹிம் மற்றும் அபிநந்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

### பா.ஜ.க.வின் ‘குஜராத் மாடல்’ பிரச்சாரம் வெற்றுக் கூச்சல் என்பது நிரூபணம்!

# குஜராத் மாநிலத்தில் 38 சதவிகிதம் பேருக்கு ஊட்டச்சத்து குறைபாடு!

## நிதி ஆயோக் தகவல்!

புதுடெல்லி, ஆக. 18-

குஜராத் மாநில மொத்த மக்கள் தொகையில் 38 சதவீதத்துக்கும் அதிகமானோர் ஊட்டச்சத்து குறைபாடால் பாதிக்கப்பட்டிருப்பதாக நிதி ஆயோக் தெரிவித்திருப்பதன் மூலம், பா.ஜ.க.வின் குஜராத் மாடல் அரசு என்ற பிரச்சாரம், வெற்று கூச்சல் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பு, தேசிய பன்முக வறுமை குறியீடு தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் ஊட்டச்சத்து குறைபாடு, வீட்டு வசதி, வறுமை ஒழிப்பு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் விரிவாக பட்டியலிடப்பட்டுள்ளன.

ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சினையில் மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில், குஜராத் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும், அந்த மாநிலத்தில் கிராமப் புறங்களில் 44.45 சதவீதம் பேரும், நகர்ப்புறங்களில் 28.97 சதவீதம் பேரும் ஊட்டச்சத்து குறைபாடால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், இது குஜராத் மாநில மொத்த மக்கள் தொகையில் 38.09 சதவீதம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், எடை குறைவாக உள்ள குழந்தைகள் அதிகம் உள்ள மாநிலங்கள் பட்டியலில் குஜராத் 4வது இடத்தில் இருப்பதாகவும், அந்த மாநிலத்தில் 39 சதவீத சிறார்கள், தங்களது வயதுக்கு ஏற்றார்போல இல்லாமல் உடல் எடை குறைவால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் நிதி ஆயோக் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வீட்டு வசதி துறையிலும் குஜராத் மாநிலம் மிக மோசமான நிலையில் இருப்பதாகவும், குஜராத்தின் மொத்த மக்கள் தொகையில் 23.30 சதவீதம் பேருக்கு வீட்டு வசதி இல்லை என்றும், குறிப்பாக கிராமப் புறங்களில் 35.52 சதவீதம் பேருக்கு வீட்டு வசதியில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு, எதற்கெடுத்தாலும் பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் குஜராத்தை சுட்டிக்காட்டி குஜராத் மாடல் என்று தம்பட்டம் அடிப்பதை வாடிக்கையாக வைத்துள்ளது.

ஆனால், குஜராத்தோ பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், பல்வேறு துறைகளில் பின்தங்கி இருப்பது நிதி ஆயோக் வெளியிட்ட புள்ளி விவரம் மூலம் உறுதியாகியிருப்பது பா.ஜ.க.வின் புளுகு முட்டையை மீண்டும் வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது.


**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (ஐ.எப்.பி) - (இரண்டு உறை) - இனம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்.

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண் : | 01/ கோ. IoT நீர்அளவுமானி/ உ.பொ-6/ஒ.நி./2023, நாள் : 14.08.2023. |
| ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர் | இணை தலைமைப் பொறியாளர் (ஒ.நி.), த.கு.வ.வா, சென்னை-5. |
| ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம் | 17.08.2023 முதல் 31.08.2023 – 15.00 மணி வரை. |
| ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகை | Online முறையில் https://tntenders.gov.in/ என்ற இணையதளம் மூலமாக. |
| ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக் கூட்டம் | 24.08.2023 அன்று முற்பகல் – 11.00 மணிக்கு - இணை தலைமைப் பொறியாளர் (ஒ.நி.), த.கு.வ.வா, சென்னை, தமிழ்நாடு அவர்களின் அலுவலகத்தில். |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 31.08.2023 அன்று 15.00 மணிக்குள் மின்னணு ஒப்பந்தம் முறையில் மின்னணு முறையில் ஒப்பமிடப்பட்டு https://tntenders.gov.in/ என்ற இணையதளம் மூலமாக |
| ஒப்பந்தப்புள்ளி திறப்பு | 01.09.2023 அன்று 15.30 மணிக்கு இணை தலைமைப் பொறியாளர் (ஒ.நி.), த.கு.வ.வா, சென்னை, தமிழ்நாடு அவர்களின் அலுவலகத்தில் மின்னணு முறையில் திறக்கப்படும் |

| ஒ.கே. எண். | திட்டத்தின் பெயர் | முன்வைப்பு தொகை. |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் ஸ்மார்ட் குடிநீர் அளவுமானிகளை தலைமைப் பணியிடங்கள், நீருந்து நிலையங்கள், தரைமட்ட நீர் தேக்கத்தொட்டிகள், பஞ்சாயத்து நீர்தேக்கத்தொட்டிகள் / நீருந்து அல்லது புவிஈர்ப்பு குழாய்களின் மூலம் பயன்பெறும் பயனாளர்களுக்கு கிராம மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிகளுக்கு வழங்கி, விநியோகம் செய்து, பொறுத்தவும், அத்தகைய அளவுமானிகளில் இருந்து வேண்டிய தரவுகள் பெறப்பட்டு அதன் மூலம் வழங்கிய குடிநீரின் அளவை பெற்று, தானியங்கி முறையில் பில் செய்ய ஒரு ஒருங்கிணைந்த கண்காணிப்பு அமைப்பை உருவாக்க, விரிவான திட்ட சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல் மற்றும் ஏல ஆவணங்கள் தயாரித்தல் உள்ளிட்டவைக்கான ஆலோசனை சேவையை ஈடுபடுத்துதல். (இரண்டு மாதங்கள்) | ரூ. 50,000/- |

செ.ம.தொ.இ/ 4581 /ஒப்பந்தப்புள்ளி/2023 தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம்
இணை தலைமைப் பொறியாளர் (ஒ.நி.), த.கு.வ.வா, சென்னை-05.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர்.

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு(இணையதள வழியில் மட்டும்)**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 04/2023-24 / முவஅ / நாள்: 11.08.2023.**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர் அவர்களால் தஞ்சாவூர் (நெ) திட்டங்கள் கோட்டத்திற்கான கீழ்கண்ட பணிக்கு இணையதள வழியில் மட்டுமே இனவாரி ஒப்பந்தப்புள்ளி (இரண்டு உறைகள் முறை) 21.09.2023, 15.00 மணி வரை (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

சி.ஆர்.ஐ.டி.பி. 2023-24 "பாப்பாநாடு- மதுக்கூர்-பெருகவாழ்ந்தான் சாலை (மா.மு.சா.778) கி.மீ 22/2 ல் கண்ணனார் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் திரும்பகட்டுதல் பணி"

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை http://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 21.08.2023 முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./4495/ஒப்பந்தப்புள்ளி/2023
**கண்காணிப்புப் பொறியாளர் (நெ) திட்டங்கள் வட்டம்,தஞ்சாவூர்.**
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
திருச்சிராப்பள்ளி கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
ஒ.அ.எண்: 22 / 2023-24 / தவஅ / நாள்: 09.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால் சி.ஆர்.ஐ.டி.பி 2023-24 திட்டத்தின்கீழ், **திருவாரூர்** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **4 பணிகளுக்கு** இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **11.09.2023 அன்று 14.00 மணி வரை** (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விபரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்கள் https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் **21.08.2023** முதல் தெரிந்துக்கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையத்தளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./4520/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி -20.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்".



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை, சென்னை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 29 / 2023 - 2024 / தவஅ / நாள் 12.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, சென்னை வட்டம் அவர்களால், காஞ்சிபுரம் (நெ) க(ம)ப கோட்டத்தைச் சார்ந்த திட்டம் சாரா பணிகள் 2023 - 2024 (1 பணி) சி.ஆர்.ஐ.டி.பி. 2023 - 2024 (1 பணி) இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 04.09.2023 பிற்பகல் 12.30 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதரவிபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 18.08.2023 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது..

செ.ம.தொ.இ / 4506/ ஒப்பந்தப்புள்ளி / 2023
**கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப சென்னை வட்டம்**
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"


# பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய மாணவர்களின் கவனத்துக்கு!

சென்னை, ஆக. 18 -

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய மாணவர்களுக்கான முக்கிய அறிவிப்பை அரசுத் தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து அரசுத் தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

அதன்படி, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய மாணவர்கள் இன்று (ஆக.18 ஆம் தேதி) முதல் அந்தந்த பள்ளிகளிலேயே அசல் மதிப்பெண் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம் என அரசுத் தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு கடந்த ஏப். 6 முதல் 20ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்தத் தேர்வை தமிழகம், புதுவையில் 9.2 லட்சம் மாணவ, மாணவிகள் எழுதினர்.

# தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு.!

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 26 - 8- 2023 - சனிக்கிழமை மாலை 4.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பொருள்:** தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி “விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை" தமிழகம் முழுவதும் நடத்துவது குறித்து

“அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
. நாள்: 16 -8 - 2023

**அன்னியூர் சிவா**
செயலாளர், தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி



கன்னிவாடி பேரூராட்சிக்கு உட்பட்ட நவாப்பட்டியில் பகுதிநேர நியாயவிலைக் கடையை திறந்து பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் பூங்கொடி, ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி உட்பட தி.மு.க.நிர்வாகிகள் உள்ளனர்.

### ஏழை மாணவர்களின் நலன் கருதி

# ஆத்தூர் தொகுதியில் பொறியியல் கல்லூரி அமைத்தவர் கலைஞர்!

## நவாப்பட்டியில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் ஐ. பெரியசாமி பேச்சு!

சின்னாளபட்டி, ஆக.18-

ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் ஏழை மாணவர்களின் நலன் கருதி திமுக ஆட்சியின் போது பொறியியல் கல்லூரியை கொண்டுவந்தவர் முன்னாள் முதல்வர் கலைஞர் என்றும் மருத்துவ மனையில் இருந்தபோதே மாணவர்களுக்காக ஒரே நாளில் நிதியை ஒதுக்கி ரெட்டியார்சத்திரத்தில் அண்ணா பொறியியல் கல்லூரிக்கான ஆணையை வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்று நவாப்பட்டியில் நடைபெற்ற ரேஷன்கடை திறப்புவிழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உருக்கமாக பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கன்னிவாடி பேரூராட்சிக்கு உட்பட்ட நவாப்பட்டி கிராம மக்கள் தங்களுக்குரிய ரேஷன் பொருட்களை வாங்க 2கி.மீ தூரம் சென்று மணியகாரன்பட்டியில் ரேசன் பொருட்களை வாங்கி வந்தனர். தங்கள் பகுதியில் பகுதிநேர நியாயவிலைக்கடை வேண்டுமென ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியாமியிடம் கோரிக்கைவிடுத்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று நவாப்பட்டியில் புதிய நியாய விலைக்கடை திறப்புவிழா நடைபெற்றது விழாவிற்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.ந. பூங்கொடி தலைமை தாங்கினார்.

ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் ப.க. சிவகுருசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கு.சத்தியமூர்த்தி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மனோரஞ்சிதம், பேரூராட்சிமன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், துணைத்தலைவர் கீதா முருகானந்தம், பேரூர்கழக செயலாளர் இளங்கோவன், முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் சண்முகம், செயல்அலுவலர் ஜெயமாலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுவி நியோக திட்ட துணைப்பதிவாளர் அன்புக்கரசன் வரவேற்று பேசினார்.

விழாவில் பகுதிநேர நியாயவிலைக்கடையை திறந்து வைத்து பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கிவிட்டு பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கடந்த 12வருடங்களுக்கு முன்பு தி.மு.க. ஆட்சியின் போது வருவாய்துறை அமைச்சராக பதவி வகித்த போது கிராமங்கள்தோறும் நியாயவிலைக்கடையை திறந்து வைத்ததால் கிராம மக்களுக்கு தங்குதடையின்றி ரேஷன் பொருட்கள் கிடைக்கும் நிலைமை உருவானது அதன்பின்பு அதிமுக ஆட்சியில் ஒரு கிராமத்தில் கூட பகுதி நேரமோ, முழுநேர நியாயவிலைக் கடைகள் திறக்கவில்லை. தற்போது தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் கிராமங்கள் தோறும் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக 10 வருடங்களுக்கு முன்பு மறைந்த முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்கள் அவர்



கள் முதல்வராக இருந்த போது ஆத்தூர் தொகுதியில் உள்ள மாணவ மாணவிகளின் நலன் கருதி பொறியியல் கல்லூரி வேண்டுமென்றும் அரசு பொறியியல் கல்லூரி படிக்க விரும்பும் மாணவர்கள் திருச்சி மற்றும் மதுரைக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது என கூறினேன். அவர் மருத்துவமணனயில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நிலையில் கிராமப்புற மாணவர்கள் நலன் கருதி ஆத்தூர் தொகுதியில் அண்ணா பொறியியல் கல்லூரி அமைக்க உத்தரவிட்டதோடு அதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்தார்.

அதன்பின்பு கிராமங்கள் தோறும் நியாயவிலைக் கடைகள் திறக்க வேண்டுமென கோரிக்கைவிடுத்தேன் உடனடியாக 200 குடும்ப அட்டைகள் இருந்தால் கூட அந்த கிராமத்திற்கு நியாயவிலைக்கடை திறக்க உத்தரவிட்டார் அதன்பின்னர் தமிழகம் முழுவதும் கிராமங்கள்தோறும் நியாய விலைக்கடைகள் திறக்கப்பட்டன என்றார்.

தற்போது நவாப்பட்டி கிராமத்தில் 150 குடும்பங்கள் வசித்தாலும் அவர்கள் சிரமமில்லாமல் ரேஷன் பொருட்களை வாங்க இன்று இங்கு பகுதிநேர நியாயவிலைக்கடை திறக்கப்பட்டுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் கமலக்கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிருஷ்ணன், மலரவண், கூட்டுறவு வளர்ச்சி அலுவலர்கள் சக்கரவர்த்தி மணிமாறன், கனேசன், கூட்டுறவு சார்பதிவாளர் அன்பரசு, வட்டார காங்கிரஸ் தலைவர் முருகானந்தம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜேஸ்பெருமாள்,

மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கும்மம்பட்டி விவேகானந்தன், மாவட்ட பிரதிநிதிகள் ஜீவானந்தம், பெருமாள், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், அமைப்புசாரா தொழிலாளர் அணியை சேர்ந்த கிருஸ்துராஜா, பொதுக்குழு உறுப்பினர் டென்னிஸ், ஒன்றிய பிரதிநிதி சரவணன், பேரூராட்சி உறுப்பினர்கள் கார்த்திகை செல்வி, மணிமாலதி, மகேஸ்வரி, மருதாயம்மாள், உமா இந்திராகாந்தி, மற்றும் கன்னிவாடி பேரூர் கழக அவைத்தலைவர் சர்புதீன், வார்டு செயலாளர்கள் பூமிபாலன், தெய்வேந்திரன், காளியப்பன், ரேசன் கடை விற்பனையாளர் செந்தில் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஸ்டெதஸ்கோப் தொங்க வேண்டிய கழுத்தில் தூக்குக் கயிறு!

# கயிற்றை இறுக்கும் பா.ஜ.க.வும் - ஆளுநர் ரவியும்!

## ‘தீக்கதிர்’ தலையங்கம் கண்டனம்!

சென்னை, ஆக. 18-

‘நீட்’ விவகாரத்தில் நடவடிக்கை எடுக்காமல் ஸ்டெதஸ்கோப் தொங்க வேண்டிய மாணவர்கள் கழுத்தில் தூக்குக் கயிறுகளால் இறுக்குகிறது பா.ஜ.க.வும், ஆளுநர் ரவியும் என குற்றம்சாட்டி ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம் எழுதி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளது. மேலும் இதுபோன்ற தற்கொலைகள் தடுக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளது.

அது வருமாறு:-

மருத்துவக் கல்வி பயில விரும்பும் ஏழை மாணவர்களுக்கு நீட் எனும் தேர்வு தாண்ட முடியாத தடையாகி அதுவே வாழ்வின் இறுதியாகவும் அமைந்து விடுகிறது. ஒன்றிய அரசின் பிரதிநிதியாக சனாதனத்தின் பிரச்சாரகராக தமிழ்நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி நீட் தேர்வு விலக்க மசோதாவுக்கு கையெழுத்திட மறுத்து மாணவத் தளிர்களின் மருத்துவக் கனவை மட்டுமல்ல, வாழ்க்கையின் இலக்கையும் கருக வைத்துக் கொண்டிருக்கிறார்.

மேல்நிலைக்கல்வியில் மிகக்குறைந்த மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் கூட பயிற்சி மையங்களில் லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து 2,3 ஆண்டுகள் படித்து அதிலும் கூட முறைகேடுகள் செய்து தேர்ச்சி பெற்று அதிக மதிப்பெண்கள் ‘வாங்கி’ மருத்துவக் கல்வியில் சேர்ந்து விடுகின்றனர்.

அவ்வாறு பணத்தைக் கொட்டி செலவழித்து படிக்க முடியாதவர்கள் நீட் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றாலும் கூட, அரசு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைக்காததால் மருத்துவப் படிப்பில் சேர முடியாமல் போகிறது. அதைத்தான் சென்னை குரோம்பேட்டை மாணவர் ஜெகதீஸ்வரன், அவரது தந்தை ஆகியோரின் தற்கொலைகள் உணர்த்துகின்றன.

அவர்களிடம் பணமும் பொருளாதார வாய்ப்பும் இருந்திருந்தால் தனியார் கல்லூரிகளில் ஏதாவது ஒன்றில் சேரும் முடிவை எடுத்திருப்பார்கள். வசதியில்



தீக்கதிர்

2023 ஆகஸ்ட் 17 வியாழக்கிழமை

கழுத்தை இறுக்கும் நீட் எனும் கயிறு

மருத்துவக் கல்வி பயில விரும்பும் ஏழை மாணவர்களுக்கு நீட் எனும் தேர்வு தாண்ட முடியாத தடையாகி அதுவே வாழ்வின் இறுதியாகவும் அமைந்து விடுகிறது. ஒன்றிய அரசின் பிரதிநிதியாக சனாதனத்தின் பிரச்சாரகராக தமிழ்நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி நீட் தேர்வு விலக்க மசோதாவுக்கு கையெழுத்திட மறுத்து மாணவத் தளிர்களின் மருத்துவக் கனவை மட்டுமல்ல, வாழ்க்கையின் இலக்கையும் கருக வைத்துக் கொண்டிருக்கிறார்.

மேல்நிலைக்கல்வியில் மிகக்குறைந்த மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் கூட பயிற்சி மையங்களில் லட்சக்கணக்கான ரூபாய்

லாத காரணத்தாலேயே இந்த இரு உயிர்கள் பலியாகிவிட்டன.

அதே நாளில் ஆளுநர் மாளிகையில் நடந்த நிகழ்வில் நீட் தேர்வில் வெற்றி பெற்ற மாணவியின் தந்தை அம்மாசியப்பன், மற்ற ஏழை எளியவர்களின் குரலாக நீட்தேர்வு விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் தர வேண்டும் என கோரிக்கை வைத்த போது, ஆணவத்துடன் ஆளுநர் ஆர்.என்.ரவி கையெழுத்திட மாட்டேன் என்று பதிலளித்ததுதான் இந்த இரு உயிர்களைப் பறித்துவிட்டது.

ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் பயிற்சி பெற்ற மாணவர்கள் 20 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் நீட் விலக்கு மசோதா இரு முறை சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்பட்டும் அதற்கு ஒப்புதல் அளிக்காதது தான் தற்போது இரு உயிர்களைப் பறித்தது. அதனால் தான் முதல்வர் ஸ்டாலின் குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதி ஒப்புதல் தரக் கோரியிருக்கிறார்.

ஸ்டெதஸ்கோப் தொங்க வேண்டிய கழுத்தை தூக்குக் கயிறுகள் இறுக்கும் நிலையை இனி அனுமதிக்கக் கூடாது. அதற்கு ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி அகற்றப்பட வேண்டும். அப்போது தான் இத்தகைய உயிர்ப்பலிகள் நிகழாதிருக்கும்.

இவ்வாறு ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் பா.ஜ.க.வையும், ஆளுநர் ரவியையும் குற்றம் சாட்டியுள்ளது.

### மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி சார்பில்

# மதுரை - பழங்காநத்தத்தில் மாபெரும் உண்ணாவிரத அறப்போர்!

## அமைச்சர் பி.மூர்த்தி - கோ. தளபதி எம்.எல்.ஏ. - மு.மணிமாறன் அறிக்கை

மதுரை, ஆக.18-

மாவட்ட திமுக இளைஞரணி மாணவரணி மருத்துவரணி சார்பில் “தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவ கனவை சிதைத்து அவர்களின் உயிரை பறிக்கும் நீட் தேர்வை ஒன்றிய பா.ஜ.க அரசு திரும்பப் பெற வலியுறுத்தியும், அதிகாரம் இருப்பது போல் மாளிகையில் கொக்கரிக்கும் ஆளுநரை கண்டித்தும்” மதுரை, பழங்காநத்தத்தில் மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடைபெறுகிறது என மதுரை வடக்கு - மாநகர் - தெற்கு மாவட்ட செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி, கோ.தளபதி MLA, மு.மணிமாறன் ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு:-

நமது கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவ கனவை சிதைத்து அவர்களின் உயிரை பறிக்கும் நீட் தேர்வை ஒன்றிய பா.ஜ.க அரசு திரும்பப் பெற வலியுறுத்தியும், அதிகாரம் இருப்பது போல் மாளிகையில் கொக்கரிக்கும் ஆளுநரை கண்டித்தும்”, (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணி அளவில் பழங்காநத்தம் ரவுண்டானா நடராஜ் தியேட்டர் அருகில் மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி மாணவரணி மருத்துவரணி சார்பில் மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடைபெறுகிறது.

இதில் மதுரை மாவட்டத்தை சேர்ந்த இளைஞரணி மாணவரணி - மருத்துவரணிநிர்வாகிகள்,மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக்கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும்திரளாககலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

### ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில்

# ‘நீட்’ தேர்வுக்கு பயிற்சி பெற்ற 22 மாணவர்கள் தற்கொலை!

## அதிர்ச்சித் தகவல்கள்!

கோட்டாநகர், ஆக. 18-

ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில், நீட், ஐ.ஐ.டி. நுழைவுத்தேர்வு பயிற்சி பெற்று வந்த 22 மாணவர்கள் கடந்த ஓராண்டில் தற்கொலை செய்து கொண்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஐ.ஐ.டி., என்.ஐ.டி. உள்ளிட்ட ஒன்றிய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் பொறியியல் படிப்புகளில் சேர ஜே.இ.இ. நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது.

இதேபோல், மருத்துக் கல்வி பயில்வதற்கு நாடு முழுவதும் நீட் தேவை ஒன்றிய அரசு நடத்தி வருகிறது. இத்தேர்வுகள் மூலம் ஆதாயம் பெறும் நோக்கில் நாடு முழுவதும் பல தனியார் நிறுவனங்கள் பயிற்சி மையங்களை நடத்தி வருகின்றன. இதற்காக லட்சக்கணக்கான ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ராஜஸ்தானில் உள்ள கோடா நகர் இப்பயிற்சி மையங்களின் மையமாக விளங்கி வருகிறது.

இந்நிலையில், கோட்டா நகரில், ஐ.ஐ.டி. நுழைவுத்தேர்வு பயிற்சி பெற்று வந்த பீகாரைச் சேர்ந்த பால்மிகி ஜாங்கிட் என்ற 18 வயது மாணவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். இதேபோல், கோட்டா நகரில் தங்கி ஐ.ஐ.டி. நுழைவுத்தேர்வுக்கு தயாராகி வந்த பீகாரின் சம்பரன் மாவட்டத்தைச் சேர்ந்த மிஸ்ரா என்ற மாணவரும், நீட் தேர்வுக்கு தயாராகி வந்த உத்தரப்பிரதேசத்தின் ராம்பூர் நகரைச் சேர்ந்த மஞ்சோத் சாப்ரா என்ற மாணவரும் 10 நாட்களுக்கு முன் தற்கொலை செய்து கொண்டனர். நீட், JEEE போன்ற நுழைவுத்தேர்வு பயிற்சி நிறுவனங்களின் தலைநகராக அறியப்படும் கோட்டா நகரில், நடப்பாண்டில் மட்டும் 22 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளது தற்போது அம்பலமாகி அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.

### சிவகங்கை மாவட்டத்தில் வேலைவாய்ப்பு முகாம்

# 347 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கி சிறப்புரை!

சிவகங்கை, ஆக. 18-

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரியில், கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, 12.08.2023 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு, தொழில் நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்திய, வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவில் பங்குபெற்று தேர்வான இளைஞர்களுக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், தலைமையில், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ். மாங்குடி முன்னிலையில், பணி நியமன ஆணை மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வங்கி பெருங்கடனுதவி களை, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் வழங்கினார்.

பின்னர் இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:-

தமிழினத்திற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கின்ற வகையில், தமிழகத்தின் அனைத்து துறைகளின் வாயிலாக பல்வேறு நிகழ்வுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

இந்திய திருநாட்டில் இனம், மொழி, மாநில வளர்ச்சி ஆகியவற்றை தனது குறிக்கோளாகக் கொண்டு, தமிழகம் அனைத்திலும் முன்னேற்றம் காணும் வகையில் சிறப்பான நடவடிக்கையை மேற்கொண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். மேலும் நாட்டின் முன்னேற்றம் என்பது கல்வி, பொருளாதாரம் ஆகியவை களை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. இதனை கருத்தில் கொண்டு அனைவரும் தரமான கல்வியினை பெற வேண்டும் என்ற அடிப்படை யில், ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை தரமான முறையில் பெரும் வகையிலும், குறிப்பாக பெற்றோர்களின் சுமையை குறைக்கின்ற வகையிலும், திட்டங்களை செயல் படுத்திய பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இளைஞர்கள் தங்களின் கல்வித் தகுதிக் கேற்றார் போல் வேலை வாய்ப்பினை பெறுகின்ற வகையிலும், தொழில் புரட்சி நிறைந்த மாநிலமாக தமிழகம் விளங்கிட வேண்டும் என்ற அடிப்படையிலும், கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வழியில் தமிழகத்தில் சிறப்பான ஆட்சியினை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், புதிய பன்னாட்டு தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை தமிழகத்தில் ஏற்படுத்தி, அதன் மூலம் இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை களை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். இதுதவிர, இளைஞர்களின் ஆர்வத்தின் அடிப்படையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அவர்களுக்கு வழங்கப்பட்டு, அதன் மூலம் வேலை வாய்ப்பினை பெற்றிடும் வகையில் துறை ரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் இளைஞர்கள் தங்களது கல்வித் தகுதிக்கு ஏற்றார்போல் சிறந்த வேலை வாய்ப்பினை பெரும் வகையில், அரசின் அறிவுரையின்படி தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தனியார் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அதன் மூலம் இளைஞர்கள் வேலை வாய்ப்பினை பெற்று பயன் பெற்று வருகிறார்கள்.

**வேலைவாய்ப்பு முகாம் இளைஞர் திறன் விழா**

அதனடிப்படையில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் ஆகியவைகள் இணைந்து, வேலை வாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழா இன்றைய தினம் சிறப்பாக சிவகங்கை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் சிறப்பாக நடைபெறுகிறது.

இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் மொத்தம் 102 தனியார் தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டு, தங்கள் நிறுவனங்களுக்கு பணியாளர்களை தேர்வு செய்தனர். இம்முகாமிற்கு மாவட்டம் முழுவதுமிருந்து மொத்தம் 2356 வேலைநாடுநர்கள் தங்கள் பெயரை பதிவு செய்து, நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டனர். இதில் 347 வேலைநாடுநர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதில் 13 நபர்கள் மாற்றுத்திறனாளிகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்கண்ட நபர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர மேலும் 266 பேர் இரண்டாம் கட்ட தேர்விற்கு தேர்வு செய்யப்பட்டனர்.

இம்முகாம்களின் மூலம் வேலை வாய்ப்பினை பெறுகின்றவர்கள், கூடுதலாக தங்களது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திடும் வகையில், அரசின் சார்பில் நடத்தப்பட்டு வரும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கு பெறுவதற்கு தங்களை தயார்படுத்திக் கொண்டு, அதன் மூலமும் சிறந்த வேலை வாய்ப்பினைப் பெற்று பயன்பெற வேண்டும். தங்களுக்கான துறையை தேர்ந்தெடுத்து, அதில் சாதித்துக் காட்ட வேண்டும்.

மேலும் இக்கல்லூரியில் மேம்படுத்த வேண்டிய பல்வேறு வசதிகள் குறித்து கல்லூரி சார்பில் தற்போது மனுக்கள் அளித்துள்ளனர். இம்மனுக்கள் தொடர்பாக உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக மகளிர் சுய உதவிக்குழுவிற்கு பயனுள்ள வகையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மொத்தம் 24 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு மொத்தம் ரூ.12,16,60,000 மதிப்பீட்டிலான வங்கிப் பெருங்கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இது போன்று அரசின் நலத்திட்டங்கள் வாயிலாக பயன்பெற்று வரும் பயனாளிகள் தங்களது வாழ்க்கை தர முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அதனை பயன்படுத்திக் கொண்டு பயன் பெறவேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பா.க.அர்விந்த், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி கா.வானதி, காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத்தலைவர் கே.எஸ்.என்.மணிமுத்து, இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) தேவேந்திரன், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்கள் ஆர்.மணிகணேஷ், திருமதி ராஜலெட்சுமி, சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் திருமதி இந்திரா, மானாமதுரை ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, சிவகங்கை நகர் மன்ற துணைத்தலைவர் கார்கண்ணன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திருமதி சாந்தா சகாயராணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் முரசொலி மாறன் 90வது பிறந்தநாள் விழா!

## கு.பிச்சாண்டி- கழக முன்னோடிகள் மாலை அணிவித்து மரியாதை!

திருவண்ணாமலை, ஆக.18-

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 90வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. விழாவில் கலந்து கொண்டு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் கழக முன்னோடிகள், முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

17.08.2023 வியாழக்கிழமை காலை 09.30 மணிக்கு திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 90வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால் தலைமை வகித்தார்.

கழக மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இரா.ஸ்ரீதரன், பொன். முத்து, சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர் ப்ரியா விஜயரங்கன், மாநில தொ.மு.ச பேரவை செயலாளர் க.சௌந்தர ராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகரச் செயலாளர் ப.கார்த்தி வேல் மாறன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

விழாவில் கலந்து கொண்டு மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சரும், திராவிட இயக்க தத்துவ பேராசான் முரசொலி மாறன் அவர்களின் 90வது பிறந்தநாளை முன்னிட்டு, அவருடைய திருவுருவப் படத்திற்கு, சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் கழக முன்னோடிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

விழாவில் மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி. எம்.நேரு, பச்சையம்மன் முத்து, பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யூ.சர்தார் காசிம், எஸ்.டி.ஆர்.எஸ். பாபு ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர்.சந்திரன், த.ரமணன், சி.மாரித்து, கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், பொதுக்குழு உறுப்பினர் கு.பாலசுப்பிரமணி, நகரமன்றத் தலைவர் நிர்மலா வேல்மாறன், துணைத்தலைவர் சு.ராஜாங்கம், நகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவ ரேகா விஜயராஜ், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு பிரபு, ஹக்கிம் சேட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.ஆர். கலைமணி ஜவுளி தினகரன், கே.கந்தன், ஆ.தே.முருகையன், டி.எம்.வெங்கடேஷ், எஸ்.சமயராஜ், மண்டிஏழுமலை, ஆர்.வெங்கடேஷ், ஏ.எம்.பாஷா, கஸ்தூரி, பச்சையம்மாள் யேசு மற்றும் அ.கோவிந்த், க.பிரகாஷ் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சமூக நீதி காத்த தகைசால் தமிழர்!

கோவி.லெனின்
மூத்த பத்திரிகையாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்



கலைஞருக்குப் பிறகான தி.மு.க. பற்றி ஐந்தாண்டுகளுக்கு முன் பல ஆரூடங்கள் வெளிப்பட்டன. அவரது மறைவுக்குப் பிறகு, இயக்கம் எந்தவித பாதிப்புமில்லாமல் முழுமையாக ஒரு தலைமையின் கீழ் அணிவகுத்துப் பயணிக்கிறது.

பெரியாருக்குப் பிறகான திராவிடர் கழகம் பற்றி ஐம்பதாண்டுகளுக்கு முன் பலரும் ஆரூடங்கள் சொன்னார்கள். பெரியாரைப் போல பதவி நாட்டமில்லாமல் பொதுத் தொண்டாற்றுவது கடினமானது. அதில் ஈடுபாடு காட்ட யாரும் வரமாட்டார்கள் என நினைத்தார்கள். 1973ல் பெரியார் மறைந்ததும், மணியம்மையார் அந்த இயக்கத்திற்குத் தலைமையேற்றார். ஒரு நாத்திகபகுத்தறிவு இயக்கத்தைத் தலைமையேற்று நடத்திய முதல் பெண்மணி என்ற பெயரையும் பெற்றார்.



வடமாநிலங்களில் இராம லீலா நடத்தப்படுவதற்கு எதிர் நிலையாக, பெரியார் திடலில் 'இராவண லீலா' நடத்தி இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி வரை கவனத்தை ஈர்த்தவர் மணியம்மையார். இந்திரா காந்தி அம்மையார் ஆட்சிக்கால நெருக்கடி நிலையையும் மணியம்மையார் தலைமையிலான திராவிடர் கழகம் எதிர்கொண்டது. தி.மு.க.வினர், மார்க்சிஸ்ட்டுகள், ஸ்தாபன காங்கிரசார், ஜனசங்கத்தினர் மிசா சிறையில் கைது செய்யப்பட்டது போல, திராவிடர் கழகத்தினரும் கைது செய்யப்படுகின்றனர்.



சென்னை மத்திய சிறையில் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் அன்று ஒரே சிறையறையில் அடைக்கப்பட்டவர் திராவிடர் கழகத்தின் அதிகாரப்பூர்வ நாளேடான விடுதலையின் ஆசிரியர் கி.வீரமணி. பெரியாருக்குப் பிறகும் தி.க. வலிமையாக செயல்பட்டதன் அடையாளமே ஆசிரியர் மீதான கைது நடவடிக்கையாகும். 10 வயதில் பள்ளிச் சிறுவனாக பெரியார் இயக்கத்தின் மேடையில் முழங்கத் தொடங்கியவர் அவர்.

இயக்கத்தில் பற்றுகொண்ட தனது பள்ளி ஆசிரியரின் வழிகாட்டுதலில், மேடையேறி, தலைவர்களின் பாராட்டுகளைப் பெற்று, பெரியாரின் அரவணைப்பில் சட்டப்படிப்பு முடித்து, விடுதலை நாளேட்டிற்கு ஆசிரியராக அவர் பொறுப்பேற்றார். விடுதலைக்கு அண்ணா ஆசிரியராக இருந்திருக்கிறார். குத்தூசி குருசாமி ஆசிரியராக இருந்திருக்கிறார். எழுத்தாற்றலில் வலிமைமிக்க அவர்கள் இருந்த இடத்திற்கு கி.வீரமணியைப் பெரியார் தேர்ந்தெடுத்தார்.




சட்டப்படிப்பு முடித்திருந்த கி.வீரமணி, பெரியாரின் விருப்பப்படி விடுதலை ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். 60 ஆண்டுகளாக அந்தப் பணியைத் தொய்வின்றித் தொடர்ந்து, ஆசிரியர் என்பதையே தனது சிறப்பு அடையாளமாக ஆக்கிக் கொண்டார். பெரியாரின் தொண்டறத்திற்கு இறுதி வரை துணை நின்றது போலவே, பெரியாருக்குப் பிறகான இயக்கத்திற்கு மணியம்மையார் தலைமைப் பொறுப்பேற்ற போதும் தனது பணியை மேற்கொண்டார். நெருக்கடி நிலைக் காலத்தில் சிறையில் சித்ரவதைகளை எதிர்கொண்ட போதும் அவரது கொள்கை உறுதி தளரவில்லை. 1978ல் மணியம்மையார் இறந்த பிறகு, திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் பின்னர் தலைவராகவும் பொறுப்பேற்று வழிநடத்தி வரும் ஆசிரியர் வீரமணி அவர்களின் வயது, 90. அவரது பொதுவாழ்வுக்கு வயது 80.

பகுத்தறிவு சுயமரியாதை சமூக நீதிக்கானப் பயணத்தில் பெரியாருக்குப் பிறகான திராவிடர் கழகம் அரை நூற்றாண்டு காலத்தை கடந்து வந்திருப்பதற்கு காரணம், ஆசிரியரின் அரும்பணியே. பெரியார் உருவாக்கி வைத்த கல்வி நிலையங்கள், அறக்கட்டளைகள் ஆகியவற்றை பல மடங்கு வளர்த்தெடுத்தவர் ஆசிரியர். அதே நேரத்தில், சமுதாய மாற்றத்திற்கானப் பிரச்சார இயக்கமான திராவிடர் கழகத்தின் பரப்புரையைத் தமிழ்நாட்டைக் கடந்து பல மாநிலங்களுக்கும் கொண்டு சென்றார். பிற மாநிலங்களிலும் பல நாடுகளிலும் உள்ள பகுத்தறிவுநாத்திக இயக்கங்களுடன் இணைந்து கருத்தரங்குகள் மாநாடுகளை நடத்தி பெரியாரின்சிந்தனைகளை அங்கெல்லாம் விதைத்தார்.

மூடநம்பிக்கை ஒழிப்புப் பிரச்சாரத்தை இன்றளவும் ஒவ்வொரு மாநாட்டிலும் மேற்கொண்டு வருகிறது திராவிடர் கழகம். மொட்டை கடுதாசி மிரட்டல்கள், வழி மறித்து தாக்குதல்கள், கொலை முயற்சிகள் எனப் பலவற்றையும் எதிர்கொண்ட போதும் ஆசிரியரின் பயணம் தடைப்படவில்லை. இயக்கத்தில் கருத்து வேறுபாடுகள், பிரிவுகள், பிளவுகள் ஏற்பட்டபோதும் பெரியார் பணியைத் தொடர்ந்து தொய்வின்றி மேற்கொள்வதில் திராவிடர் கழகமே முதன்மையானது என்பதை ஆசிரியர் இன்றளவும் நிரூபித்து வருகிறார்.

**திராவிடர் கழகம் தேர்தலில் பங்கெடுக்கும் அரசியல் இயக்கமல்ல. ஆனால், தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கக்கூடிய வாய்ப்புள்ள பெரிய கட்சிகள் திராவிடர் கழகத்தின் பங்களிப்பைப் புறந்தள்ள முடியாது என்ற நிலையை, பெரியாரைத் தொடர்ந்து ஆசிரியரும் தக்க வைத்தது, அரசியல் களத்தில் அவரது வியூகம் நிறைந்த செயல்பாட்டுக்கு சான்றாகும்.**

இந்தியாவில் உள்ள ஓ.பி.சி. எனப்படும் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை வழங்கப் பரிந்துரைத்த மண்டல் கமிஷன் அறிக்கையை 1980 முதல் 1990 வரையிலான காலகட்டத்தில் ஒன்றிய காங்கிரஸ் அரசு நடைமுறைப் படுத்தவில்லை. அந்த 10 ஆண்டுகளும் இடைவிடாமல் தி.க.மாநாடுகளில் மண்டல் கமிஷனுக்கு ஆதரவானத் தீர்மானம் நிறைவேற்றப்படும். அதனை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்திப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.



**பிரதமர் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி ஆட்சியில் 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் நாள் மண்டல் கமிஷன் பரிந்துரைகளின்படி இதர பிற்படுத்தப் பட்டவர்களுக்கு 27% இடஒதுக்கீடு வழங்கப்படும் என நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அதற்கு அடிப்படை காரணம் தேசிய முன்னணியின் அங்கமாக விளங்கிய கலைஞரும், தேசிய முன்னணியை ஆதரித்த ஆசிரியரும் தான். நாடாளுமன்றத்தில் பெரியாரின் பெயரை பெருமையுடன் உச்சரித்தார் வி.பி.சிங். ஓ.பி.சி. இடஒதுக்கீட்டிற்கு எதிராகத் திட்டமிட்டு கலவரங்கள் உருவாக்கப்பட்டபோது, தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு ஆதரவுப் பேரணிகளை வெற்றிகரமாக நடத்தியது திராவிடர் கழகம். இடஒதுக்கீட்டிற்கு எதிரான சட்டரீதியானத் தடைகளைத் தகர்ப்பதிலும் அது முன்னின்றது.**

**50 விழுக்காட்டிற்கு மேல் இடஒதுக்கீடு கூடாது என்கிற உச்சநீதிமன்றத் தீர்ப்பினால், 1989ல் கலைஞர் ஆட்சிக் காலத்திலேயே 69 விழுக்காடு என்கிற அளவை எட்டிவிட்ட தமிழ்நாட்டின் சமூக நீதிக் கொள்கைக்கு ஆபத்து வந்தது. தீர்ப்பு வந்தபோது, தமிழ்நாட்டின் முதலமைச்ச ராக இருந்தவர் ஜெயலலிதா. 69% இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க வேண்டும் என தி.மு.க தலைவர் கலைஞர், பா.ம.க நிறுவனர் ராமதாஸ், பிற சமூக நீதி இயக்கத் தலைவர்கள் போராடினர். அதனை ஆரம்பத்தில் ஜெயலலிதா அலட்சியப் படுத்திய நிலையில், இடஒதுக்கீட்டில் தேவையையும் அது அரசியல் களத்தில் ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தையும் ஜெயலலிதாவுக்குப் புரிய வைத்தவர் ஆசிரியர்தான்.**



31 (சி) பிரிவின்படி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றச் செய்து, அதனை நாடாளுமன்றத்தின் ஒப்புதலையும், குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்று, இந்திய அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் இடம் பெறச் செய்யும் ஆலோசனையை வழங்கியவரும் அவர்தான். ஜெயலலிதா அரசு அந்த ஆலோசனையை செயல்படுத்தி, 69% இடஒதுக்கீட்டினைப் பாதுகாத்தது. அதற்காக திராவிடர் கழகத்தின் சார்பில், ஜெயலலிதாவுக்கு சமூக நீதி காத்த வீராங்கனை என்ற பட்டத்தை ஆசிரியர் வழங்கினார். அது தொடர்பாக, அரசியல் களத்தில் விமர்சன அலைகள் எழுந்தன.

சமூக நீதியைக் காப்பாற்றுவதற்கான ஆலோசனை, அதற்கான சட்ட வரைவு எல்லாவற்றையும் ஆசிரியரே முன்னெடுத்த நிலையில், ஜெயலலிதாவுக்கு எதற்கு சமூக நீதி காத்த வீராங்கனைப் பட்டம் என்ற கேள்விக்கு ஒரு கூட்டத்தில் தன் பதிலை அளித்தார் ஆசிரியர்.

**திராவிடர் கழகம் பதவிக்கு வருகின்ற இயக்கமல்ல. பதவியில் இருப்பவர்களை சமூக நீதியை நிலைநாட்டச் செய்கின்ற இயக்கம். அன்றைக்கு முதல்வராக இருந்தவர் ஜெயலலிதா. பிரதமராக இருந்தவர் நரசிம்மராவ், குடியரசுத் தலைவராக இருந்தவர் சங்கர் தயாள் சர்மா. இந்த மூன்று பார்ப்பனத் தலைமையினையும் பிற்படுத்தப்பட்ட பட்டியலின பழங்குடி மக்களுக்கான இடஒதுக்கீட்டிற்கு ஆதரவாக செயல்பட வைத்தோம். இதுதான் திராவிடர் கழகத்தின் சாதனை. ஏற்கனவே தமிழ்நாட்டில் இருந்த சமூக நீதியைப் பாதுகாத்ததால் ஜெயலலிதா அம்மையாருக்கு சமூக நீதி காத்த வீராங்கனை என்ற பட்டம் அளித்தோம். சமூக நீதி தந்த வீராங்கனை என்று சொல்லவில்லையே என்றார் ஆசிரியர்.**

ஒருகாலத்தில், இடஒதுக்கீட்டை எதிர்த்த இயக்கங்களும் இன்று சமூக நீதியின் பக்கம் நிற்கின்றன என்றால், அதில் முக்கிய பங்களிப்பு ஆசிரியருக்குரியது. பொதுவுடைமை இயக்கங்கள் உள்பட பலவற்றின் சமூக நீதிப் பார்வை தெளிவடைந்திருப்பதற்கு ஆசிரியரின் பரந்துபட்ட முயற்சி ஒரு காரணியாக விளங்குகிறது.

**சமூக நீதிப் பார்வையின் காரணமாக உத்தரபிரதேசத்தில் பெரியார் மேளா கொண்டாடப்பட்டது. டெல்லியில் பெரியார் மையம் உருவானது. வங்கத்திலும், மராட்டியத்திலும் மற்ற பல மாநிலங்களிலும் பெரியாரின் கருத்துகள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. பல பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் அம்பேத்கர்பெரியார் படிப்பு வட்டங்கள் உருவாகியுள்ளன. அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பெரியாரியல் கருத்துகள் சார்ந்த நிகழ்வுகள் நடைபெறுகின்றன.**

**தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப இணையதளம், செயலிகள், காணொளிக் கூட்டங்கள் எனப் பெரியாரை எல்லாத் திசைகளிலும் சுமந்து செல்கிறார் ஆசிரியர். பெரியார் உலகம் உருவாக்குவதும், பெரியாரை உலகமயமாக்குவதும் அந்த 90 வயது இளைஞரின் இலட்சியமாக உள்ளது.**

80 ஆண்டுகாலத் தொண்டறமும், இன்றும் தொடரும் சளைக்காத உழைப்பும், இளைஞர்களுக்கு வழிகாட்டும் சுறுசுறுப்பும் கொண்ட ஆசிரியருக்கு தமிழ்நாடு அரசு தகைசால் தமிழர் விருது வழங்கி சிறப்பித்துள்ளது. விருதுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

நன்றி :
**'மின்னம்பலம்'**
இணையதளம்

தந்தை பெரியார் - புரட்சியாளர் அம்பேத்கர் கருத்துகளை

# தமது பேச்சால் - செயல்களால் வளப்படுத்துகிறார்!

தொல்.திருமாவளவன் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, ஆக. 18-

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், "தமது பேச்சாலும் செயல்களாலும் பெரியார், அம்பேத்கர் கருத்துகளை வளப்படுத்துகிறார், தொல்.திருமாவளவன்" எனப் பாராட்டியுள்ளார்.



முதல்வர் விடுத்த வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**இம்மண்ணில் ஆழ விதைக்கப் பட்டுள்ள தந்தை பெரியார் - புரட்சியாளர் அம்பேத்கர் கருத்துகளைத் தனது பேச்சாலும் செயல்களாலும் வளப்படுத்திடும் அன்புச் சகோதரர் தொல். திருமாவளவன் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கடலில் மூழ்கி உயிரிழந்த நெல்லையைச் சேர்ந்த

# 3 மாணவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 இலட்சம்!

## சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு நேரில் வழங்கினார்!

நெல்லை, ஆக.18-

நெல்லை மாவட்டம் திசையன்விளை வட்டம் கரைச்சுத்துபுதூர் கிராமத்தைச் சேர்ந்த 3 மாணவர்கள் கடற்கரைக்கு (15.08.2023) குளிக்கச் சென்ற போது எதிர் பாராத விதமாக கடல் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இது பற்றிய துயரமான செய்தி கேட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும், அவர்களது உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்து முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 2 லட்சம் வீதம் 6 லட்சம் வழங்க உத்தரவிட்டார்கள்.

அதனை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.

நெல்லை மாவட்டம் திசையன்விளை வட்டம் கரைச்சுத்துபுதூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வராஜ் மகன் ஆகாஷ் (வயது 14) இசக்கியப்பன் மகன் ராகுல் கண்ணன் (வயது 14) மகாலிங்கம் மகன் முகேஷ் (வயது 13) ஆகிய மூன்று பள்ளி மாணவர்களும் கடற்கரைக்கு குளிக்கச் சென்ற போது எதிர்பாராத விதமாக கடல் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இது பற்றிய துயரமான செய்தி அறிந்ததும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை, ஆறுதலையும் தெரிவித்து அவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூபாய் 2 லட்சம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டார்கள்.

அதன்படி நெல்லை மாவட்டம் திசையன்விளை வட்டம் கரைச்சுத்து புதூர் கிராமத்தில் இறந்த மாணவர்களின் இல்லத்திற்கு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு நேரில் சென்று அச்சிறுவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து தலா ரூபாய் 2 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.

அப்போது இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி,வட்டாட்சியர் முருகன் நவ்வலடி ஊராட்சி தலைவர் ராதிகா சரவணன்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

# தி.மு.க. மாநில கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம், திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" 24.8.2023 வியாழக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில், எனது தலைமையில், துணைத் தலைவர்கள் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம், செயலாளர்கள் மா.உமாபதி, அர.திருவிடம், இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், என்.தில்லைசெல்வம், துணைச் செயலாளர்கள் சி.வீராகணேசன், கவிஞர் நன்மாறன், எழில்மாறன், மீனா ஜெயக்குமார், சி.கோபி, ஜாகிர் உசேன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்** : தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி, தமிழ்நாடு முழுவதும் தலைவர் கலைஞர் அவர்கள் திரைக்கதை வசனம் எழுதிய திரைப்படங்களை மாவட்டந்தோறும் காட்சிப்படுத்துதல் மற்றும் கலைஞர் எழுதிய திரைப்பட வசனங்கள் மற்றும் கவிதை ஒப்பித்தல் போட்டிகள் நடத்துவது - குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை



வேலூர் மண்டலம் 3 தி.மு.க இளைஞரணி மாவட்ட மாநில மாநகர நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. பேசினார். உடன் மண்டலம் 3 பொறுப்பாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட அவை தலைவர் தி.அ. முகமது சகி, திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, ராணிப்பேட்டை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., வேலூர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.ராஜ மார்த்தாண்டன், துணை அமைப்பாளர் அர்ச்சனா நவீன்சங்கர், திருப்பத்தூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீ.வடிவேல், வேலூர் ஒன்றிய செயலாளர் சி.எல்.ஞானசேகரன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ரவிக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அவாளுக்கு இவாள் பதில்!...

**நேற்றைய தொடர்ச்சி**

**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக்குழுத் தலைவர்



இதுகுறித்து சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வாஜ்பாய் பேசினார். பின்பு செய்தியாளர்களுக்கும் பேட்டி அளித்தார். "ஜெயலலிதா நிபந்தனைகள் பல விதித்துத் தொந்தரவுகள் கொடுத்தார். அதனை நிறைவேற்றும்படி நெருக்கடி கொடுத்தார். நாங்கள் அதனை எதிர்பார்க்கவில்லை. ஜனாதிபதியிடத்தில் ஆட்சி அமைக்கக் கடிதம் கேட்டும், நீண்ட மிகுந்த கால தாமதம் ஆன பின்பே, அவர் கடிதம் கொடுத்தார். சுதந்திர தின கொண்டாட்டம் உட்பட பல்வேறு சமயங்களில், ஆதரவு வாபஸ் பெறுவோம் என்கிற மிரட்டலை ஜெயலலிதா விடுத்தார். ஒரு மாபெரும் விலையுடன்தான் அ.தி.மு.க. ஆதரவு எங்களுக்குக் கிடைத்தது என்பதை விரைவில் நாங்கள் உணர்ந்தோம். கலைஞரின் அரசைக் கலைக்க வேண்டும் என்பதுதான் அந்த விலை. அது மட்டும் அல்ல; பல ஊழல் வழக்கிலிருந்து ஜெயலலிதாவை மத்திய அரசு விடுவிக்க வேண்டும் என்பதும் அவருடைய நிபந்தனையாக இருந்தது அந்த விலையைக் கொடுக்க நாங்கள் மறுத்தோம். மிரட்டலுக்கு அடிபணிந்து கொள்கைகளை விட்டுக் கொடுக்க நாங்கள் விரும்பவில்லை. " (குமுதம் 2009 - 1999).

அதற்குப் பிறகு தி.மு.கழகத்தின் ஆதரவு கேட்டு வாஜ்பாய் கலைஞரை அணுகி 1999 ஆம் ஆண்டு தேர்தலில் கூட்டணி கண்டு வென்றார். வாஜ்பாய் பிரதமராகி, சென்னை வந்து கடற்கரைக் கூட்டத்தில் பேசும்போது, ".... எனக்கு முன்னாலும், ஒரு மகத்தான ஒற்றுமையையும், உறுதிப்பாட்டையும் நான் பார்க்கிறேன். இங்கே தமிழ்நாட்டில் தி.மு.க. தலைவர் கலைஞர் தலைமையில் இயங்குகின்ற கூட்டணியைக் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஒற்றுமையும், ஒருமைப்பாட்டையும் நான் பார்க்கிறேன். இது யாரால் சாத்தியமாயிற்று என்றால், தி.மு.கழகத்தின் உயர்ந்த தலைவர் தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் கலைஞர் அவர்கள்தான். எங்கள் அரசைக் கவிழ்ப்பதற்கு முயற்சி மேற்கொண்ட நேரத்தில்,இதே தமிழ்நாடுதான் எங்களுக்கு உதவிக்கு வந்தது. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. "உற்ற நேரத்தில் உதவுகிறவன் தான், உண்மையான நண்பன்" அந்தப் பழமொழியை நான் இன்று கலைஞரிடத்தில் நினைவு கூர்கிறேன்" என்று பெருமைப்பட கூறிய செய்திகள் எல்லாம் இன்றைய ஒன்றிய அமைச்சர் நிர்மலாக்களுக்குத் தெரியுமா? பொண்ணு ஊருக்குப் புதுசு போல நேற்றைய அரசியல் தெரிவதற்கு நியாயமில்லை.

ஜெயலலிதா பற்றிக் கவலைப்படும் அதே நேரத்தில், அம்மா ஆட்சியில் தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன்கள் போன்றோர் மீது தடா வழக்கு பாச்சப் பட்டும், செரினாக்கள் மீது கஞ்சா வழக்கு புனையப்பட்டும் பொய் வழக்குகளில் பல ஆண்டுகளாகச் சிறையில் தள்ளியபோது, இவர்கள் எல்லாம் பெண்கள் என்று நிர்மலா சீதாராமன்களுக்குத் தெரியாமல் போனது ஏன்?

அ.தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகுகள் மூத்தவர்கள் என ஆண்களாக இருந்த போதும், அம்மாவின் காலில் விழுந்து ஆசி பெற்றதைப் பா.ம.க.வைச் சோந்த அன்புமணி இராமதாசு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால், அவர்கள் "டயர் நக்கிகள்" என்றும், துக்ளக் குருமூர்த்தி வார்த்தையில் கூற வேண்டுமென்றால், "ஆண்மையற்றவர்கள்" (Impotent) என்றும் கூறுவதையெல்லாம் ஜெயலலிதாவின் பெண் ஆளுமை என்று அவாள்கள் பாராட்டுவார்களா?

'ஜெயலலிதா'வினுடைய சேலையை உருவிச் சட்டமன்றத்தில் அவமானப்படுத்தினார்கள்? என்றெல்லாம் பொய் கூறி பெண்ணுக்காக அனுதாபத்தைத் தேடும் நிர்மலாக்கள், காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தியை 2004 மார்ச் மாதத்தில், அதே ஜெயலலிதா தனி மனித தாக்குதல்கள் நடத்தினாரே... "சோனியா காந்தி ஓர் அரசியல் அரைவேக்காடு, அரசியல் அறியாத கத்துக்குட்டி.. வெளிநாட்டுக்காரி ...சிலை கடத்தியவர்.." என்று இழித்தும், பழித்தும் தனிமனிதத் தாக்குதல் விமர்சனம் செய்தாரே ஜெயலலிதா: அப்பொழுது ஒரு பெண் மணியை இப்படி எல்லாம் பேசலாமா ? என்று பாராளுமன்றத்தில் குழாயடிச் சண்டை போல், வாய் கிழியப் பேசிய அவாளுக்குத் தோன்றாதது ஏன்?

அதே ஜெயலலிதா ஆட்சியில் 1992ஆம் ஆண்டு வாச்சாத்தியில் சந்தனக்கடத்தல் வீரப்பனைப் பிடிக்கிறோம் என்று கூறி, வனத்துறை வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகளும் சேர்ந்து விசாரணை என்ற பெயரால் அழைத்துச் சென்று 18 மலைவாழ் பெண்களைக் கதற கதற கற்பழித்தார்கள் அந்தக் கொடுமைகள் நிகழ்த்திய ஜெயலலிதா ஆட்சியில் ஏற்பட்ட பெண்களின் நிலை பற்றிப் பாராளுமன்றத்தில் நிர்மலா சீதாராமன்கள் பேசத் தயாரா? பாவம் அவர் புதிதாக பதவி ஏற்றிருக்கும் அவருக்கு பழைய வரலாறு தெரியாது.

2000ஆம் ஆண்டு பிப்ரவரி 2 அன்று, தனி நீதிபதி இராதாகிருஷ்ணன், ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்கு ஒன்றில் (கொடைக்கானல் வளர்ச்சிக் கட்டுப்பாட்டை மீறி பிளசண்ட் ஸ்டே ஓட்டல் கட்டமுறைகேடாக அனுமதி) ஒரு ஆண்டு சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பு கூறியிருந்தார். ஜெயலலிதாவுக்குத் தண்டனை தந்திருந்த செய்தியறிந்து அ.தி.மு.க.வினர் கோவையில் இருந்து வேளாண்மை கல்லூரி மாணவிகள் வந்த பேருந்தை மடக்கி, தருமபுரி கிருஷ்ணகிரி அருகே இலக்கிய பட்டி எனும் ஊரில் தீ வைத்து கொளுத்தினார்கள். அதில் பயணம் செய்த அப்பாவி மாணவிகளான நாமக்கல் கோகிலவாணி, விருத்தாசலம் காயத்ரி, சென்னை ஹேமலதா போன்ற மூன்று மாணவிகள் உயிருடன் எரிந்து சாம்பலாயினர். 17 மாணவிகள் கடும் தீக்காயத்துடன் உயிருக்குப் போராடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால்.. சாவுக்கு காரணமான அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஆயுள் தண்டனைக் குற்றவாளிகள் சிறையில் இருந்து இடையிலேயே கருணை அடிப்படையில் அ.தி.மு.க. ஆட்சியில் எடப்பாடி அரசு விடுவித்துள்ளது செத்துப்போன, காயம்பட்டவர்களெல்லாம் பெண்கள் இல்லையா? இதெல்லாம் பெண்களுக்குக் காட்டப்பட்ட கருணை ஆட்சி என்று சொல்ல முடியுமா?..

துணை பிரதமராகவும் உள்துறை அமைச்சராகவுமிருந்த பா.ஜ.க. தலைவர் அத்வானியை 'செலெக்ட்டிவ் அமினிசியா', என்று விமர்சனம் செய்த ஜெயலலிதாவுக்கு என்ன பட்டம் தந்து அந்த ஒன்றிய மந்திரி அம்மையார் பாராட்டு தெரிவிப்பார்?

பா.ஜ.க. கட்சியில் எம்.பி.யாக இருப்பவர் சுப்பிரமணியன்சாமி, நிர்மலா சீதாராமன்களை அவ்வப்போது "நிதித் துறை அமைச்சராக இருப்பதற்கு தகுதியற்றவர்; பொருளாதாரம் பற்றி ஒன்றும் தெரியாதவர்; அவர் மோடியின் கீழ் அடிமை வேலை செய்யும் பணியாளர். "இப்படி அடிக்கடி விமர்சனம் செய்து கொண்டிருப்பவர் சுப்பிரமணிய சுவாமி.. அவரோடு முன்பு ஜனதா கட்சியில் இருந்த பெண்மணியான சந்திரலேகா ஐ.ஏ.எஸ்.மீது அவருடைய அழகிய முகத்தைக் கருக்குவதற்கு ஆசிட் வீச்சு ஜெயலலிதா ஆட்சியில் வீசப்பட்டதே. அதெல்லாம் நினைவுக்கு வருகிறதா நிர்மலாக்களே..?....

### நிர்மலா சீதாராமன் முதலில் தன் கணவர் வரகலா பிரபாகர் கூறும் அறிவுரை கேட்கட்டும்!

"மோடி ஆட்சி, தலைப்புச் செய்திகளில் இடம் பிடிப்பதில் இருக்கும் ஆர்வம், கள நிலவரத்தைச் சமாளிப்பதில் ஒன்றிய அரசுக்குத் துளியும் அக்கறை இல்லை; அரசின் பொருளாதாரத்தை மீட்பதற்குக் கையாலாகாத் தனம் தெளிவாகத் தெரிகிறது. பிரதமர் மோடி மக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டார். 2024 ஆம் ஆண்டில், மீண்டும் மோடி ஆட்சிக்கு வந்தால், ஒன்றிய அரசு பேரழிவைச் சந்திப்பது உறுதி. ஆட்சியில் பொருளாதாரம் மிக மோசமாகிவிட்டது, என்று ஆம் எழுதிய (The Crooked Timber of New India Essays on A Republic in Crisis) ஸ்பீக்கிங் டைகர் வெளியீடு எனும் நூலில் பொருளாதார நிபுணர் பரகலா பிரபாகர் கூறியுள்ளார். இவர் வேறு யாரும் அல்லர். மாமேதை நமது நிதித் துறையைக் கையாளும் நிர்மலா சீதாராமன் கணவர் தாம். முதலில் மோடியின் சீடரான நிர்மலா, இவரின் கேள்விகளுக்குப் பதில் கூறட்டும்,

இன்றைய (13.08.23) தினமலர் ஏட்டில் நிர்மலா சீதாராமன் சொன்ன கூற்றை வழிமொழிந்து, நானும் இருக்கிறேன் என்ற முறையில் ஒரு அம்மையார் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அடுத்து சந்தடி சாக்கில் சசிகலாக்கள் சாட்சி கூற புறப்பட்டுள்ளனர். இதைப் போல அறிக்கைப் புழுகர்களான 'இ.பி.எஸ்., ஓ.பி.எஸ்.'களும் வரலாறு பேச ஆரம்பித்துள்ளனர். அவர்களுக்கு நாம் எடுத்து வைக்கும் கேள்வி இதுதான். அப்பல்லோ மருத்துவமனையில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 2016ஆம் ஆண்டு, செப்டம்பர் 22ஆம் தேதி அனுமதிக்கப்பட்டார். அவர் சிகிச்சை பெற சேர்ந்த நாளிலிருந்து டிசம்பர் 5ஆம் தேதி இறக்கும் வரை அவருக்கு அளித்து வந்த சிகிச்சை முறைகளை முதலமைச்சர் என்ற முறையில் வெளிப்படையாக பொதுமக்களுக்கு ஏன் தெரியப்படுத்தாமல் மூடி வைப்பதற்குக் காரணமானவர்கள் யார் என்பதை அ.தி.மு.க.காரர்களுக்குக் சொல்லட்டும்?.... இருட்டுக்குள் முடக்கி வைத்தது யார்? டிசம்பர் 5ஆம் தேதி வரை அவரை நேரடியாக வந்து பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்படக் காரணம் யார்? அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு அறிக்கை விட்டு தன்னைப் பெரியாளாக காட்டிக் கொள்கிறார்களா?

தஞ்சை, அரவக்குறிச்சி, திருப்பரங்குன்றம் ஆகிய 3 இடைத்தேர்தல்கள் அ.தி.மு.க. வேட்பாளர்களின் நிறுத்துவதற்கான ஏ.பி. பாரத்தில் அவர் விரல் ரேகை பதிவு செய்தவர்கள் யார்? ஒன்றிய அமைச்சர், ஆளுநர்கள்,அண்டை மாநில முதல்வர்கள், அமைச்சர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் என முக்கிய பிரமுகர்கள் எல்லாம் வந்தவர்களை நேரில் சந்திக்க விடாமல் அனுப்பப்படக் காரணமாக இருந்தவர்கள் யார்? யார்? ஜெயலலிதா மீது அக்கறை இருக்குமானால், அவரை வெளிநாட்டுக்குக் கொண்டு சென்று, தகுந்த சிகிச்சை அளிக்காததன் மர்மம் என்னஎன்பதை அம்பலத்தில் ஏறிச் சொல்ல முடியுமா? ஆறுமுகசாமி விசாரணை கமிஷன் கூறிய பல்வேறு தரவுகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். அப்படிப்பட்ட நபர்களெல்லாம் நிர்மலாக்களுக்கு சப்பைக்கட்டுக் கட்டுகிற விதத்தில் இன்றைக்கு அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜெயலலிதாவின் சாவுக்குக் காரணம் என்று எவர் மீது குற்றம் சுமத்தினார்களோ. அப்படியே அதற்கான காரணங்கள் இருக்கின்றன. பரப்பன அக்ரஹார சிறையில் சிறை கைதியாக சென்றவர்கள் அங்கு இருப்பவர்கள் எல்லாம் பணபரிமாற்றம் மூலம் மடக்கி மாறுவேடத்தில் வெளியில் சென்று உதவி திரும்பிட உதவிய செய்திகளை எல்லாம் ரூபா என்ற அதிகாரி பதிவு செய்ததை மறந்து விட முடியாது. அந்த வரலாற்றை முதலில் கூறட்டும்.

சட்டமன்றத்தில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆருடைய படத்திறப்பு விழா நடந்தபோது, தலைமைச் செயலகம் கோட்டையைச் சுற்றி ஜெயலலிதாவினுடைய படம் தாங்கிய கட்அவுட்டுகள் தான் வைக்கப்பட்டிருந்தன. அதில் எம்.ஜி.ஆர். படமே இல்லை. அவ்விழாவிற்கு சட்டமன்ற பிதாமகனாகவும், பலமுறை முதல்வராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த கலைஞருக்கு அழைப்பு ஏதும் இல்லை.

அத்துடன் எம்.ஜி.ஆர். அவர்களின் துணைவியார் முன்னாள் முதல்வர் வி.என். ஜானகிக்குப் பங்கேற்க எந்தவித அழைப்பும் அனுப்பப்படவில்லை. படத்திறப்பு விழாவின் போது, அவைத் தலைவர் நாற்காலியில் ஜெயலலிதா ஏறி அமர்ந்து கொண்டார். அவரின் இருக்கைக்கு வலப்புறம் அவை முன்னவரும், இடப்புறம் அவைத் தலைவரும் அமர்ந்து கொண்டார்கள். ஆனால், அவையில் உறுப்பினரே இல்லாத ஒருவர் ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரி என்று சொல்லப்படுபவர் சசிகலா துணை சபாநாயகர் நாற்காலியில் ஏறி அமர்ந்து கொண்டார் என்று சொன்னால் அவர் யாராக இருக்க முடியும் என்பதை மக்களே யூகித்துக் கொள்ளட்டும்.

அவர்தான் தமிழ்நாடு சட்டசபையில் ஜெயலலிதாவுக்கு எதிராக 1989 மார்ச் 25ஆம் தேதி வன்முறைகள் நடைபெற்றதாகத் தன்னிடத்தில் ஜெயலலிதாவே சட்டமன்ற நிகழ்வுகளைக் கூறியதாக உண்மைக்கு மாறான செய்திகளைச் சொல்லி உள்ளார். என்ன நடந்தது என்பதை அ.தி.மு.க.வில் இருந்தவர் பி.எச்.பாண்டியன், க. திருநாவுக்கரசு, போன்றவர்களே சட்டமன்றத்தில் பேசிய பதிவு கள் சாட்சியங்களாக இருக்கின்றன. இப்பொழுதும் சென்று உண்மை செய்திகளைப் படித்துப் பார்த்துக் கொள்ளலாம். ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன்கள், தற்போது, நானும் இருக்கிறேன் என்ற அறிக்கையை விட்டு அ.தி.மு.க.வில் நுழைய ஆழம் பார்த்து, முயற்சியில் தோற்றுப் போயிருக்கும் புதிய அரசியல்வாதியான அம்மையாருக்கும் இந்தச் செய்திகள் பதிலாக இருக்கும் என்று நம்புகிறேன்.

கர்நாடக மாநில பரப்பன அக்ரஹாரச் சிறை விதிகளை எல்லாம் மீறி, அதிகாரிகளுக்கு இலட்சக்கணக்கில் பணத்தைக் கொடுத்து வெளியில் சென்று திரும்பி வந்த முறைகேடு செய்திகளை எல்லாம் "ரூபா," என்ற விசாரணை அதிகாரி பதிவு செய்து கொடுத்த அறிக்கையை மறந்துவிட முடியாது.

வரலாறு காணாத வகையில் ரூ. 100 கோடி செலவில் வளர்ப்பு மகன் திருமணம் என்ற பெயரில், இங்கிலாந்து எலிசபெத் இராணி கூட நடத்தாத படோடோப விழாக்களை, ஊர்வலங்களை நடத்தியவர்கள்; நகைக்கடைகளை உடலெங்கும் இருப்பதாகக் காட்டிக் கொண்டவர்கள். அல்லவா? இன்றைக்கு அறிக்கை விட்டு அம்பலத்தில் வந்திருக்கிறார்கள்; சட்டமன்றத்தில் வன்முறை நிகழ்த்துவதற்குத் தூண்டுகோலாகத் தோன்றியவர்களும், நடத்தியவர்களும் யார்? யார்? என்பது அன்றைய பதிவுகளே சாட்சியங்களாக இருக்கின்றன. தெலுங்கானா மற்றும் புதுவை ஆளுநர் தமிழிசைகள் தானும் செய்தி அறிந்ததாகச் சொல்லுகிறார். இவர் ஆளுநராக இருப்பதைக் காட்டிலும், வெளியே வந்து மீண்டும் அரசியல்வாதியாக மாறிவிடலாம். பாரதிய ஜனதா கட்சியை எப்படி எல்லாம் வளர்க்கலாம்' என்று பொய் உரம் போட்டு முள் செடியை வளர்க்க முயற்சி செய்கிறார்கள். புதுவை முதலமைச்சர் ரங்கசாமிதான் எதுவும் மக்களுக்கு செய்ய முடியவில்லை என்று ஆதங்கப்படுகிற நிலையில், தெலுங்கானா சட்டமன்ற மசோதாக்களையும், மக்கள் நலத்திட்டங்களை எல்லாம் முடக்கிப் போடும் நபர்கள் எல்லாம்; இன்று ஆர்.எஸ்.எஸ். வகுப்பு எடுக்கப் புறப்பட்டு விட்டார்கள். கலைஞர் கொடுத்த மருத்துவ ஒதுக்கீட்டில் படித்தவர்கள் எல்லாம் பொய்யுரை கூற புறப்பட்டுவிட்டார்கள்.

நடக்காத செயலை சம்பவத்தைக் கூறிச் சட்டசபையில் வன்முறை நாடகம் நடத்திய ஜெயலலிதாவை அவமானப்படுத்தப்பட்டதாகக் கூறும் அம்மா நிர்மலா சீதாராமன்களே., தமிழிசைகளே. சசிகலாக்களே.. இதற்குப் பதில் சொல்லுங்கள்.. இப்படி மாணவிகளை உயிரோடு வைத்துக் கொளுத்தப்பட்ட சம்பவத்திற்குப் பெயர் பெண்களுக்குக் காட்டிய பரிவா.. பாசமா?



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2023) மதுரையில், பல்வேறு சமூக நலப் பணிகளை ஆற்றி வரும் மதுரை தத்தநேரியைச் சேர்ந்த சுயதொழில் புரிந்து வரும் ராஜேந்திரன் அவர்களை அழைத்து சிறப்பித்து, மதுரை மாநகராட்சி, திரு.வி.க. மேல்நிலைப் பள்ளிக்கு 10 வகுப்பறைகள், இறைவணக்க கூட்ட அரங்கம், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகியவற்றை 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து தந்தமைக்காகவும், இந்த ஆண்டு மதுரை மாநகராட்சி, கைலாசபுரம் ஆரம்பப் பள்ளியில் 4 வகுப்பறைகள், ஒரு ஆழ்துளை கிணறு, உணவு அருந்தும் இடம், கழிப்பறைகள் ஆகியவற்றை 71 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் அமைத்து தந்தமைக்காகவும், மேலும் பல்வேறு சமூக பணிகளை மேற்கொண்டு வருவதற்காகவும் தனது வாழ்த்துகளை தெரிவித்து, சால்வை அணிவித்து, அவருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை வழங்கி பாராட்டினார்.

## வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

புதுடெல்லி, ஆக. 18 –

வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவாகிறது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் மேற்கு பருவமழை தொடங்கியதிலிருந்தே வடமாநிலங்களில் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. தென் மேற்கு பருவமழையால் மிகவும் மோசமான பாதிப்புகளை வடமாநிலங்கள் எதிர்கொண்டுள்ளன. தமிழகத்திலும் ஒரு சில இடங்களில் அவ்வப்போது மிதமான மழை முதல் கனமழை பெய்து வருகிறது.

இந்த நிலையில், வடக்கு வங்கக்கடல் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் நாளை குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்காலில் 7 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



பின்னணிப் பாடகர் “கலைமாமணி” டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, நேற்று முன்தினம் (16.8.2023) மதுரை, முனிச்சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள “கலைமாமணி” டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர்.

### பல்வேறு சமூக நலப்பணிகளை ஆற்றிவரும் - மதுரை

# தத்தநேரி ராஜேந்திரனுக்கு முதல்வர் வாழ்த்து!

### முத்தமிழறிஞர் கலைஞர் சிலையை வழங்கி பாராட்டினார்!

மதுரை, ஆக. 18–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2023) மதுரையில், பல்வேறு சமூக நலப் பணிகளை ஆற்றி வரும் மதுரை தத்தநேரியைச் சேர்ந்த சுயதொழில் புரிந்து வரும் ராஜேந்திரன் அவர்களை நேரில் அழைத்து பாராட்டினார். அப்போது, அவருக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டதோடு, சால்வை அணிவித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையையும் வழங்கி சிறப்பித்தார்.

மதுரை தத்தநேரியைச் சேர்ந்த ராஜேந்திரன் அவர்கள் திருப்பதி விலாஸ் என்ற பெயரில் மிளகாய், வத்தல், வடகம் வியாபாரம் செய்து வருகிறார். சமூகப் நலப் பணிகளில் ஆர்வம் கொண்ட அவர், மதுரை மாநகராட்சி, திரு.வி.க. மேல்நிலைப் பள்ளிக்கு 10 வகுப்பறைகள், இறைவணக்க கூட்ட அரங்கம், இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகியவற்றை 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து தந்துள்ளார். மேலும், இந்த ஆண்டு மதுரை மாநகராட்சி, கைலாசபுரம் ஆரம்பப் பள்ளியில் 4 வகுப்பறைகள், ஒரு ஆழ்துளை கிணறு, உணவு அருந்தும் இடம், கழிப்பறைகள் ஆகியவற்றை 71 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் அமைத்து தந்துள்ளார். மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் அருகில் உள்ள புது மண்டபத்தை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணிக்கு 2 கோடி ரூபாய் வழங்குவதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

சமூக அக்கறையோடு தொண்டாற்றி வரும் ராஜேந்திரன் அவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராட்டி, அவரது சமூக நலப் பணிகள் தொடர்ந்திட வாழ்த்தினார்.



முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாக விளங்கியவரும் – ‘திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாகச் செயல்பட்டவரும் – மத்திய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 90வது பிறந்த நாளினை முன்னிட்டு நேற்று (17.8.2023 வியாழக்கிழமை) காலை சென்னை – கோடம்பாக்கம், ‘முரசொலி’ அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் திருவுருவச் சிலைக்குக் கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு கழகப் பொதுச்செயலாளர் – நீர் வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். மு.க.தமிழரசு, ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி., அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், க.இராமச்சந்திரன், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் இரா.கிரிராஜன், மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு எம்.சி., மயிலை த.வேலு எம்.எல்.ஏ., முரசொலி பொது மேலாளர் எஸ்.இராஜசேகரன் மற்றும் கழக முன்னணியினர், நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் தனி பணியாளர் - நினைவில் வாழும்

# கரு. செயல்மணி இல்லத் திருமண விழா! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - முரசொலி செல்வம் - தயாநிதி மாறன் எம்.பி. - மு.க.தமிழரசு வாழ்த்துரை!

*சென்னை, ஆக.18-*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தனி பணியாளர் நினைவில் வாழும் கரு.செயல்மணி - திருமதி செ.செல்வமணி ஆகியோரின் மகள் வழிப் பெயர்த்தியும், சிவகங்கை - சிங்கம்புணரி நினைவில் வாழும் சே. சேவற் கொடியோன் - சே. தெய்வானை ஆகியோரின் மகன் வழிப் பெயர்த்தியும். சே. கோவலன் - அஞ்சுகம் கோவலன் ஆகியோரின் புதல்வியுமான டாக்டர் கண்மணி கோவலனுக்கும், அவினாசி வேலாயுதம் பாளையம் சிட்டுச்சாமி (எ) எல்.கிருஷ்ணசாமி - தனலட்சுமி ஆகியோரின் புதல்வர் பொறியாளர் கே. வருண்குமாருக்கும் மணவிழா 21.8.2023-திங்கள்கிழமை காலை 9.15 மணியளவில் சென்னை, அண்ணா நகர் டி.கே.மஹாலில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன் நடைபெறுகிறது.*

*இம்மணவிழாவை கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.*



*சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு முன்னிலை வகிக்கிறார்.*

*இம்மணவிழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், முரசொலி செல்வம், தயாநிதி மாறன் எம்.பி., மு.க. தமிழரசு, எம்.கே. மோகன் எம்.எல்.ஏ., டி.கே.எஸ். இளங்கோவன், இராம அருணகிரி, பூச்சி எஸ். முருகன், பரமசிவம், எம்ஆர்.பி.எம். காமராஜ், ஐ.சி.எப். சங்கர், புஜ்ஜி எஸ்.மோகன், உள்ளிட்ட கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*கே.கோவலன், அஞ்சுகம் கோவலன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

### அமைச்சர் தா.மோ.அன்பரசனின் உதவியாளர் - ‘முரசொலி’ மூத்த நிருபர்

# காஞ்சி கே.சம்பத் இல்ல மணவிழா!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது!

*காஞ்சிபுரம், ஆக.18-*

*அமைச்சர் தா.மோ.அன்பரசனின் உதவியாளரும் - காஞ்சிபுரம் மாவட்ட முரசொலி மூத்த நிருபருமான காஞ்சி கே. சம்பத் - கௌரி சம்பத் ஆகியோரின் புதல்வர் கே.எஸ். செந்தில் முருகேசனுக்கும், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், கீழ் கொடுங்காலூர் கிராமம் கி.ரவி - ஆர்.முல்லை ஆகியோரின் புதல்வி ஆர்.*



*பூங்கோதைக்கும் மணவிழா 21.8.2023 - திங்கள்கிழமை காலை 9.00 மணியளவில் காஞ்சிபுரம் செவிலிமேடு பாலாறு மேம்பாலம் அருகில், வந்தவாசி சாலையில் அமைந்துள்ள சுகுமாரி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*இம்மணவிழாவை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் - குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.*

*இம்மணவிழாவில் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர், மாவட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*காஞ்சி கே. சம்பத் - கௌரி சம்பத் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

### சந்திரயான் 3 விண்கலம்:

# லேண்டர் தனியாகப் பிரிந்தது!

ஸ்ரீஹரிகோட்டா, ஆக. 18 –

‘சந்திரயான்3’ விண்கலம் 40 நாள் பயணமாக புவி சுற்று வட்டப் பாதையை கடந்து, நிலவு சுற்று வட்டப்பாதையின் இறுதி கட்டத்தை எட்டி உள்ளது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து எல்.வி.எம்.3 எம்4 ராக்கெட்டில், ‘சந்திரயான்3’ விண்கலத்தை கடந்த மாதம் 14ந் தேதி நிலவின் தென் துருவ ஆய்வு பணிக்காக வெற்றிகரமாக அனுப்பியது.

‘சந்திரயான்3’ விண்கலம் 40 நாள் பயணமாக புவி சுற்று வட்டப் பாதையை கடந்து, நிலவு சுற்று வட்டப்பாதையின் இறுதி கட்டத்தை எட்டி உள்ளது. இதனை பெங்களூருவில் உள்ள தரைகட்டுப்பாட்டு மையத்தில் இருந்து விஞ்ஞானிகள் கண்காணித்து வருகின்றனர்.

தற்போதைய நிலையில், ‘சந்திரயான் 3’ 100 கிலோ மீட்டர் தொலைவிலான நிலவு அடுக்குக்குள் கொண்டு வரப்பட்டு உள்ளது. இந்த நிலையில் திட்டமிட்டபடி 23ந் தேதி மாலை 5.47 மணிக்கு நிலவின் தென் துருவத்தில் ‘சந்திரயான்3’ விண்கலம் தரையிறங்க இருக்கிறது.

இந்த நிலையில், ‘சந்திரயான்3’ விண்கலத்தில் உள்ள உந்துவிசை கலனில் இருந்து விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக பிரிந்ததாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. பிரிக்கப்பட்ட உந்துவிசை கலன் & லேண்டர் நிலவில் மேற்பரப்பில் நிறுத்தப்பட்டு ள்ளது. அதன்பிறகு இரண்டும் தனித்தனி பயணங்களை தொடங்கும்.




# திராவிட சினிமா

**19**

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**



படங்கள் உதவி : ஞானம்

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

# உள்நாட்டு முரண் பேசிய ‘அரசிளங்குமரி!’

*1946* -ஆம் ஆண்டில் தொடங்கிய கலைஞர், எம்.ஜி.ஆர், ஜூபிடர் பிக்சர்ஸ், ஏ.எஸ்.ஏ.சாமி கூட்டணி 15 ஆண்டுகள் கடந்தும் பணியாற்றி 1961-ஆம் ஆண்டு ஜனவரியில் வெளிவந்தது ‘அரசிளங்குமரி’ திரைப்படம்.

ஜி.ராமநாதன் இசையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின், **‘சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா’** போன்ற அற்புதமான பாடல்களைக் கொண்ட வெற்றிப்படம். தமிழ்ப் புனைவு வரலாற்றுத் திரைப்படங்கள் அநேகமாக அறுகிப் போன காலத்தில் வெளியானது இந்தத் திரைப்படம்.

## புனைவுகளும் வரலாறுகளும்

திராவிட வரலாற்றுப் புனைவுகள், திரைப் படங்களின் தேவை கருதி உருவாக்கப்பட்டவை. திராவிட நாடக மேடைகளில், பெரும்பாலும் அரசர் காலத்து வரலாற்றுப் புனைவுகள் அநேக மாக இல்லை. மேடை நாடகங்கள் சமகாலச் சமூக நிகழ்வுகளையே பேசின.

திராவிடத் தமிழ்ப் புனைவு வரலாறுகளில் வரும் நாடுகள் பெரும்பாலும் தொல் தமிழ் பழம் நாடுகளாகப் பகுக்கப்பட்ட முல்லை, மருதம், நெய்தல் போன்றவையாகவே இருந்தன. அவற்றின் களமாக ஒன்றிரண்டு தவிர்த்தவற்றில் சேர, சோழ, பாண்டிய போர்களின் வரலாறோ அல்லது அவற்றை மையமாகக் கொண்ட புனைவு வரலாறுகளோ பேசப்படவில்லை.

## கலைஞர் காட்டிய உள்நாட்டு முரண்கள்

**‘திராவிட நாடு’** என்ற கூட்டாட்சிக் குடியரசினை நிறுவ போராடியவர்களுக்கு, அதன் பழைய முரண்கள், பகைகள், வெற்றிகள் பேசுபொருளாக இருக்க முடியாது. திராவிட முரண் எப்போதும் வடவரோடு மட்டுமே. அதனால்தான் திராவிட இயக்கத்தவர் பேச்சுகளில், எழுத்துகளில், சேர, சோழ, பாண்டிய அரசுகளின் வரலாற்று நாயகர்களாக **‘ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனும்’, ‘கனக- விஜயர் தலையில் கண்ணகிக்கு கல் சுமக்க வைத்த சேரமான் சேரலாதனும்’** புகழப்பட்டனர்.

கலைஞர் கூடுதலாக, நாட்டின் உள்முரண்களை, போராட்டங்களைக் களமாக்கிய திரைப்படங்களுக்கு ‘வள்ளுவன் குன்றம்’, ‘கொற்றவன் கோட்டை’, ‘வேலவன் குன்றம்’ போன்ற பல பொருள் பொதிந்த, அரசியல் குறியீடு கொண்ட நாட்டு அமைப்புகளை உருவாக்கினார். கலைஞரின் வரலாற்றுப் புனைவுகளின் மைய இழை, அண்டை நாட்டு ஆக்கிரமிப்பை விட , உள்நாட்டு மக்கள் விரோத ஆதிக்க சக்திகளின் மேலாதிக்கமே முன்னுரிமை பெற்றன.



அரசிளங்குமரியில் ஒரு வேளாண் குடிமகன், அரசதி காரத்துக்கு எதிராகப் போராடி வெல்வதுதான் கதைக்களம். இதுபோன்ற கதைக் களங்களே எம்.ஜி.ராமச்சந்திரன் என்ற நடிகரை பின்னாளில் ‘மக்கள் திலகம்’ ஆக்கியது.

## உழவர்களும் வாள்வீச்சும்

அரசிளங்குமரி திரைப்படத்திலும் வேலவன் குன்றத்து உழவர்களுக்கும், போர் வீரர்களுக்குமான உள்நாட்டுப் போரே மைய இழை. உழவர் குழுமத்தின் தலைவரும், மாபெரும் வாள் வீரரு மான குலசேகரன், அரச குமாரர்களுக்கு மட்டுமே வாள் பயிற்சி உள்ளிட்ட போர்ப் பயிற்சி வழங்கும் வீரநாயகத்திடம் வெற்றியை இழந்து, தனது மண்வெட்டிச் சின்னம் பொறிக்கப்பட்ட வாளை இழக்கிறார்.

அவரது மகன் முத்துக்குப்பம் அறிவழகன் அந்த வாளையும், தனது தங்கையின் பறிக்கப்பட்ட வாழ்வையும் மீட்கிறான். தங்கையை ஏமாற்றிக் கைவிட்டவனோ நாட்டின் தளபதி. அவனது பேராசை, இளவரசியை (ராஜசுலோச்சனா) மணந்து கொண்டு நாட்டை ஆள்வது. ஆனால், அரசும் அதிகாரமும் சாமன்யர்களின் போராட் டத்துக்கு முன்னால் தாக்குப் பிடிக்க முடிவதில்லை. இளவரசியே ஏழைக் குடியானவனின் காதலியாகி, இந்தப் போராட்டத்தில் துணை நிற்கிறாள்.

## உழவர்கள், எதிர் போர் வீரர்கள்

போர் என்பது உடனடியாக வெகுமக்கள் எதிர் காவல்துறை என்ற உள்ளீட்டைக் கொண்டி ருக்கிறது என்பதில் ஐயமேது மில்லை. உழவர் குழுவின் சின்னம் மண்வெட்டியைக் கையில் பிடித்தபடி நிற்கும் ஒரு வேளாண் குடி மகன். போர் வீரனுக்கான ஆயுதங்கள் தரித்தவன் அல்ல.

குலசேகரன் பெரிய வாள் வீரனாகப் பேசப் பட்டாலும், அவரது மகன் அறிவழகன் பலம் வாய்ந்தவன் என்றபோதும் வாள் போர் அறிந்தவன் இல்லை. அவன் நவீன கர்ணனாக, அரசக்குமாரர் களுக்கு மட்டுமே பயிற்றுவிக்கும் துரோணாச்சாரியார் வடிவமான வீரநாயகம் என்ற குருவிடம் அரசக்குமாரன் என்ற பொய் அறிமுகக் கடித உதவியில் ‘தில்குஷ்’ எனும் வடநாட்டு இளவரசனாகக் கற்கிறான்.

## அண்ணாவைக் கைவிடாத தம்பி

எம்.ஜி.ஆரின் ஆதர்சமான, பொருளற்ற வடமொழிப் பேச்சான இந்தி மொழி, விமர்சனத்துக்கு இடமளிக்கிறது. எம்.ஜி.ஆர் ‘ஆகாஷ்’, உதவியாளர் தங்கவேலு ‘வானம்’. ‘அகாஷ்வாணி’ என்றாகும் இணைவு விமர்சனத்துக்கு ஆளாகிறது. ‘இந்த விளங்காத மொழி தமிழோடு கலப்பதுதானே தகராறாக இருக்கிறது’ என்கிறார் தங்கவேலு.

திரைப்படத்தின் ஆரம்பக் காட்சியிலேயே வேளாண்குடி - அரண்மனை முரண் பேசப்படுகிறது. அறிவழகன் தங்கை அன்புக்கரசி (பத்மினி) தன்னைக் காதலிப்பதாகச் சொல்லும் அரண்மனை வீரனான வேலப்பனிடம் சொல்கிறாள், ‘அரண்மனை வாசிகள் ஆபத்து வரும் போதுதானே ஏழைகளின் உதவியை நாடுவார்கள்’ என்று. ‘உனக்கு அரண்மனைவாசிகளைப் பிடிக்காதா?’ எனக் கேட்கும் வேலப்பனிடம், ‘எனக்கு மட்டுமில்லை, என் அண்ணாவுக்கும் பிடிக்காது‘ என்று.

புனைவோ, நினைவோ கலைஞர் ‘அண்ணா’ எனும் ஆளுமையையும், அவர் தாங்கி நின்ற கொள்கைகள் மற்றும் லட்சியங்களையும் தொடர்ந்து பேசுபொருளாக்கும் ஒரு சிறு வாய்ப்பையும் விடுத்ததில்லை.

ஓயாமல் இறுதிமூச்சுள்ள வரை அண்ணாவின் புகழ் பாடிய அன்புத் தம்பி கலைஞர். 1961- ஆம் ஆண்டில் வெளியான இந்தத் திரைப்படத்தில் ‘அண்ணா’, ‘அண்ணன்‘ என்ற விளிப்புகள் ஒருநூறு முறையாவது ஒலிக்கிறது. கழகத்தின் உள்முரணில் அண்ணாவும்- சம்பத்தும் எதிர்நின்ற காலமது. கழகப் பொருளாளராக கலைஞர் அண்ணாவின் தளபதியாகச் செயல்பட்டார் என்பது குறித்துக் கொள்ள வேண்டியது.

## பாடம் சொன்ன வசனங்கள்

கலைஞரின் முத்தான வசனங்கள் ஒவ்வொரு காட்சியிலும் தெறித்து விழுவதைக் காணலாம். உயிர் துறப்பதற்கு முன் மன்னர், ‘எத்தனை போராடினாலும் இறுதி வெற்றி மரணத்துக்குத்தானே‘ எனத் தத்துவ விசாரம் பேசுகிறார்.

அறிவழகன், ‘ஏன் பாட்டாளிகள் நாடாளக் கூடாதா? சிம்மாசனம் அவர்களை ஏற்றுக் கொள்ளாதா?‘ என்று கேட்டு, அவனே பதில் சொல்கிறான், ‘நாசகாரர்களுக்கு அண்ணன் தந்தார் நல்ல பாடமென நாடு பேச வேண்டுமென்று’.

காதலர் உரையாடல்களில் கலைஞரின் வரிகள் கொஞ்சும். அன்புக்கரசி வேலப்பன் தலையில் முட்டியதும், ‘தலை, கல் போல உள்ளதே உள்ளத்தைப் போல மென்மையாக இல்லையே’ என்கிறாள். வேலப்பன், தன் முகத்தின் பாவத்தில் பாடம் கற்றுக் கொள்வதாகச் சொல்லுபவளிடம், ‘ஆண்கள் முகத்தில் பெண்கள் பாடம் கற்றுக் கொள்வது ஆபத்தானதாயிற்றே, அதாவது ஆண்களுக்கு’ என்கிறான்.

தன்னைக் கைவிட்டுப் பரிதவிக்கவிடும் கணவனிடம் கண்ணீரோடு பேசுகிறாள், ‘பரண் மீதமர்ந்திருந்த என்னை புலன் மாற்றிப் போட்டு மணம் புரிந்து வாழ்வதற்குக் கரம் பிடித்த நிகழ்ச்சியினை மறந்தீரோ? காலமெல்லாம் ஒன்றாக வாழ்வோமென்ற நெடுங்குறிப்பைக் காட்டி விட்டு மறந்தீரோ அத்தான்’ எனக் குமுறு கிறாள், அஞ்சுகமாக!

...படம் விரியும்

## ஆங்கிலத்தில் திராவிட இயக்க ஆய்வு!





1970-ஆம் ஆண்டுக்கு முன் தமிழ்நாட்டின் சமூகவியல் மற்றும் அரசியல் துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டதில் இரண்டு மேலை நாட்டு ஆய்வாளர்கள் முக்கியமானவர்கள். இருவரும் திராவிட இயக்கத்தின், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியை ஆய்வு செய்தவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. ஒருவர் மார்கரைட் ரோஸ் பார்னெட், மற்றொருவர் ராபர்ட் எல். ஹார்ட் கிரேவ். பின்னவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு மூப்பின் காரணமாகக் காலமானார்.

திராவிட இயக்கம், தி.மு.க. ஆகியவைக் குறித்து ஆங்கிலத்தில் வெளிவந்த முதல் புத்தகம் இவருடையது. கழகம் ஆட்சிக்கு வரும் முன்பே, 1965- ஆம் ஆண்டில் வெளியானது இவருடைய ‘தி திரவிடியன் மூவ்மென்ட் (The Dravidian Movement)’ என்ற நூல். அது அன்றைய மெட்ராஸ் மாகாணத்தின் பார்ப்பன ரல்லாத அரசியல் எழுச்சியில் தொடங்கி, நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், தி.க., தி.மு.க., காமராஜரின் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, உழைப்பாளர் கட்சி, காமன்வீல் கட்சி, ஈ.வி.கே. சம்பத்தின் தமிழ்த்தேசிய கட்சி, ம.பொ.சியின் தமிழரசுக் கழகம் என 1963 -ஆம் ஆண்டு வரை நடந்த அரசியல் நடவடிக்கைகளில் திராவிட இயக்கம் செலுத்திய தாக்கத்தை ஆய்வு செய்கிறது. இது தவிர்த்து, திராவிட இயக்கம் குறித்தும் தமிழ்நாட்டில் சாதிகள் குறித்தும் இவர் செய்த ஆய்வுகள் மிக முக்கியமானவை.

நீண்ட நாட்களாகப் பதிப்பில் இல்லாமலிருந்த இவரது ‘தி திரவிடியன் மூவ்மென்ட்’ புத்தகம், கடந்தாண்டு தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் முயற்சியால் மறுபதிப்புக் கண்டிருக்கிறது. திராவிட இயக்க வரலாற்றினை, கழக வரலாற்றினை மற்ற மொழிகளுக்கும் கொண்டு செல்லும் முயற்சிகளில் வேகம் கூட்டும் வகையில், இதுபோன்ற நூல்களைப் படிப்பதும், விவாதிப்பதும் காலத்தின் தேவையாகும்.

## :ப்ளாஷ்பேக்



### ஓட்டத்துக்குப் பரிசு!

1998-ஆம் ஆண்டு மத்திய சென்னை, ஆயிரம்விளக்குத் தொகுதியில் பொங்கல் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தளபதி அவர்கள் விழாவுக்கு வருகை தந்தார். 11 வயதே நிரம்பி இருந்த நான் அப்போது சிறுவர்களுக் கான ஓட்டப்பந்தயத்தில் முதலிடம் பிடித்திருந்தேன். தலைவர் தளபதி அவர்கள் கையில் பரிசுபெறும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது, கோப்பையை அவர் கையால் எடுக்கச் செல்கையில் இப்படம் எடுக்கப்பட்டது. இன்றைக்கு அதே பகுதியில் இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருப்பது பெருமையாக இருக்கிறது.



சுபாஷ் சந்திரபோஸ்

**-பா.சுபாஷ் சந்திரபோஸ்,**
**பகுதி துணை அமைப்பாளர்,**
**இளைஞர் அணி, ஆயிரம் விளக்கு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033 – 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஜனநாயகக் கேள்விகள்!

**1977-ஆம் ஆண்டு, பிப்ரவரி 10- ஆம் தேதி சென்னை கடற்கரையில், 5 லட்சம் தொண்டர்கள் திரண்ட பொதுக்கூட்டத்தில், கழகத்தின் தேர்தல் அறிக்கை வெளி யிடப்பட்டது. அதில், 1.மக்களாட்சி முறையா? அல்லது ஒரு கட்சியின் காட்டாட்சியா? 2.சுதந்திரமான நீதித்துறையா? அல்லது அச்சுறுத்தப்பட்ட நீதிதேவன் மயக்கமா? 3.சட்டத்தின் முன் அனைவரும் சமமா? அல்லது சட்டத்தின் ஆட்சியைச் சமாதி யாக்கும் ஆளுக்கு ஒரு நீதி என்கிற அநீதியா? 4. மக்களிடம் அமைதியும் உரிமை யும் தவழும் சூழலா? அல்லது அதிகார அராஜகமும், அரசியல் வஞ்சமும் தீர்க்கும் சூழலா? 5. ஜனநாயகமா? எதேச்சதிகாரமா? என மக்கள்முன் கேள்விகளை எழுப்பியது கழகம். அந்தக் கேள்விகள் இப்போதும் பொருத்தமாக உள்ளன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 213





எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.